விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 200 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 32, திங்கட்கிழமை 15.06.2015



அரையிறுதியில் ரத்வன்ஸ்கா

பக்கம் 28 இல்

# மைத்திரி அரசை எதிர்த்து போராடவும் தயங்கோம்

## 25 ஆண்டுகள் கடந்துவிட்ட தமது மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி வலி. வடக்கு மக்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 15

வலி. வடக்கு மக்களை அவரவர் நிலங்களில் விரைவில் முழுமையாகக் குடியமர்த்துங்கள். இல்லையேல், கடந்த அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடியதைப் போல் விரைவில் வீதியில் இறங்கிப் போராடத் தயங்க மாட்டோம்.

இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார், வலி. வடக்கு மீள் குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம்.

வலி. வடக்கு மக்கள் அவர்களது சொந்த நிலங்களைவிட்டு இடம் பெயர்ந்து இன்றுடன் 25 வருடங்கள் பூர்த்தியாகின்றன. அதனை முன்னிட்டு வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் ஓர் அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி தொடங்கிய அவல வாழ்வு, 26ஆவது ஆண்டிலும் நீடிக்கின்றது. 38 நலன்புரி நிலையங்களிலும், நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் அகதிகளாக எமது மக்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். போர் முடிந்து ஆறு ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் மக்களின் அகதி வாழ்வு முடிவுக்கு வரவில்லை.

எமது மக்கள் சகலவற்றையும் இழந்து சீரழிந்த நிலையில் இருக்கின்றார்கள். 20 சதுர அடி முகாம் வீடுகளில் அவர்களது 25 வருட வாழ்க்கையும் முடங்கிப் போயுள்ளது. வாழ்வாதாரம் இன்றி, தமது பிள்ளைகளின் எதிர்காலம் என்னவென்றே தெரியாத நிலையில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

விடிவு கிடைக்கும் என்று புதிய அரசுக்கு எங்கள் மக்கள் பக்.24

## பி.சி. படிவங்கள் மீளப்பெறுகை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பதிவுக்காக கிராம சேவையாளர்கள் ஊடாக விநியோகிக்கப்பட்ட பி.சி. படிவங்கள், இன்று முதல் தேர்தல்கள் திணைக்களத்தினால் மீளப் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த மே மாதம் 15ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரையில், பி.சி. படிவம் வீடு வீடாக விநியோகிக்கப்பட்டது. பி.சி. படிவங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் தேர்தல்கள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர்.

இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து, பி.சி. படிவங்கள் வீட்டு உரிமையாளர்களிடமிருந்து கிராம சேவையாளர்களினால் மீளப் பெறப்பட்டிருந்தன. இவ்வாறு மீளப் பெறப்பட்ட பி.சி. படிவங்கள் இன்று முதல் மாவட்டச் செயலகங்களிலுள்ள தேர்தல்கள் திணைக்களத்தினால் கிராம சேவையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப் பக்.24

## இராணுவ முகாம் ஒன்றைக்கூட வடக்கிலிருந்து அகற்றவில்லை

### 59 முகாம்களை மஹிந்ததான் அகற்றினார் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 15

தாம் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றதன் பின்னர் வடக்கிலிருந்து ஒரு இராணுவ முகாமைக்கூட அகற்றவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. அகற்றப்பட்ட அனைத்து முகாம்களும் மஹிந்தவின் காலத்திலேயே அகற்றப்பட்டன என்றும் அது தெரிவித்துள்ளது.

ஐ.தே.க. ஆட்சியிலேயே வடக்கிலிருந்து 59 இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்ட முயற்சிப்பதாகக் கூறும் ஐ.தே.க, அதற்கான பதிலாகவே முகாம்கள் எவற்றையும் தாம் அகற்றவில்லை பக்.24

## வவுனியாவிலும் எச் 1 என் 1 மக்களே மிக அவதானம்

வவுனியா, ஜூன் 15

"வவுனியாவிலும் 'இன்புளுவன்சா' வைரஸ் நோய் தாக்கம் உள்ளமையால் மக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும்" - என்று வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் கர்ப்பிணிப் பெண்ணொருவர் இறந்தமை தொடர்பாக பல்வேறு கருத்துகள் வெளிவந்த நிலையில், உண்மை நிலையை அறியும்பொருட்டு அவரிடம் கேட்டபோதே இவ்வாறு கூறினார். பக்.24

அமெரிக்க - சிறிலங்கா உறவுகள் தொடருமா? பக்கம் 16 இல்

## 600 பொலிஸாருக்கு நடந்த கதி தொடர்பில் விசாரணை ஆரம்பம்

### பொலிஸ் மா அதிபருக்கு ஆணைக்குழு அழைப்பாணை

கொழும்பு, ஜூன் 15

காணாமற்போனவர்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு, அம்பாறையில் 600 பொலிஸார் காணாமற்போனமை குறித்த தனது விசாரணைகளை ஆரம்பிக்க உள்ளது.

இதற்காக பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோனை எதிர்வரும் 22ஆம் திகதி ஆணைக் குழுவுக்கு வருகை தருமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டமையை ஆணைக்குழு வட்டாரங்கள் 'உதயன்' பத்திரிகையிடம் உறுதிப்படுத்தின.

இறுதிப் போரின்போது பல ஆயிரக் கணக்கானவர்கள் காணாமற் போயுள்ளனர். அரச புள்ளிவிவரங்களின் படி சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு என்ன நடந்தது என்று மன்னார் ஆயர் பக்.24

## மைத்திரி - சோமா இரகசியச் சந்திப்பு

### அதிர்ச்சியில் ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 15

ஜே.வி.பியிலிருந்து வெளியேறி புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் முழுவீச்சுடன் இறங்கியுள்ள சோமவன்ஸ அமரசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்றுமுன்தினம் இரகசியமாகச் சந்தித்துப் பேசியுள்ளார். இந்தச் சந்திப்பு ஜே.வி.பிக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தான் ஜனாதிபதியை சந்தித்த விடயத்தை நேற்று ஊடகங்களிடம் உறுதிப்படுத்திய சோமவன்ஸ அமரசிங்க, அங்கு என்ன பேசப்பட்டது என்ற தகவலை வெளியிடுவதற்கு மறுத்துவிட்டார்.

தான் புதிதாக ஆரம்பிக்கவுள்ள கட்சியைத் தங்கள் கூட்டணியில் இணைத்துக்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கும் நோக்கிலேயே ஜனாதிபதியை ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சந்தித்தார் பக்.24

தேர்தல் பரப்புரையில் இறங்கினார் ஹிலாரி

பக்கம் 13 இல்

## அரசியலுக்கு வரமாட்டேன்; கோத்தபாய திடீர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

நேரடி அரசியலில் தான் ஈடுபடப் போவதில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ திடீரென அறிவித்துள்ளார். விரைவில் நடக்க இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த அணி சார்பில் அவர் களமிறங்குவார் என்று பெரும் எதிர்பார்ப்பு இருந்து வந்த நிலையில் அவரது இந்த அறிவிப்பு வந்துள்ளது. பக்.24



பொதுத் தேர்தலும் போர்க்குற்ற அறிக்கையும்

பக்கம் 17 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்சாட்டை நிரூபிக்க அரசால் முடியாதுள்ளது

## முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 15
தற்போதைய அரசு கடந்த ஆட்சியின் அமைச்சர்களை திருடர்கள் என குற்றம் சுமத்தினாலும் அந்தக் குற்றங்களை இதுவரை நிரூபிக்க முடியாத நிலை காணப்படுவதாக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.
நாவலபிட்டி சிறிலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் கட்சி செயற்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:–
கடந்த காலத்தில் இருந்த அனைத்து அமைச்சர்களும் திருடர்கள் என குற்றம் சுமத்தப்பட்டுளள்து.
முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ சதொசவில் கடன் பெற்றுகொண்டார் என தெரிவித்து கைது செய்தனர்.பஸில் ராஜபக்ஷ மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
ஆனால் இன்று அந்த குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாத நிலை தற்போதைய அரசுக்குத் தோன்றியுள்ளது.
அவை அனைத்தும் அரசியல் பழிவாங்கல்களாகவே காணப்படுகின்றன.



ரணில் விக்ரமசிங்கவுக்கு இந்த நாட்டு மக்கள் ஆதரவு கொடுக்க வில்லை.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நாட்டு மக்கள் வாக்களித்தனர்.
ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சியமைப்பதற்கோ, ரணில் விக்ரமசிங்கவிற்கு பிரதமராவதற்கோ இந்நாட்டு மக்கள் வாக்க ளிக்கவில்லை.
எதிர்வரும்பொது தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக முன்வந்தால், எமது அரசொன்றை நிறுவமுடியும்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த 100 நாள் வேலைத் திட்டத்திற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினோம். தற்போது அந்த 100 நாளும் முடிவடைந்து விட்டது.
கிராமம், நகரம் இரண்டையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமெனில், எதிர்வரும் பொது தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசொன்றை அமைப்பதற்கு முடியும்.
அதற்காக சிறிலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஏனைய கட்சிகள் எதிர்வரும் பொது தேர்தலில் இணைந்து செயற்படுதல் வெற்றிக் கான அடித்தளமாக அமையும்.– என்றார். (ற)

### தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் விசேட பூசை

யாழ்ப்பாணம், ஜூன் 15
வலி.வடக்கிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து 25 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் இன்று விசேட பூசை இடம்பெறவுள்ளது என்று வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் அறிவித்துள்ளது.
வலி.வடக்கிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து இன்றுடன் 25 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. 26 ஆவது ஆண்டிலாவது, இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர வேண்டும். அதற்காக, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் இன்று விசேட பூசை வழிபாடு இடம்பெறவுள்ளது.
இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் இந்தப் பூசை வழிபாடுகளில், வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

### இம்மாத இறுதியில் சோமவன்ஸவின் புதிய கட்சி

கொழும்பு, ஜூன் 15
இந்த மாத இறுதியில் தாம் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளமையை சோமவன்ச அமரசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.
ஒற்றுமையான முன்னணி என்பதுடன் நாட்டின் முன்னிலையான கட்சியாக தமது கட்சி விளங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஜே.வி.பியை பொறுத்தவரையில் இது முற்போக்கு கட்சி என்ற அடையாளத்தை மாத்திரமே கொண்டுள்ளதாக சோமவன்ச தெரிவித்துள்ளார்.
இதேவேளை நாட்டை நாசப்படுத்த முயலும் ஒரு பிரிவினரால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆபத்து இருப்பதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ற)

### முழு நாடும் தற்போது தேர்தலை கோருகிறது

***மாதுளுவாவே சோபித தேரர் தெரிவிப்பு***

கொழும்பு, ஜூன் 15
அரசியல் கட்சிகள் மாத்திரமல்லாது முழு நாடும் தற்போது தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் எனக் கோருவதாக நியாயமான சமூகத்துக்கான மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.
நாட்டில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பில் 'பஞ்சர்' போடுவதால் எந்தப் பயனுமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தனியார் தொலைக்காட்சியில் நேற்றுமுன்தினம் இரவு ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசும் போதேஅவர் இதனைக்கூறியுள்ளார்.
அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல. தேர்தல் ஒன்றுக்கு செல்லுமாறு முழு நாடும் கோருகிறது. நாட்டின் தற்பேர்தைய அரசியலமைப்பில் ஜனாதிபதி ஆட்சி முறையை சரியாக இரத்துச் செய்து கொள்ள முடியவில்லை.
தேர்தல் ஒன்றுக்குச் சென்று புதிய அரசு ஒன்றை ஏற்படுத்தி, முழு நாடாளுமன்றத்தையும் தெரிவுக் குழுவாக மாற்றி புதிய அரசியலமைப்பை உருவாக்கும் வரை செல்ல வேண் டும்.– என்று அவர் தெரிவித் துள்ளார்.(ற)

### சகல விவரத்துடன் நோயாளருக்கு விலைபட்டியல்

கொழும்பு, ஜூன் 15
நோயாளிகளுக்கு முழுவிவரங்கள் குறிப்பிடப்பட்ட விலைப்பட்டியல் வழங்கப்பட வேண்டுமென அரசு அறிவித்துள்ளது.
தனியார் வைத்தியசாலைகள் மற்றும் தனியார் சிகிச்சை நிலையங்களுக்கு இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
குறிப்பாக தனியார் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளும் நோயாளிகளுக்கு முழு விவரங்களும் அடங்கிய விலைப்பட்டியல் வழங்கப்பட உள்ளது.
இந்த நடைமுறை எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக நுகர்வோர் பாதுகாப்புஅதிகாரசபைஅறிவித்துள்ளது.
இவ்வாறு விவரங்களை வழங்காத வைத்தியசாலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எம்.ஏ. டக்ளஸ் தெரிவித்துள்ளார்.
வழங்கப்பட்ட மருந்துப் பொருள்கள், பரிசோதனை விவரங்கள், கட்டணங்கள் உள்ளிட்ட சகல விவரங்களும் உள்ளடக்கி விலைப் பட்டியல் வழங்கப்பட உள்ளது.(ற)

### காலஞ்சென்ற தவிசாளரின் படம் வைப்பதில் முரண்பாடு

**வலி.தென்மேற்கு பிரதேச சபையில்**

மானிப்பாய், ஜூன் 15
வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் காலஞ்சென்ற எஸ்.சிவகுமாரின் ஞாபகார்த்தமாக அவரின் திருவுருவப்படத்தை காரியாலயத்தில் வைப்பதற்கு எடுத்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு காரணமாக படம் வைப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளராக வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு கடந்த இருவருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி வந்த அ.ஜெபநேசன் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக தவிசாளர் பதவியிலிருந்து விலகியிருந்தார்.
அதைத் தொடர்ந்து வாக்குகளின் அடிப்படையில் உப தவிசாளராக கடமையாற்றி வந்த எஸ்.சிவகுமார் கட்சியின் பரிந்துரையின் அடிப்படையில் உதவித்தேர்தல் ஆணையாளரினால் தவிசாளராக நியமிக்கப்பட்டார். கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக தவிசாளராக கடமையாற்றி வந்த இவர் சுகவீனம் காரணமாக மூன்று மாதங்களுக்கு முன் உயிரிழந்தார்.
இவரின் ஞாபகார்த்தமாக இவரின் படத்தை காரியாலயத்தில் வைப்பதற்கு முன் வந்துள்ள பிரதேச சபையின் தீர்மானம் சபையின் கூட்டத்தில் உறப்பினர்களின் பரிசீலனைக்கு விடப்பட்டது. இவரின் படத்தை காரியாலயத்தில் தொங்கவிடுவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த ஆளும் கட்சி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் கடந்த காலங்களில் உயிரிழந்தவர்களின் படங்களையும் வைக்க வேண்டும் என்று வாதாடினர்.
உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாட்டை அடுத்து காரியாலயத்தில் படம் வைப்பதில் தடங்கல் ஏற்பட்டுள் ளது.(ற–115)

### 20' நிறைவேற்றப்பட்டே தேர்தல் நடத்த வேண்டும்

**திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரர் தெரிவிப்பு**

கொழும்பு, ஜூன் 15
அரசியலமைப்புச் சட்டத்தின் 20 ஆவது திருத்தச் சட்டம் நிறை வேற்றப்பட்ட பின்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என மல்வத்து மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரர் தெரிவித் துள்ளார்.
அமைச்சரும் சபை முதல்வருமான லக்ஷமன் கிரியெல் லநேற்று மல்வத்து மஹா விகாரையில் மகாநாயக்க தேரரை சந்தித்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.
நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை முடக்கவே எதிர்க்கட்சிகள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்துள்ளதாக மகாநாயக்க தேரர் குறிப்பிட்டதாக அவரை சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் பேசிய அமைச்சர் லஷ்க்மன்கிரியெல்லகுறிப்பிட்டுள்ளார். (ற)

### சு.க. தலைமையிலான அரசு மைத்திரிக்கு தேவையில்லை

**மனுஷ நாணயக்கார எம்.பி. கூறுகின்றார்**

கொழும்பு, ஜூன் 15
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசு ஒன்றை அமைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உண்மையான தேவை இருப்பதை காண முடியவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.
முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர் கே.பி. அமரபாலவின் வீட்டில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்அக்மீமனதொகுதிஅதிகார சபைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.
தற்போதைய அரசு புத்தர் ஆசிர்வதிக்கட்டும் என்ற பெயர் பலகையை மாட்டிக்கொண்டு மாடுகளை கொல்கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–
பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.
20ஆவது திருத்தச் சட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை. அதற்கும் அந்தக் கட்சி தடைகளை ஏற்படுத்தி வருகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் ஒருவரை நியமித்து 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுமாறு நாங்கள் கூறுகிறோம். நாட்டுக்குள் பெரியளவில் கொள்ளைகள் நடந்து வருகின்றன.
ஊடக சுதந்திரம் என்பது வார்த்தைகளுக்குள் வரையறுக்கப்பட்டுள்ளது. அனைத்து துறைகளிலும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.அழகான சர்வாதிகாரமே நாட்டில் நடைமுறையில் உள்ளது. மத்திய வங்கி, காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சமையல் எரிவாயு நிறுவனங்களில் ஊழல், மோசடி அரசாள்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு கொள்ளை, ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடுகிறது என கடந்த காலத்தில் நாட்டுக்குள் நிலைப்பாடு ஒன்றை கட்டியெழுப்பினர். எனினும் அது தற்போது புஷ்வாணமாகியுள்ளது.– என்றார். (ற)

### புதிய நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் ‘20’

**எதிர்வு கூறுகின்றார் கம்மன்பில**

கொழும்பு, ஜூன் 15
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில கோரியுள்ளார்.
ஒரு நாட்டு நாடாளுமன்றத்தில் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுமானால், ஏனைய விடயங்களைக் காட்டிலும் அதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அதேவேளை 20ஆவது திருத்தம் நாடாளுமன்ற விவாதத்துக்கு வர இன்னும் 6 வாரங்களாவது செல்லும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
இந்தநிலையில் புதிய நாடாளுமன்றத்திலேயே அதனை நிறைவேற்ற முடியும் என்றும் அவர் எதிர்வு கூறியுள்ளார்.
நடைமுறை அரசு தொடர்ந்தும் ஆட்சியில் இருக்குமானால் அது பயங்கரமான நிலையை தோற்றுவிக்கும் என்று கம்மன்பில தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணைக்குழு விசாரணைகள் திருமலையில்

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது அடுத்த கட்ட அமர்வை திருகோண மலையில் நடத்தவுள்ளது. இதன்படி எதிர்வரும் 27ஆம் திகதிமுதல் 30ஆம் திகதிவரை திருமலையில் பல இடங்களில் சாட்சியங்கள் திரட்டப் படவுள்ளன. இந்தத் தகவலை ஆணைக்குழுவின் இணைப்புச் செயலாளர் ஒருவர் நேற்று உறுதிப் படுத்தினார்.

அத்துடன், திருகோணமலை மாவட்டத்தில் ஏற்கனவே பெறப்பட்ட சாட்சியங்களிலுள்ள சந்தேகத் தன்மை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பிடம் இதன்போது மேற்படி ஆணைக்குழு கேள்வி எழுப்பவுள்ளது என அறியமுடிகிறது.

அதேவேளை, மேற்படி ஆணைக் குழுவின் ஆயுட்காலம் அடுத்த மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில், அதன் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற நீதியரசர் மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான மூவரடங்கிய இந்த ஆணைக்குழு உள்ளக போர்க்குற்ற விசாரணையையும் கடந்த ஒரு வருடங்களாக முன்னெடுத்து இது தொடர்பில் இறுதி அறிக்கையையும் தயாரித்துள்ளது. இந்த அறிக்கை அடுத்த மாத இறுதியில் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (ற-சி)

## மாநகர சபை செயற்பாடுகளை விசாரிக்க ஓய்வுநிலை நீதிபதி

அச்சுவேலி, ஜூன் 15

யாழ்ப்பாண மாநகர சபையின் கடந்தகால செயற்பாடுகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஓய்வுநிலை நீதிபதி நியமிக்கப் பட்டுள்ளார்.

யாழ். மாநகரசபையின் முதல்வராக திருமதி யோகேஸ்வரி பற்குணராசா பதவி வகித்த காலப் பகுதியில் பல்வேறு முறை கேடுகள் மற்றும் சட்டவிரோத சம்பவங்கள் நடைபெற்றன எனக் குற்றச்சாட்டுக்கள் கிளம்பியிருந்தன.

வடக்கு மாகாண சபையிலும் யாழ். மாநகரசபையின் முறை கேடுகள் தொடர்பாக கேள்விகள் எழுப்பப் பட்டிருந்தன. மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் அ. பரஞ்சோதி யாழ். மாநகர சபையில் நடத்தப்பட்ட முறைகேடுகள் என 12 சம்பவங்களைப் பட்டியலிட்டு முதலமைச்சரிடம் விசாரணை நடத்துமாறு கோரியிருந்தார்.

இந்தநிலையிலேயே விசாரணை நடத்துவதற்கு ஓய்வுநிலை நீதிபதி இ. வசந்த சேனன் நியமிக்கப் பட்டுள்ளார். அவர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-11)

## வருடாந்த மஹோற்சவம்

ஆவரங்கால் சிவன்கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

20ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக் காலத்தில் தினசரி மாலை 7.00 மணிக்கு சமயச் சொற்பொழிவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-11)

# சு.கவுக்குள் பனிப்போர்

### பிரதமர் வேட்பாளர் யார் என்பதில்

கொழும்பு, ஜூன் 15

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்ற விடயம் மஹிந்த மற்றும் மைத்திரி ஆதரவு தரப்பினரிடையே கடும் மோதலை ஏற்படுத்தியுள்ள நிலையில், பிரதமர் வேட்பாளர் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தற்போது பனிப்போர் இடம் பெற்றுவருவதாகக் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மட்டுமன்றி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பிரதமர் கனவால் இரண்டாகப் பிளவடையும் அபாயத்தை எதிர்நோக்கி வருவதாகவும், இதனால் சிறந்த முடிவொன்றை எடுப்பது குறித்து ஜனாதிபதி மைத்திரி ஆலோசித்து வருவதாகவும் குறிப் பிடப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான டாக்டர் ராஜித சேனாரட்ன ஆகிய இருவருமே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிரதமர் வேட்பாளராகும் எதிர்பார்ப்புடன் இருக்கின்றதாகக் கட்சித் தகவல்களினூடாக அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை களமிறக்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதிபடத் தெரிவித்துள்ள நிலையிலும், மஹிந்ததான் பிரதமர் வேட்பாளராகக் களமிறக்கப் படவேண்டும் என அவர் ஆதரவு தரப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தன, திஸ்ஸ விதாரண, பந்துல குணவர்த்தன, விமல் வீரவன்ஸ உள்ளிட்டோர் வலியுறுத்தி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி, ஐ.ம.சு. முன்னணியில் மஹிந்தவுக்கு இடமின்றேல், அதற்கு எதிராக புதிய கூட்டணி அமைத்துக் களமிறங்க உள்ளதாகவும் அச்சுறுத்துகின்றனர். மேலும், நிமல் சிறிபால டி சில்வா எதிர்க் கட்சித் தலைவராக பதவி வகிப்பதற்கே கடும் எதிர்ப்பு வெளியிட்ட மேற்படி தரப்பினர், பிரதமர் வேட்பாளராக அவரைக் களமிறக்குவதற்கு ஒருபோதும் இணங்கமாட் டார்கள்.

இருப்பினும், பிரதமர் வேட்பாளராகக் களமிறங்கும் எதிர்பார்ப்பு எதிர்க் கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் இருப்பதாகவும், அதுமட்டுமன்றி, மைத்திரியை ஜனாதிபதியாக்க ஆரம்பம் முதல் இறுதிவரை செயற்பட்டு, தற்போதும் அவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவரும் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் பிரதமர் வேட்பாளராகும் எதிர்பார்ப்பில் இருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இதனால் பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்து முடிவெடுப்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சிக்கலை எதிர்கொண் டுள்ளதாகவும் இந்த விவகாரத்தால் கட்சிக்குள் பிளவுகள் – சிக்கல்கள் ஏற்படாத வகையில் முடிவொன்றை எடுப்பது குறித்து ஜனாதிபதி மைத்திரி அதிக கவனஞ்செலுத்தி வருவதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

# தமரா குணநாயகம் புலிக்கு சார்பானவர்

### அரசு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 15

இலங்கைக்கான ஜெனீவாவின் முன்னாள் வதிவிடப்பிரதிநிதி தமரா குணநாயகம் விடுதலைப் புலிகளுக்கு சார்பாக செயற்பட்டார் என அரசால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதற்கு நான்கு காரணங்கள் முன் வைக்க முடியும் என தெரிவித்த வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

முன்னாள் ராஜதந்திரி ரி.டி.எஸ்.ஏ. திஸாநாயக்காவின் நூல் ஒன்றில் தமரா குணநாயகம்,ஜெனிவாவை வதிவிடமாகக்கொண்ட ஈழம் பிரசாரகர் என்று தெரிவித்தமை, விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய தமிழ் தகவல் மையத்துடன் உறவை பேணியமை,முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன விடுதலைப் புலிகளின் முகவர் என தெரிவித்தமை,1980ஆண்டுகளில் விடுதலைப் புலிகளின் முக்கிய செயற்பாட்டாளராக செயற்பட்டமை போன்ற காரணங்களை அடிப்படையாக கொண்டே இவர் விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர் என்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப் பட்டது. (த)

# தேர்தலுக்காக தள்ளிப் போகின்றது எரிபொருள்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 15

எரிபொருள் விநியோகத்தால், கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் 4 பில்லியன் ரூபா நட்டத்தை எதிர் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுரேன் படகொட, இருப்பினும் இன்னமும் 3 மாதங்களுக்கு எரிபொருள் விலை அதிகரிப்பை மேற்கொள்ளப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

லங்கா ஐ.ஓ.சீ மற்றும் கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் ஆகியன எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளன. இவ்வாறான கோரிக்கைகள் குறித்து விலை சூத்திரம் தயாரிக்கப்பட வேண்டும். அதனுடன் பொதுமக்களின் தேவை குறித்தும் ஆராயப்பட வேண்டும்.

எரிபொருள் விநியோகத்தில் கனிய எண்ணெய் கூட்டுதாபனத்திற்கு 4 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது. எனினும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்று அமைச்சின் செயலாளர் சுரேன் படகொட சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5)



அம்பாறை, வாவின்ன பிரதேசத்தில் அநாதரவாகக் கிடந்த சிறுத்தைக் குட்டியொன்றை, அம்பாறை வனவிலங்கு சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். 2 வயதுடைய இந்த சிறுத்தைக் குட்டியை மீண்டும் அம்பாறை வனப்பூங்காவில் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அம்பாறை, கொனாகொல்ல பிரதேச வீதியில் வாகனமொன்றில் மோதிய நிலையிலேயே இந்த சிறுத்தைக்குட்டி மீட்கப்பட்டுள்ளது என வனவிலங்கு சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மஹிந்த களமிறங்கினால் சு.கவுக்கு படுதோல்வியே

### போட்டுத் தாக்குகிறார் எஸ்.பி; முன்னோக்கி வருமாறு சமலுக்கும் அழைப்பு

கொழும்பு, ஜூன் 15

மஹிந்த பிரதமர் வேட்பாளரானால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வியடையும். ஐக்கிய தேசியக் கட்சி மாபெரும் வெற்றி பெறும். சிறுபான்மைக் கட்சிகள் எதுவும் எம்முடன் இணையாது எனத் தெரிவித்துள்ள கிராம பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்குக் கிடைத்த 58 இலட்சம் வாக்குகள் தற்போது 48 இலட்சமாகக் குறைந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.



அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிட மஹிந்தவுக்கு இடமளிக்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இந்நிலையில், நாமல் ராஜபக்ஷ, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் முன்னோக்கி வரவேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்ட கருத்துகளை வெளியிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:–

"கடந்த தேர்தலில் நாம் தோல்வியடைந்தோம்.இதுபற்றி விளக்கமொன்றைக் குறிப்பிடவேண்டியுள்ளது. கடந்த தேர்தலில் சிறுபான்மை இனம் என்று கூறுவதைவிட, சிறுபான்மை சமயங்களின் வாக்குகள் எமக்கு முன்னரைப்போல கிடைக்கவில்லை. இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க, பௌத்த அனைத்து சமயங்களைச் சார்ந்தவர்களின் வாக்குகள் கடந்த முறையைவிட இம்முறை குறைவாகவே கிடைத்தன.

இவ்வாறான நிலையில், மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக்க வேண்டும் என்று கூறுவது தவறாகும். அவர் பிரதமர் வேட்பாளராக வந்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வியடையும். அதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மஹிந்த வந்தால் சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றுகூட எம்முடன் இணையாது. நான் கூறியது போன்று பன்னிரண்டரை இலட்சம் வாக்குகள் எமக்குக் கிடைக்காது. அப்படியாயின், நாம் எவ்வாறு வெற்றிபெறுவது? நாம் தோல்வியடைந்துதான் தேர்தலுக்குச் செல்கின்றோம் என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

மஹிந்த இல்லாவிட்டால் அடுத்த தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற கருத்து கிராமங்களிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்களிடம் உள்ளது. எமது கட்சியின் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் இன்னும் மஹிந்தவுடன்தான் இருக்கின்றனர். ஆனால், மஹிந்தவுக்குக் கிடைத்த 58 இலட்சம் வாக்குகள் தற்போது 48 இலட்சமாகக் குறைந்துள்ளன. இதில் ஒரு பிரிவினர்தான் மஹிந்த வேண்டும் என்கின்றனர். இவர்களால் வெற்றிபெற முடியாது. சிறுபான்மை மக்களின் வாக்குகளை இவர்களால் பெறமுடியாது.

மஹிந்தவுக்குத் தேர்தலில் போட்டியிடமுடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்தானே. மஹிந்தவின் உதவிகளும், ஆலோசனைகளும் அவசியம். நாமல் ராஜபக்ஷ என்பவர் நல்ல எதிர்காலம் உள்ள திறமையான இளைஞர். நாம் அவருடன் இந்தப் பயணத்தைத் தொடரவேண்டும். நாமலைப் போல சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் முன்னோக்கி வரவேண்டும்" – என்று தெரிவித்துள்ளார்.(ற-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகள் இல்லையேல் சாகும்வரை போராட்டம்

## கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் திட்டவட்டம்



கிளிநொச்சி, ஜூன் 15

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களிலுள்ள 600 ஏக்கர் வயல் நிலங்கள் தமக்கு கிடைக்காவிடில் சாகும்வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

'முல்லைத்தீவு, மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடமாடும் சேவையொன்று கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் நடைபெற்றது.

சனிக்கிழமை நடைபெற்ற நடமாடும் சேவைக்கு வந்திருந்த மேற்படி மூன்று கிராமங்களையும் சார்ந்த 600 ஏக்கருக்கு சொந்தமான மக்களுக்கும் காணி ஆணையாளரின் மேலதிக செயலாளர் எல்.வி.எஸ்.வி.தயாரத்னவுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்த கிராம மக்கள்:-

நாங்கள் காலாகாலமாக வயல் செய்துவந்த நிலங்கள் தற்போது மகாவலித்திட்டம் என்ற பெயரில் சிங்கள மக்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. உரிமையாளர்கள் நாங்கள் இருக்கும் போது மகாவலித் திட்டம் என்ற பெயரில் எவ்வாறு சிங்கள மக்களுக்கு வழங்கப் பட்டது?. மகாவலி திட்டத்தில் தமிழர்களுக்கு காணி வழங்க முடியாதது ஏன்? எங்களுடைய அன்றாட வாழ்வா தாரத்தை உயர்த்தக் கூடிய இந்த விவசாய வயல் நிலங்கள் எமக்கு கிடைக்காவிட்டால் நீதி கிடைக் கும்வரை உண்ணாவிரதம் இருப் போம். - என்றனர்.

இதற்கு பதிலளித்த மேலதிக செயலாளர்:-

இது தொடர்பாக மகாவலி அதிகாரிகளுக்கு அறியப்படுத்தியிருக்கிறோம். நாங்கள் அவர்களுடன் நேரடியாக சந்திப்பொன்றை ஒழுங்கு செய்து ஒருமாத காலத்துக்குள் உரிய பதிலொன்றை பெற்றுத் தருகிறோம். - என்று தெரிவித்துள்ளார்.(ற)

# றோட்டரிக் கழகத்தால் வாழ்வாதார உதவிகள்

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன



கிளிநொச்சி, ஜூன் 15

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட - பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் நேற்று றோட்டரிக் கழகத்தால் வழங்கப்பட்டன. யாழ்.றோட்டரிக் கழகத் தலைவர் அனுராஜ் தலைமையில் இந்த நிகழ்வு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

100 பேருக்கு வாழ்வாதார உதவியாகத் தையல் இயந்திரங்களும், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்., கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதி ராசா, ஈ.சரவணபவன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், உறுப்பினர் து. ரவிகரன், முன்னாள் உறுப்பினர் மேரிகமலா, உதவித்தொகைகளை பெற வந்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள், றோட்டரிக் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-21)

## புதூர் நாதம்பிரான் வருடாந்த பொங்கல்

வவுனியா, ஜூன் 15

வவுனியா வடக்கு புளியங்குளம் புதூர் நாதம்பிரான்ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெற வுள்ளது. காலையில் விசேட பூசை கள் இடம் பெற்று இரவு பொங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளது. ஆலயத்துக்குச் செல்லும் அடியார்கள் நலன்கருதி வவுனியாவிலிருந்தும் கிளிநொச்சியிலிருந் தும் போக்கு வரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.(ற-421)



*வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா திருப்பலியும், திருச்செரூப பவனியும் நேற்றுமுன்தினம் காலை குருமுதல்வர் விக்ரர் சோசை தலைமையில் நடைபெற்றது. திருச்சொரூப பவனி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி ஹொறவப் பொத்தான வீதி வழியாக சென்று மறுபடியும் ஆலயத்தை வந்தடைந்தது. அதில் இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி எஸ். சத்தியராஜ், வேப்பங்குளம் தூய சூசையப்பர் ஆலய பங்குத் தந்தை லக்ரன் டி சில்வா, அமலமரித்தியாகிகள் சபைக் குருக்கள் மற்றும் அருட்சகோதரிகள், பங்கு மக்கள், அயல் பங்கு மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)*

# வவுனியா வைத்தியசாலையில் குருதிக் கொடையாளர் தினம்

## கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது



வவுனியா, ஜூன் 15

வவுனியா பொது வைத்தியசாலை இரத்த வங்கியின் ஏற்பாட்டில் குருதிக் கொடையாளர் தினம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் கே.அகிலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வைத்தியர் எஸ்.சிவமோகன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் இரத்த வங்கி வைத்திய நிபுணர் ஆர் எம் .குணரட்ண ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் குருதி கொடை வழங்கும் முறை மற்றும் பயன்பாடுபற்றி விளக்கம் அளிக்கபட்டது. 10 தடவைகளுக்கு மேல் குருதி வழங்கிய 140 பேர் கௌரவிக்கபட்டனர். இதில் 80 குருதி கொடையாளர்கள், 60 இரத்த முகாம் ஒழுங்கமைப்பாளர்கள், 30 தடவைக்கு மேல் குருதி வழங்கிய ஆர் .ஜி.எஸ் ராஜ பக்ஷ மற்றும் குணரட்ண, 15 தடவைக்கு மேல் இரத்தமுகாம் ஒழுங்கு செய்தவர்களான குசும் காந்தி, விசேட அதிரடிப் படையினர் சதீஸ்குமார், ஜனாதிபதி சாரணிய மன்றம்- வவுனியா ஆகியோர் கௌரவிக்கப்பட்டவர்களில் அடங்குவர். (ற-402)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 15

ஆவரங்கால் சிவன் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு 'கம்பராமாயணம்' எனும் தொனிப் பொருளில் சிறப்பு சொற்பொழிவு இன்று முதல் தொடர்ந்து 10 நாள்களுக்கு இடம்பெறவுள்ளது. தினமும் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் இச் சிறப்பு சொற்பொழிவை பண்டிதர் பொன் சுகந்தன் நிகழ்த்தவுள்ளார். (ற-109)

## சமூக நல யாசகம் எதிர்வரும் ஞாயிறன்று

மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தின் திறப்பு விழா எதிர்வரும் இருபத் தொட்டாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறவுள்ளது. ஆன்மீகக் குரு மேல்மருவத்தூர் அருள்மிகு பங்காரு அடிகளாரின் அருளாசியுடன் நடைபெற உள்ள மேற்படி விழாவில் சமூக நல யாசகமும் இடம்பெறும்.

கல்வியங்காடு ஜி.பி.எஸ். வீதியில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் மேற்படி நிகழ்வு அடிகளாரின் பவள விழா ஆண்டில் நடைபெறும் சிறப்பு நிகழ்வாகும். (அ)

# 54ஆவது ஆண்டு நிறைவையிட்டு மக்கள் வங்கியில் குருதிக்கொடை

வலி.வடக்கு, ஜூன் 15

மக்கள் வங்கியின் 54ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் குருதிக்கொடை வழங்கப்பட்டது.

இலங்கை வங்கிகளின் ஊழியர் சங்க மக்கள் வங்கி கிளையின் ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த இரத்தான நிகழ்வில் வங்கி வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் என சுமார் [illegible] பத்தைந்துக்கும் மேற்ப[illegible] குருதிக்கொடை வழங்கினார்கள்.

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் ரி.சுசீந்திரன், முன்னாள் பிராந்திய முகாமையாளர் கே.பத்மநாதன் மற்றும் யாழ்ப்பாணம் மக்கள் வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள் ஊழியர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி ஆர்.ராமவித்தியா தலைமையிலான குழுவினர் குருதிக் கொடை நிகழ்வை வழிநடத்தினர்.

குருதிக்கொடை வழங்கியவர்க[illegible] சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் பயன்தரு பழமரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ற-86)



*சர்வதேச குருதிகொடையாளர் தினத்தை முன்னிட்டு அச்சுவேலி மத்திய விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட உயிர் துளி - குருதிக் கொடை முகாமில் அச்சுவேலி பிரதேசத்தை சேர்ந்த 34 பேர் பங்கு பற்றி குருதிக் கொடை வழங்கினர். (ற)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேறியோரால் சரணாலயத்துக்கு ஆபத்தில்லை

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஜனாதிபதிக்கு கடிதம்

மன்னார், ஜூன் 15

மன்னார் முசலியில் மீள்குடியேறியிருக்கின்ற மக்கள் ஒருபோதும் சரணாலயக் காடுகளை அழிக்கவில்லை என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

வில்பத்து விவகாரம் தொடர்பில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வெள்ளிக்கிழமை அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் எம்.ஆர். நஜா முஹம்மத் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள மேற்படிக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்த நாட்டின் இயற்கைவளங்கள் எமது தேசத்தின் தேசிய சொத்துக்களாகும், அவற்றைப் பேணிப்பாதுகாத்து எமது அடுத்த தலைமுறையினருக்காக கையளிப்பதும் எமது கடப்பாடாகும். இதுவிடயத்தில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. கடந்த அரசு காலத்திலும் அதற்கு முந்திய காலப்பகுதியிலும் குறிப்பாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள காடுகள் போரின் காரணமாகவும் பாதுகாப்புத் தேவைகளுக்காகவும் இன்னோரன்ன அபிவிருத்தித் தேவைகளுக்காகவும் அழிக்கப்பட்டன.

குறிப்பாக கடந்த அரசில் பதவி வகித்த பல அமைச்சர்களும் உயர் பதவிகளில் இருந்த பலரும் வடக்கிலும் ஏனைய பிரதேசங்களிலும் மரங்களை வெட்டி காடழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை அவ்வப் பிரதேசவாசிகளினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இந்த தேசத்தின் எல்லாப் பிரதேசங்களிலும் இடம்பெறுகின்ற இயற்கை வள அழிப்பு நடவடிக்கைகளும் நிறுத்தப்படவேண்டும் அதனூடாக இந்தத் தேசத்தின் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

**மக்களின் பூர்வீகக் காணிகளும் அவர்களுக்கு மீண் டும் கையளிக்கப்படவேண்டும். அத்தோடு அந்த மக்களின் மீள்குடியேற்றத் தேவைகளை ஈடுசெய்து கொடுக்கவும் அரசு முன்வரவேண்டும்.**

இது நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் மிகவும் அடிப்படையான நிலைப்பாடென்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். வில்பத்து சரணாலயத்துக்குள் வடக்கு முஸ்லிம்களின் குடியேற்றங்கள் இடம்பெற்றிருப்பதாக ஒரு கருத்து ஊடகங்கள் வாயிலாக முன்வைக்கப்பட்டு இலங்கையின் அரசியலில் சூடான விடயமாக மாறியிருக்கின்றது. இவ்வாறான நிலையில் தாங்களும் வில்பத்து சரணாலயம் குடியேற்றங்களுக்காக அழிக்கப்பட்டிருப்பதாக ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றீர்கள்.

மன்னார், மறிச்சுக்கட்டி கிராமம் முஸ்லிம்களின் பூர்வீக வாழிடம், அதேபோன்று மன்னார், முள்ளிக்குளம் கிராமமும் அப்பகுதியின் தமிழ் மக்களின் பூர்வீக கிராமமாகும். இப்பகுதிகளில் கணிசமான பிரதேசம் இராணுவத் தேவைக்காக கையகப்படுத்தப்பட்டிருக்கின்றது. எஞ்சிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறியிருக்கின்றார்கள். இவ்வாறு மக்கள் குடியேறிய பகுதிகள் ஒருபோதும் வில்பத்து வன விலங்குகள் சரணாலயத்துக்கு உரித்தான காணிகளாக இருந்ததில்லை என்பதை இவ்விடத்தில் மிகவும் உறுதிபடக் கூறிக் கொள்கின்றோம்.

எனவே அவ்வாறு மீள்குடியேறியிருக்கின்ற மக்களின் காணிகள் சரணாலயக் காடுகளை அழித்தே பெறப்பட்டவை என்ற கருத்து தவறானது என்பதை தங்களது மேலான கவனத்துக்கு கொண்டு வருகிறோம். அதுமாத்திரமன்றி, இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற அந்த மக்களின் பூர்வீகக் காணிகளும் அவர்களுக்கு மீண்டும் கையளிக்கப்படவேண்டும். அத்தோடு அந்த மக்களின் மீள்குடியேற்றத் தேவைகளை ஈடுசெய்து கொடுக்கவும் அரசு முன்வரவேண்டும்.

வில்பத்து விவகாரத்தை மையப்படுத்தி இனவாத கருத்துக்களை வெளியிடுவதையும் அல்லது தமக்கான சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரல்களை நடைமுறைப்படுத்த முயல்வதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறானவர்களின் விடயத்தில் தாங்கள் முன்னெச்சரிக்கையோடு செயற்படுவீர்கள் என்றும் நம்புகின்றோம். இவ்வாறான இனவாத ரீதியாக குறித்த விடயத்தை அணுகுவதும் அல்லது தமது சொந்த அரசியல் நிகழ்ச்சித் திட்டத்துக்காக குறித்த விடயத்தை அணுகுவதும் நீண்டகால இடப்பெயர்வின் பின்னர் அவர்களது சொந்த மண்ணிலே குடியேறுகின்ற மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்குகின்ற அல்லது அவர்களை அச்சுறுத்துகின்ற செயற்பாடாகவே அமைந்திருக்கும். இந்த தேசத்தில் நல்லாட்சி அரசில் இத்தகைய சமூகவிரோத நடவடிக்கைகளுக்கு தாங்கள் இடமளிக்கமாட்டீர்கள் எனவும் நம்புகின்றோம்.

வில்பத்து விடயத்தில் தாங்கள் முன்வைத்த கருத்துக்களை மீளாய்வு செய்து உண்மை நிலைவரத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகிறோம். மேற்படி விடயத்தில் தாங்கள் முன்னெடுக்கின்ற செயற்பாடுகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்புக்களை நல்குவதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்பதையும் தங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம்.– என்றுள்ளது. (ற)

# முஸ்லிம் மக்களுக்கு என தனி மாவட்டம் வேண்டும்

## பஷீர் சேகுதாவூத் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் சிங்களவர்களுக்கென 18 மாவட்டங்களும் தமிழர்களுக்கென 7 மாவட்டங்களும் இருக்கின்றன. ஆனால், இந்த நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கென ஒரு மாவட்டம் ஏன் இருக்கக் கூடாது என முன் னாள் உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான பஷீர் சேகு தாவூத் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர் மாகாண மாக்கார் வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஓய்வுபெற்ற அதிபர் கே. காலிதீனின் சேவை நலன் பாராட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:-

30 ஆண்டு காலமாக முன்வைக்கப்பட்டு வந்த கோரிக்கைகள் இன்று என்ன நிலைமையில் இருக்கின்றன என்பதைச் சிந்திக்கின்ற ஒரு கால கட்டமாக இது இருக்கின்றது. முஸ்லிம்களின் தனி மாகாணம், தென் கிழக்கு அலகு, முஸ்லிம் தேசப் பிரகடனம், கரையோர மாவட்டம் என்ற 4 கோரிக்கைகளுக்கும் என்ன நடந்தது? கால் நூற்றாண்டு கடந்த முஸ்லிம்களின் தனித்துவக் கோரிக்கை வலுவிழந்து குப்பைக் கூடைக்குள் போய்விடக் கூடாது என்பதை எச்சரிப்பதற்காக நான் பேசும் சந்தர்ப்பங்கள் அனைத்தையும்அதற்காகப் பயன்படுத்துகின்றேன். இந்தக் கோரிக்கையில் ஒன்றையேனும் வென்றெடுப்பதற்கான போராட்டங்கள் முன்னெடுப்புக்கள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கின் றனவா என்றால் ஒன்றும் நடக்கவில்லை. அவ்வாறு ஒன்றுமே நடக்கவில்லையாயின் வெறும் வெற்றிக் கோஷங்களாகவும், வெற்றுக் கோஷங்களாகவும் மாறி ஒரு அங்குல நிலத்துக்கேனும் முஸ்லிம்கள் சொந்தக்காரர்களாக இல்லாத நிலை வரும். தற்போதைய போக்கில் தனிமாகாணக் கோரிக்கைக்கு வாய்ப்பே இல்லை. வடகிழக்கிலே வாழ்கின்ற முஸ்லிம்களை இணைக்கும் நிலத் தொடர்பற்ற அகன்ற தென் கிழக்கு அலகு என்கின்ற தீர்மானத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எட்டியது. அதனையும் தற்போதைய சூழ்நிலையில் கோரக் கூடிய வாய்ப்பில்லை.

தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட முஸ்லிம் தேசப் பிரகடனமும் சாத்தியப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் தற்போதைய சூழ்நிலையில் சிறிதேனும் இல்லை. எனவே, அம்பாறையிலே முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட, தமிழ் பேசும் மக்களுக்கான கரையோர மாவட்டமென்பது மட்டும்தான் தற்போதைய சூழ்நிலையில் சாத்தியப்படக் கூடியதொன்றாக இருக்கின்றது. அதுதான் நியாயப்படுத்தலுக்கான நியாயமான உயிரோட்டமான போராட்டமாக இருக்கின்றது.

முஸ்லிம்களின் அரசியல் பலத்தினால் அரசியல் பேரம் பேசும் சக்தியால் வென்றெடுக்கக் கூடிய நியாயமான போராட்டமாக, அம்பாறை கரையோர மாவட்டக் கோரிக்கையைப் பார்க்க முடியும். முன்னொரு போது அம்பாறை கரையோர மாவட்டக் கோரிக்கை என்பது முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினை அல்ல என்று சொன்னவன் நான். ஆனால், தற்போதைய யதார்த்தத்தை உணர்ந்துள்ள நிலையில் அந்த அம்பாறை கரையோர மாவட்டத்தை வென்றெடுக்க வேண்டியது சமகாலத் தேவையாக உள்ளது.

இந்த விடயத்தை சிங்களவர்களும் தமிழர்களும் ஏற்றுக்கொள்வதற்கான நியாயப்படுத்தலை முன்னிலைப்படுத்த வேண்டிய தேவை முஸ்லிம் சமுதாயத்துக்கு உள்ளது. இன்றுள்ள சூழ்நிலையிலே தேசிய அரசியல் புதிய பரிமாண மாற்றம் பெற்றிருக்கின்றது. அதன் அடிப் படையில், முஸ்லிம் அரசியலின் தேசிய அரசியல் பரிமாணத்திலும் நாங்கள் மாற்றம் கொண்டு வர வேண்டிய அவசியத்தில் இருக்கின்றோம். எனவே அம்பாறை கரையோர மாவட்டக் கோரிக்கை என்பது முஸ்லிம்களுடைய தேசிய அரசியலின் ஓர் அங்கம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கோரிக்கையையும் வெறுங் கோஷங்களோடு மாத்திரம் விட்டு விடாது, அதனை அடைய தொடர்ச்சியான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனடிப்படையில் அம்பாறை கரையோர மாவட்டக் கோரிக்கைக்கான நியாயப்படுத்தலை, முதலில் அம்பாறை உத்தேச கரையோர மாவட்டத்துக்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்கள் புரிந்து கொள்ளுமளவுக்கு கொண்டு செல்ல வேண்டும். பின்னர், சிங்கள மற்றும் தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக அந்தக் கோரிக்கையை வலியுறுத்த வேண்டும்.– என்றார். (ற)

# ஐக்கிய தேசியக் கட்சி - சுதந்திரக்கட்சி இணைந்து ஆட்சி

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

பொதுத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து இருபது வருடங்களுக்கு தேசிய அரசு என்ற ரீதியில் இந்நாட்டை ஆட்சி செய்யும். இது விடயத்தில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. – இவ்வாறு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார்.

பெல்வத்தை சீனித் தொழிற்சாலையில் சீனி உற்பத்தியை ஆரம்பித்து வைத்தபின் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அடுத்து வரும் பொதுத் தேர்தலுக்குப் பிறகு இரு கட்சிகளையும் ஒன்றிணைத்து நாட்டின் ஆட்சியை முன்னெடுப்பதற்கு திடசங்கர்ப்பம் பூண்டிருக்கின்றனர். இது வரைகாலமும் நாம் பிரிந்திருந்து செயற்பட்டது போதும். தொடர்ந்து அந்நிலை ஏற்படக் கூடாது. நாட்டை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய பெரிய பொறுப்பும் கடப்பாடும் இவ்விருக் கட்சிகளுக்கும் உள்ளது.

நோக்கமும் இலக்கும் ஒன்றாக இருக்கும்போது இணைந்து செயற்படுவதில் தவறேதும் இருக்க முடியாது. இதன் மூலம் நாடு எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை இலகுவில் ஏற்படுத்திக் கொள்ள முடியும். அடுத்து வரும் எமது தலை முறையினருக்கு வளமானதோர் நாட்டை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். 1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் உருவாக்கப்பட்டது. அவ் வேளையிலேயே ஊவா மாகாணத்தின் பெல்வத்தையில் தொழிற்சாலையும் ஆரம்பமானது. கிராம எழுச்சித் திட்டமும் முன்னெடுக்கப்பட்டது. இது போன்ற வேலைத்திட்டங்கள் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படும் போது நாடும் துரிதமாக அபிவிருத்தியடையும்.



நாட்டில் சக்தி மிக்க ஸ்திரமான தோர் ஆட்சி இருக்குமேயானால் வெளிநாடுகள் தமது பணத்தை இந் நாட்டில் முதலீடு செய்து வேலைத் திட்டங்களை ஆரம்பிப் பர். அத்தகைய தோர் ஆட்சியை ஏற்படுத்தலே இரு தலைவர்களும் கங்கணம் கட்டி செயற்படுகின்றனர். – என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் தோன்றும் நல்ல எண்ணங்களை செயற்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதுமையைப் புகுத்தி லாபம் காண்பீர்கள். பூர்வீகச் சொத்து கிடைக்க யோகமுண்டு.

**இடபம்:** உங்கள் மனதில் இனம்புரியாத கவலை ஏற்படலாம். அக்கம் பக்கத்தவரிடம் குடும்ப விடயங்களைப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் உயரும். உறவினர் ஒத்துழைப்பு மனதுக்கு ஆறுதல் அளிக்கும்.

**மிதுனம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் கூடுதலாக வரும். பெண்கள் ஆடை, அணிகலன் வாங்கி மகிழ்வர். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**கடகம்:** எண்ணத்தில் நேர்மை குணம் பிரதிபலிக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைவதால் இலாபம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** முக்கிய பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். திடீர் செலவால் சேமிப்பு கரையும். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது நல்லது.

**கன்னி:** பெருந்தன்மை மிக்கவராக நடந்து கொள்வீர்கள். தொழிலில் வளர்ச்சிக்கு கடந்த கால அனுபவம் பயன்படும். குடும்பத்தில் திடீர் செலவு ஏற்படலாம். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது அவசியம்.

**துலாம்:** எவரிடமும் உயர்வு தாழ்வு பாராட்டாமல் பழகுவீர்கள். புதிய நண்பர்கள் காட்டும் அன்பு, மனதை நெகிழ வைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை எட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** அனைவரின் அன்புக்கும் உரியவராகத் திகழ்வீர்கள். தீமையான சூழ்நிலையும் நன்மை தருவதாக மாறும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** தன்மானத்துக்குச் சோதனை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் நடைமுறைச் செலவு கூடும். உடல்நலனில் அக்கறை காட்டத் துவங்குவீர்கள்.

**மகரம்:** யாருக்கும் வாக்குறுதி அளிப்பதைத் தவிர்க்கவும். தொழில் வளர்ச்சிக்கு, கடந்த கால அனுபவம் துணைநிற்கும். பிள்ளைகளுக்காக ஆடம்பரச் செலவு செய்ய நேரிடும். மனைவியின் பேச்சுக்கு மதிப்பளிப்பது நல்லது.

**கும்பம்:** மனதில் புதிய சிந்தனை பிறக்கும். சவால்களை வென்று சாதனை புரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெற்றோர் விருப்பம் அறிந்து செயல்படுவீர்கள்.

**மீனம்:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக திகழ்வீர்கள். தொழிலில் உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

# உருமாறும் ஏ.வி.எம்.





தமிழ் சினிமாவின் மிக முக்கியமான அடையாளம் ஏ.வி.எம். ஸ்டுடியோ. உலக உருண்டையுடன் இருக்கும் ஏ.வி.எம் . ஸ்டுடியோவில் சினிமா, சீரியல், ரியாலிட்டி ஷோ என எல்லாவிதமான படப்பிடிப்புக்களும் இடம்பெற்று வருகின்றன.

தற்போது ஏ.வி.எம். ஸ்டுடியோ மெய்யப்ப செட்டியாரின் மகன்களான சரவணனுக்கும், பாலசுப்பிரமணியனுக்கும் சொந்தமாக உள்ளது.

இதில், பாலசுப்பிரமணியனுக்குச் சொந்தமான பகுதிகள் மட்டும் இடிக்கப்படுகின்றன. அந்தப் பகுதியில் பாலசுப்பிரமணியன் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டலாம் என்று திட்டமிட்டுள்ளார்.

ஸ்டுடியோக்களால் வருமானம் இல்லை என்பதாலேயே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. கோயில், பூங்கா, பொலிஸ் நிலையம், நீதிமன்றம், பேருந்து நிலையம் என்று சினிமாவுக்குத் தேவையான எல்லா செட்டும் போடுவதற்கு வசதியாக இருந்த ஏ.வி.எம். ஸ்டுடியோ பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வருவதால், இனி சின்ன பட்ஜெட்டில் சினிமா எடுப்பவர்கள் லொக்கேஷனுக்காக கொஞ்சம் அலைய வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

# வியக்க வைத்த ஆடை

அண்மையில் நடந்து முடிந்த கேன்ஸ் திரைப்பட விருது விழாவில், நடிகை ரிகானா வித்தியாசமான உடையில் கலந்து கொண்டார். மஞ்சள் நிறத்தில் தரையில் படர்ந்திருந்த அந்த உடையின் பெயர் 'யெல்லோ கியோ பீ'.

இதனை சீனாவைச் சேர்ந்த ஆடை வடிவமைப்பாளர் ஒருவர், கைத்தறி முறையில் கடந்த 2 வருடங்களாக உருவாக்கியுள்ளார். காண்போர் விழிகளை விரியச் செய்த அந்த உடையை, தனது உதவியாளர்கள் உதவியுடன் தரையில் படராதவாறு பிடித்து, அன்னநடை போட்டபடி கேன்ஸ் விழாவுக்கு வந்தார் ரிகானா.

அவரது ஆடை அலங்காரத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்ட பிரபல நட்சத்திரங்கள், அந்த ஆடையை 'பீட்சா, ஓம்லெட்' போன்றவையுடன் ஒப்பிட்டு கருத்து தெரிவித்திருக்கின்றனர்.

# விஷால் அதிரடி



ஜூலை 15 ஆம் திகதி நடைபெற இருக்கும் தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்தலுக்குத் தடை விதிக்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் நடிகர் விஷால்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஜூலை மாதம் 15 ஆம் திகதி நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் புதன்கிழமையாக உள்ளதால் அதற்குப் பதிலாக அடுத்து வரும் விடுமுறை நாள்களில் தேர்தலை நடத்தவும், தேர்தலில் முறைகேடு நடைபெறாமல் இருப்பதைத் தடுக்க உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதி பதியை நியமிக்கவும் உத்தரவிட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை நீதிபதிகள் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளனர். திரையுலகில் பெரிய சங்கமான நடிகர் சங்கத்தின் ஒரு பகுதியினர் விஷாலுக்கு ஆதரவாக இருப்பதால், இந்த முறை சரத்குமார் – ராதாரவி அணிக்குப் பெரும்சவால் ஏற்பட்டுள்ளதாக திரையுலகில் பேச்சு நிலவுகிறது.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்...



***கஞ்ச மகா பிரபு ஒருவன் வீட்டிற்கு ஒரு விருந்தாளி வந்தான்.***

**கஞ்சன்:** வாங்க வாங்க, இருங்க. என்ன சாப்பிடுறீங்க. சூடாவா அல்லது குளிர்பானமா...?

**விருந்தாளி :** குளிர்பானம். **கஞ்சன்:** நல்லது, ஜூசா, சர்பத்தா? **விருந்தாளி :** ஜூஸ்.

**கஞ்சன்:** சரி, கண்ணாடி கிளாஸ்லையா பித்தளைக் கிண்ணத்திலையா ?

**விருந்தாளி:** பித்தளைக் கிண்ணத்திலேயே குடுங்க.

**கஞ்சன்:** சாதாரண கிண்ணமா ? டிசைன் போட்ட கிண்ணமா ?

**விருந்தாளி:** (ஒரு மாதிரிப் பார்த்துக் கொண்டு) டிசைன் போட்ட கிண்ணம்.

**கஞ்சன்:** ம் ம்ம்.. சரி அதில என்ன டிசைன்.. கோடு போட்டதா.. பூப் போட்ட தா?

**விருந்தாளி:** பூப் போட்டது போதும்..!

**கஞ்சன்:** (விடவில்லை) சரி, என்ன பூ? ரோஜாப்பூ வா. இல்லை தாமரை பூவா? **விருந்தாளி:** ரோஜாபூ..!

**கஞ்சன்:** (மனைவியைப் பார்த்து) **அடியே..** நம்ம வீட்டில ரோஜாபூ டிசைன் போட்ட பித்தளைக் கிண்ணம் இருக்கா ?

**கஞ்சன் மனைவி:** இல்லை

**கஞ்சன்:** அப்படியா, விருந்தாளிக்கு எது பிடிக்குமோ அதைத் தான் குடுக்கணும். சரி, அவருக்குப் பிடிச்ச ரோஜாபூ டிசைன் போட்ட பித்தளைக் கிண்ணம் இல்லாததாலே அவருக்கு ஜூஸ் வேண்டாம் விட்டு விடு... **விருந்தாளி:** ???

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரி செலுத்துவோரை கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 15
உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் யாழ்.பிராந்திய காரியாலயத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட வரி செலுத்துவோருக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ் பிராந்திய இறைவரி திணைக்கள ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் திருமதி கல்யாணி டஹநாயக்கே அவர்கள் கலந்து கொண்டதுடன் வரி செலுத்துவோருக்கான சிறப்பு அட்டைகளையும்வழங்கிகௌரவித்தார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும் யாழ் போதனா வைத்திய சாலையின் பதில் பணிப்பாளர்
ஸ்ரீ.பவானந்தராஜாவும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த வருடம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் யாழ்.பிராந்தியத்தால் வரிசெலுத்துவோருக்கான சிறப்புரிமை அட்டை 9 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டது. இந்த வருடம் 18 பேருக்கு வெள்ளி சிறப்புரிமை அட்டைகளும், 6 பேருக்கு தங்க சிறப்புரிமை அட்டைகளுமாக 24பேருக்கு இந்த சிறப்புரிமை அட்டை வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் கலந்து கொண்டு வரவேற்பு உரையாற்றிய யாழ். பிராந்திய இறைவரி திணைக்கள ஆணையாளர் கருத்து தெரிவிக்கையில்;
யாழ். பிராந்திய இறைவரி திணைக்களம் நாட்டில் உள்ள அனைத்து இறைவரி திணைக்களங்களுடன் ஒப்பிடுகின்றபோது புள்ளி விவரங்களின் அடிப்படையில் அதிக வரிகளை பெற்றுக்கொள்கின்றது என்றும்–ஆனால் இதுவரையில் சொந்தமான கட்டடத்தில் இயங்காததுடன் அனைத்து வசதிகளையும் உள்ளடக்காத நிலையில் இயங்கி வருவதாகவும் தெரிவித்தார். (ற–ரி)

# மட்டு. வாவியின் நடுவே மேடை அமைக்கத் தடை

மட்டக்களப்பு, ஜூன் 15
மட்டக்களப்பு வாவியின் நடுவில் மீனவர்கள் மேடைகள் அமைப்பதை தடைசெய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.
இது தொடர்பில் அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:–
மட்டக்களப்பு வாவியில் மீனவர்கள் மேடைகள் அமைத்து மீன்களைப் பிடிப்பதால் வாவியின் அழகு கெடுவதோடு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் வீழ்ச்சி கண்டுவருகின்றது.
இதேவேளை, மட்டக்களப்பை நோக்கி அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் நிலையில் மீனவர்களின் இத்தகைய செயற்பாடுகள் பயணிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றன.
மேடைகளை அமைப்பதற்காக மண்மூடைகள் மற்றும் ரயர்கள் என்பவற்றை பயன்படுத்துவதால் வாவியின் அழகு் கெடுவதோடு சூழல் மாசடையும் நிலையும் உருவாகியுள்ளது.– என்றார். (ற)

# ரவீந்திரநாத்தின் பிரதான கொள்கை மனிதநேயத்தை உருவாக்குவதே

## ரவீந்திரநாத் தாகூரின் 154ஆவது பிறந்த தின நிகழ்வில் பெரதேனிய பல்கலை. தமிழ்த்துறை தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 15
எல்லைகளைத் தகர்ப்பதும் மனிதநேயத்தை உருவாக்குவதும் ரவீந்திரநாத் தாகூரின் பிரதான கொள்கைகளில் ஒன்று அதற்காக அவர் பயன்படுத்திய வழிமுறைகளில் ஒன்றே இலக்கியம்– இவ்வாறு தெரிவித்தார் பெரதேனியா பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் மகேஸ்வரன்.
உலகப்புகழ் பெற்ற இந்தியக் கவிஞரான ரவீந்திரநாத் தாகூரின் 154ஆவது பிறந்த தினத்தையும் இலங்கைக்கு அவர் வந்தமையையும் நினைவுகூரும் முகமாக இந்தியத் துணைத்தூதரகத்தினால் யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் விருந்தினர்களில் ஒருவராக கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
உலகிலேயே இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஐரோப்பியர் அல்லாத முதல் நபர் ரவீந்திரநாத் தாகூர். இந்தியா, பங்களாதேஷ் என்று இரண்டு நாடுகளுக்குமான தேசிய கீதத்தை எழுதிக் கொடுத்தவரும் அவரே. இவ்வாறாக இலக்கியத்தில் புகழ்பெற்று விளங்கிய தாகூர் பெண்கள், ஏழைகள், ஒடுக்கப்பட்டவர் ஆகியோரின் விடுதலைக்கான குரல் கொடுக்கவும் தவறவில்லை.
அவர் ஒருமுறை இலங்கைக்கு வருகை தந்தபொழுது இராமாயணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒரு பாலத்தை அமைக்க தான் விரும்புவதாகவும் அந்தப் பாலம் செங்கற்களாலும் மரங்களாலும் அமைக்கப்படக்கூடாது மாறாக கவிகளாலும், சித்திரங்களாலும், இசைகளாலும், இலக்கியங்களாலும்அமைக்கப்பட வேண்டும்–என்றார்.
இவ்வாறாக நாடு, மொழி, தேசம், நிறம், இனம் என்று அனைத்தையும் கடந்து ஒவ்வொருவருக்கும் இடை யிலான பாலமாக இருந்தவர் தாகூர். மொத்தத்தில் அவர் பல்வகைப்பட்ட ஆளுமைகளின் கூட்டு.– என்றார்.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், யாழ். மாவட்ட அரச அதிபர், யாழ். இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீ.ஜி.நடராஜன், வடமாகாண சபையின் உறுப்பினர் சிவாஜிலிங்கம், சிறுவர் நாடக எழுத்தாளர் குழந்தை சண்முகலிங்கம், விரிவுரையாளர்கள், ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம)

# திறைசேரியில் பணம் நிறைந்தே உள்ளது

## நிதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15
தற்போது திறைசேரியில் தாராளமாக பணம் நிறைந்து உள்ளது. இதன்பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷவால் நிதி ஒதுக்கிடாது ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்கு தற்போது புதிய அரசின் வேலைத் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கியுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
அத்துடன் நாட்டின் எந்தவொரு அபிவிருத்தி பணிகளும் நிறுத்தப்படவில்லை. தற்போது கிராமிய அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன், வடக்கு அதிவேக பாதையின் பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
நிதி அமைச்சில் வைத்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது தொடர்பில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்ததாவது:–
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தின் போது நாட்டில் அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட அமைச்சரவையினால் எந்தவொரு நிதியும் ஒதுக்கிடப்படவில்லை. இருப்பினும் குறித்த அபிவிருத்தி பணிகள் ஆடம்பரமான முறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
அத்தோடு மஹிந்த ராஜபக்ஷவால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி பணிகளில் கேள்விக்கோரல்கள் இல்லாமல் தரகு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் மஹிந்த ராஜபக்ஷவால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி பணிகள் தொடர்பில் முறையாக ஆராய்ந்த பின்னர் குறித்த அபிவிருத்தி பணிகளுக்கு விசேடமாக நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளோம்.
எந்தவொரு அபிவிருத்தி பணிகளும் இடைநிறுத்தப்படவில்லை. திறைசேரியில் தாராளமாக பணம் உள்ளது. நாம் 100 நாள் வேலைத்திட்டத்தின் பிரகாரம் சீர்குலைக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தை நல்லதொரு நிலைக்குகொண்டு வந்து சேர்த்துள்ளோம்.மேலும் தற்போது கிராமிய அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன், வடக்கு அபிவிருத்திகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. – என்றார். (ற)

# புலம்பெயர் தமிழரை அழைப்பது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றார்

போராடி வென்றெடுத்த சமாதானத்தை மீண்டும் பிரிவினைவாதிகளின் கைகளில் கொடுக்கவே ஐக்கிய தேசியக் கட்சி அரசு முயற்சிக்கின்றது. புலம்பெயர் தமிழர்களை மீண்டும் நாட்டுக்குள் வரவழைப்பது அச்சுறுத்தலாகும் என்று எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.
லண்டன் மாநாட்டிலும் புலிகளுடன் பேச்சு நடந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.
புலம்பெயர் தமிழர்களை மீண்டும் நாட்டுக்கு வரவழைக்க அரசு எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் எதிர்க்கட்சியின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
புலம்பெயர் தமிழர்களை நாட்டுக்குள் அனுமதிக்க அரசு மேற்கொண்டுள்ள தீர்மானம் நாட்டுக்கு மிகவும் அச்சுறுத்தலாக அமைந்துவிடும். போரை வென்றெடுத்த நாட்டில் வெகு விரைவில் மீண்டும் ஒரு குழப்பகர சூழலை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு முயற்சித்து வருகின்றது.
புலம்பெயர் அமைப்புகளுடனும் புலி அமைப்புகளுடனும் லண்டனில் இரகசிய பேச்சு நடந்துள்ளது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலக தமிழர் பேரவை முக்கிய பங்கை வகித்துள்ளன. அதேபோல் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் செயலாளரும் இதில் கலந்துகொண்டுள்ளனர். ஆகவே ஐக்கிய தேசியக் கட்சியின் இலக்கு என்னவென்பது தெளிவாகத் தெரிகின்றது.
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சர்வதேசத்தின் தேவைக்கும் புலம்பெயர் புலிகளின் தேவைக்கும் அமையவே நாட்டில் மாற்றம் ஒன்று ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டை நாம் ஆரம்பத்தில் இருந்தே முன்வைத்தோம்.
ஆனால் அதை யாரும் கவனத்தில் கொள்ளவில்லை. இப்போது இவர்களின் உண்மை நிலைமை என்னவென்பது வெளிச்சத்துக்கு வருகின்றது. இந்த அரசு வடக்கில் பிரிவினைவாதிகளின் தேவையை நிறைவேற்றும் வகையில் செயற்பட்டுவருகின்றது. இன்னும் சிறிதுகாலம் இந்த அரசு ஆட்சியில் இருக்குமானால் மீண்டும் ஈழத்துக்கான அடித்தளம் இடப்படும். எனவே நாட்டின் நிலைமைகளை மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் . மீண்டும் நாட்டில் குழப்பங்கள் வருமானால் அது மூவின மக்களையுமே பாதிக்கும். எனவே தமிழ், முஸ்லிம் மக்களும் தமது பாதுகாப்பு தொடர்பில் சிந்திக்க வேண்டும். உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலை நடத்தவேண்டும் என்பதே எம் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். ஆனால் அதற்கு முன்னர் 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். – ன்றார். (ற)

**விற்பனைக்கு**
Sony Z7 Video Camara
விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 077 477 6647

**Personal Class**
தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English, Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய அனைத்துப் பாட ஆசிரியர்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
பிரபல ஆசிரியர், தாவடி தெற்கு, தாவடி.
தொ.பே: 078 675 9906

**கார் விற்பனைக்கு**
Mazda Familia, 16- xxxx
நல்ல நிலையிலுள்ள கார் விற்பனைக்குண்டு.
விலை 695000/=
தொ.பே. 076 683 7056
(60982) (45.3.7)

**வீடு வாடகைக்குண்டு**
யாழ்ப்பாணம் நல்லூரில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
லக்கி
தொ.பே: 021 222 6366 001 416 493 0590
bshan 2@ gmail.com

**தேவை**
வடமராட்சியில் இயங்கும் தனியார் நிறுவனமொன்றிற்கு கேக் ஐசிங்கில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற ஒருவர் தேவை
தொ.பே: 077 444 9594

**வேலையாள்கள் தேவை**
Solaivanam(pvt) Ltd
சோலைவனம் விருந்தினர் விடுதி
* உணவு பரிசாரகர் (Waiter)
* சமையலாளர் (Cook)
* சமையல் உதவியாளர்
கீழ்க்காணும் முகவரிக்கு சுயவிவரக் கோவையை அனுப்பிவைக்கவும்.
79, உதய நகர் மேற்கு, கிளிநொச்சி.
தொடர்பு:
077 776 3355,021 228 3933
(57123) (3.5.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி.வ.கேதீஸ்வரனின்
மாமியார்

**திருமதி சரஸ்வதி குமாரசாமி**

அவர்கள் காலமான செய்தி அறிந்து அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை
கந்தரோடை, சுன்னாகம். (60980) (9.3.7)

# நினைவலைகள்

3 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம்





**அமரர் தேவதாஸ் விவேகானந்தன்**

பிறப்பு 31.12.1957 இறப்பு 25.01.2012

ஆண்டுகள் மூன்று அகன்றோடி விட்டாலும்
எம் ஆழ்மனதில் உங்கள்
அன்பு முகம் அகன்றிட வில்லையே....
மறைந்தும் மறையாத எம் அன்புத்
தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும் உறவுகள்.....!

**அமரர் விவேகானந்தன் பிரகாஷ்**

பிறப்பு 20.06.1980 இறப்பு 21.12.2014

பிரகாஷே பல்கலையும்கற்றுணர்ந்து பாரினிலே
உயர்ந்து நின்றாய் புலமை மிகு ஆற்றலினால்
புதுமை பல படைத்தாய் பதியிலே எங்களை
தவிக்கவிட்டு பரன் பதம் பற்றிய தேன்?
எங்கே நான் சென்றாய் ஏங்குகின்றோம்
நாம் இங்கே

உங்கள் இருவரின் ஆத்ம சாந்திக்காய்....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அறுகு வெளி,
தனங்கிளப்பு, சாவகச்சேரி

குடும்பத்தினர்.

# நினைவஞ்சலி

இரண்டாம் ஆண்டு 7 ஆம் ஆண்டு





**திருமதி வசந்தி (வதனி) கதிர்காமநாதன்**

20.04.1971 ← தோற்றம் → 29.07.1934
07.07.2013 ← மறைவு → 19.02.2009

**அமரர் நன்னித்தம்பி இராமுப்பிள்ளை**

திதி: சதுர்த்தசி தேய்பிறை (15.06.2015) திங்கட்கிழமை

திதி: திரயோதசி வளர்பிறை

எங்கள் குடும்ப விளக்கின் சுடர்கள்
எட்டுத்திக்கும் பிரகாசித்திட உழைத்த உத்தமரே
என்றென்றும் உடலில் உயிர்த்துடிப்புடன் ஓடிடும்
எங்களது இரத்தத்தின் உயிரான அப்பாவே!
அன்று நீங்கள் குலவிளக்கின் திரிகள்
அசையாது ஒளி வீசிட எங்களை அணைத்து
அகலக்கால் பதித்திட ஆணிவேராய் நின்றபோது
அதில் ஒரு திரி அணைந்ததுவே.
இன்று நீங்கள் இருவரும் இணைந்தே
இகபர சுகங்களை வழங்கி ஆசீர்வதிப்பீரே!
இவ்வுலகில் நாங்கள் உங்களை நினைந்தே
இன்பமாய் வாழ்கின்றோம்! வாழ்த்திடுவீர்கள்!

நிற்சாமம்,
சங்கானை.

குடும்பத்தினர்.

# சுழற்சி முறையிலான வாழ்வாதார ஊக்குவிப்பு

## முல்லைத்தீவில் வழங்கப்பட்டது

கிளிநொச்சி, ஜூன் 15

வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் 2015ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து சுழற்சி முறையிலான வாழ்வாதார ஊக்குவிப்புக்காக ஒதுக்கப்பட்ட ரூபா ஐந்து லட்சம் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 5 பனை, தென்னை வள சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சுழற்சி முறையிலான கடனுதவித் தொகை வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் இ.பாலச் சந்திரன் தலைமையில் புதுக் குடியிருப்பு பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் துணுக்காய்–பாண்டியன்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லை வடக்கு மற்றும் முல்லை தெற்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப் பட்டதோடு அத்தினமே அச்சங்கங்களைச் சார்ந்த 45 பயனாளிகளுக்கு சுழற்சி முறையிலான கடனும் வழங்கப்பட்டிருந்தது.

அங்கு கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன்–

இவ்வாறான ஊக்குவிப்புகளை வழங்கும் ஒவ்வொருமுறையும் பயன்பெறும் ஒவ்வொரு வரும் அதில் பயனைப்பெற்று தங்களின் குடும்ப வாழ்வாதாரத்தை பலப்படுத்தவேண்டும் என்றெண்ணியே அவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இம்முறையும் இவ்வுதவியைப்பெற்ற 45 பயனாளிகளின் குடும்ப வாழ்வாதாரம் இன்னும் பலமடைய வேண்டும். சுழற்சிமுறையின் அடிப்படையில் இந்த ஐந்து சங்கங்களைச் சேர்ந்த ஏனைய பயனாளிகளும் இதன் ஊடாக உள்வாங்கப்பட்டு அவர்களின் வாழ் வாதாரமும் சிறக்க வேண்டும் என்ற கனவோடே இவ்வாறான ஊக்குவிப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இம்முறை உள்வாங்கப்பட்ட ஐந்து சங்கங்களைப் போல இனி வரும் காலத்தில் ஏனைய சங்கங்களும் இவ்வாறான சுழற்சிமுறை பயன்பாட்டு திட்டத்துள் உள்வாங்கப்படுவர் என்று கூறியதோடு ஒவ்வொரு சங்கத்திலும் உள்ள ஒவ்வொரு பயனாளியில் வாழ்வாதார கட்டமைப்பும் பலம் பெறட்டும். – என்றார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், ஐந்து சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள் மற்றும் 45 பயனாளிகளும் கலந்துகொண்டனர். (ந–21)

# விளம்பர சேவை நடத்துவதற்கு வலி. தென்மேற்கில் அனுமதி மறுப்பு

மானிப்பாய், ஜூன் 15

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் விளம்பர சேவை நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி மூன்றாவது தடவையும் தோல்வியில் முடிந்துள்ளது. பிரதேச சபை உறுப்பினர்களின் கடும் எதிர்ப்பை அடுத்து இந்த முயற்சி கைவிடப்பட்டதுடன் அதற்கான தீர்மானமும் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டுள் ளது.

வலி. மேற்குப் பிரதேசத்தில் மக்கள் நடமாட்டமும் வர்த்தக நிலையங்களும் அதிகமாகக் காணப்படும் மானிப்பாய் பட்டினம், பண்டத்தரிப்புப் பட்டினம் ஆகிய இடங்களில் விளம்பர சேவை நடத்த முன்வந்த சிலர் இதற்கான அனுமதியைப் பிரதேச சபையிடம் கோரியிருந்தனர்.

இதையடுத்து விளம்பர சேவை நடத்துவது பற்றி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராய்ந்த உறுப்பினர்கள் பொது மக்களினதும், மாணவர்களினதும் நலன்கருதியும் போக்கு வரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டும் விளம்பர சேவைக்கு அனுமதி வழங்குவதில்லை என்று தீர்மானித்தனர்.

சில மாதங்களுக்குப் பின் மீண்டும் விளம்பர சேவை நடத்த முன்வந்த சிலர் பிரதேசசபைக்கு விண்ணப்பித்திருந்தனர். இது பற்றி ஆராய்ந்த உறுப்பினர்கள் அனுமதி வழங்குவதில்லை என்று இரண்டாவது தடவையும் தீர்மானித்திருந்தனர்.

இந்த நிலையில் வர்த்தகர்களின் கையெழுத்துடன் விளம்பர சேவை நடத்துவதற்கு அனுமதிகோரி மீண்டும் பிரதேச சபைக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருந்தது.

கடந்த வாரம் நடைபெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதுபற்றி ஆராய்ந்த உறுப்பினர்கள், எந்தக் காரணம் கொண்டும் விளம்பர சேவைக்கு அனுமதி வழங்குவதில்லை என்று கருத்துத் தெரிவித்ததுடன் இதற்கான தீர்மானத்தை மூன்றாவது தடவையும் நிறைவேற்றியுள்ளனர். (ந–115)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**செல்வி சிவநேசன் மதுசாளினி**



தோற்றம் 08.09.2004

மறைவு 15.06.2010

மழலையில் எம்மை மகிழ்வித்த மலரே !
மண்ணகம் விட்டு நீ! விண்ணகம் சென்றதேனோ?
மறையாத உன்நினைவுகளுடன்
மீண்டும் உன் வரவுக்காய் !
[illegible] வைத்து பூத்திருக்கின்றோம்.

உன்னிரவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மற்றும் குடும்பத்தினர்.

பூவோடை, கோற்றாவத்தை,
கரணவாய் வடமேற்கு. [illegible]

# நாகபூஷணி அம்பாள் ஆலய மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வரலாற்றுப் புகழ்மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த பெருமகோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை இரவு தெப்போற்சவத்துடன் நிறைவுறும். உற்சவகால விசேட தினங்களாக–

எதிர்வரும் 21 ஆம் திகதி இரதமுத்துச்சப்பரமும், 23ஆம் திகதி இரவு கைலைக் காட்சியும், 25ஆம் திகதி 108 சங்காபிஷேமும், 27ஆம் திகதி விசேட கருட சர்ப்பப்பூசை வாயுபட் சணிநாகம் வீதியுலாவும், எதிர்வரும் 30ஆம் திகதி தேர்த் திருவிழாவும், முதலாம் திகதி தீர்த்த திருவிழாவும், 2ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறவுள்ளன. (ந–7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# போதையில் சாரத்தியம்: ஐவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களை செலுத்திய 5 இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களில் இருவருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை. அதையடுத்து அவர்களை ஒன்பதாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் தவறின் இரண்டு மாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் யாழ். நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். சாரதி அனுமதிப்பத்திரத்துடன் மோட்டார் சைக்கிள்களை செலுத்திய 3 இளைஞர்களை ஏழாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் தவறின் இரண்டு மாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் அத்துடன் சாரதி அனு மதிப்பத்திரத்தை இரண்டு மாத காலத்துக்கு தடுத்து வைக்குமாறும் நீதிவான் மேலும் உத்தரவிட்டார்.

(ற-103)



# சட்டவிரோத மணல்: ரூ.ஐம்பதாயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற குற்றத்துக்காக முற்படுத்தப்பட்ட நபரொருவர் வழக்கு விளக்கத்துக்கு எடுக்கப்பட்டபோது குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதையடுத்து அவருக்கு ஐம்பதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டிருந்த குறித்த நபர் கோப்பாய் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிவான்நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தார். அதன்போது சட்டவிரோதமாககொண்டு செல்லப்பட்ட மணல் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் வாகனம்பதிவுசெய்யப்பட்ட உரிமையாளருக்கு விடுவிக்கப்பட்டது.

(ற-103)

# போதையில் ரகளை: இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பொது இடத்தில் மதுபானம் அருந்தி பாதையில் பயணிப்பவர்களுக்கும் வாகனங்களுக்கும் இடையூறு விளைவித்து அநாகரிகமாக நடந்து கொண்ட நாச்சிக்குடா, கிளிநொச்சி மற்றும் குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை தலா இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார்.

(ற-103)

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு மறியல்



யாழ்ப்பாணம், ஜூன் 15

அனுமதிப்பத்திரமில்லாமல் கஞ்சா மற்றும் டைனமைட் வெடிப்பொருளை வைத்திருந்த பூம்புகார் அரியாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரை பாஷையூரில் யாழ்ப்பாணப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை இம்மாதம் இருபத்தைந்தாம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார். (ற-103)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரி அதிபர்
அருட்தந்தை ஜோ.அ. ஜேசுதாஸ்
அவர்கள்

இலங்கை அதிபர் சேவை தரம் - I
இற்கு பதவி உயர்வு
பெற்றமையையிட்டு எமது பாடசாலை
சமூகம் அவரை அக மகிழ்ந்து
பாராட்டுவதோடு, அவர் மென்மேலும்
பல சிறப்புக்களைப் பெற்று
கல்விப் பணியிலும்
ஆன்மிகப் பணியிலும் மேன்மைபெற
வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
கல்லூரி சமூகம்
யா/புனித கேன்றிபரசர் கல்லூரி,
இளவாலை.
(60387) (45.3.7)



உ
தேவி துணை
"தீர்க்க சுமங்கலி பவ
தீர்க்க ஆயுஷ்மான் பவஅஸ்து"
"தற்காத்து தற்கொண்டான் பேணி தகை சான்று
சொற்காத்து சோர்விலாள் பெண்"

50 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



திருமதி. சாரதாதேவி ரவிச்சந்திரன்

| | | | |
|---|---|---|---|
| அகவை | ஐம்பதில் | பாதங்கள் | பதிய |
| உவகை | என்பதால் | உறவுகள் | மனம்நிறைய |
| இசையால் | ஈர்த்து | இதயங்களை | உருகவைத்து |
| இனிமைக் | குரலால் | இமயம் | கடந்து |
| பரிவாய் | பாங்காய் | பாடங்கள் | புகட்டி |
| தெரிவாய் | வந்தீர் | தெளிந்தோர் | தெரிவால் |
| மலர்வாய் | மணமாய் | மண்ணிற் | பேரழகாய் |
| திகழ்வாயென்றும் | குணமிகு | வாடா | மலராய்........ |

"அருள் பவனம்"
சூராவத்தை, சுன்னாகம்.
(60539)(9.3)

பல்லாண்டு காலம் நோயின்றி சிறப்புடன்
வாழ மனமார வாழ்த்தும்
பிள்ளைகள்.



மாபெரும் ஏல விற்பனை
100 ற்கும் அதிகமான டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள்



❖ உழவு இயந்திரம் ❖ டிமொ பட்டா
❖ முற்சக்கரவண்டி ❖ மோட்டார் சைக்கில்
❖ இருச்சக்கர உழவு இயந்திரம்

2015 ஜூன் 16 ம் திகதி
புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம் வவுனியா

ஜூன் 13,14,15 ஆம் திகதிகளில்
வாகனங்களைப் பார்வையிடலாம்

அழையுங்கள் : 011 511 81 81
லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ்



வடமாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும் - 2015

கைத்தறி மற்றும் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்யும் வடமாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக தொழிற்துறைத்திணைக்களத்தினால் வருடாவருடம் கண்காட்சியும் போட்டியும் நடத்தப்பட்டு வெற்றியாளர்களிற்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக இவ்வாண்டு வடமாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும் வடமாகாண தொழிற்துறை திணைக்களத்தினால் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற ஆக்கங்கள் தேசியமட்ட போட்டிக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் மாகாண மட்டத்தில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

இடம் : யாழ்ப்பாணம்
காலம் : ஜூலை மாதம் 4 ஆம் வாரம்
நேரம் : காலை 9.00 மணிமுதல் - மாலை 5.00 மணிவரை.

பின்வரும் வகைகளின் கீழ் கைப்பணிகளை மேற்கொள்ளும் கைப்பணியாளர்கள் தங்கள் பிரதேச செயலகங்களில் உள்ள தொழிற்துறை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் தொடர்புகொண்டு அவர்கள் மூலமாக தங்கள் ஆக்கங்களைக் கையளிப்பதன் மூலம் கண்காட்சியில் பங்குபற்றி பயன் பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

01. கைத்தறி நெசவு உற்பத்திகள்
02. களிமண் உற்பத்திகள்
03. தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள்
04. தும்பறை வடிவங்கள் (சணல், பருத்தி)
05. பிரம்பு, மூங்கில் குழாய் சார்ந்த உற்பத்திகள்
06. உலோக, கைப்பணிப்பொருள்கள்
07. ஆபரணங்கள் (உலோக, கற்பதித்த, நானாவித ஆபரணங்கள்
08. முகமூடிகள் மற்றும் பாவைகள்
09. செதுக்கிய முகங்கள்
10. சங்கீத உபகரணங்கள்
11. துணிகள் மற்றும் துணிகளினாலான கைப்பணிப் பொருள்கள், (தையல் எம்புரொயிடர், இயந்திர எம்புரொயிடர், துணிகளில் வர்ணம், பெச்வேக், பாரம்பரிய துணி வேலைப்பாடு)
12. பற்றிக் (Batik)
13. ரேந்தை
14. வெண்கல மற்றும் சேசத்
15. மர உற்பத்திப் பொருள்கள்
16. தோற் பொருள்கள்
17. கற்கள் மூல கைப்பணிப் பொருள்கள்
18. பாரம்பரியக்கலை வரைபுகளும் சிற்பங்களும்
19. தென்னை, பனை சார்ந்த உற்பத்திகள்
20. நானாவித கைப்பணிப் பொருள்கள் (கடதாசிப் பொருள்கள், பல்ப் சார்ந்த உற்பத்திகள், மரத்தூள் பொருள்கள், சிப்பி ஓடுகள், பலதரப்பட்ட மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப் பட்ட கைப்பணிப்பொருள்கள்)
21. நினைவுச்சின்னங்கள்

மேலதிக தகவல்களிற்கு பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்
தொழிற்துறை திணைக்களம், முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி,
கைதடி, தொ.பே. இல. 021753 8381
தொலை நகல்: npinddept@gmail com



கிருஷ்ணா அடகு சேவை
பதிவு இல. J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014 ஆம் ஆண்டு 31.05.2014 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு (15.07.2015) முன்பு மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.07.2015 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

(சி.17629)
(45.6.7)
உரிமையாளர்:A.S.Surendran

இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவிகளை ஒளிப்படமாக்கி விற்கும் கும்பல் வடக்கில் இப்போது உள்ளது

## மாவை எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

மாணவர்களை, இளம் பெண்களை வன்புணர்வு செய்தோ அல்லது நிர்வாணமாக்கியோ ஒளிப்படமாக்கி, புகைப்படங்கள் எடுத்து உலகத்திலே வியாபாரம் செய்யும் ஒரு கும்பல் தற்போது வடக்கிலே வேலைசெய்து கொண்டு இருக் கின்றது என்று நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராசா தெரி வித்தார்.

ரோட்டறி கழகத்தால் முல்லைத் தீவில் நடத்தப்பட்ட பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும் பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது:-

மாணவர்கள், மாணவிகள், பெற் றோர்கள், இளைஞர் சமுதாயம் இருக்கின்ற சந்தர்ப்பத்திலே மிக அண்மையில் மிக முக்கியமாக பேசப்பட்ட ஒரு விடயமாக ஒரு அத்தியாவசியமான சிந்தனையாக எடுக்கப்பட வேண்டிய விடயம் புங் குடுதீவு மகாவித்தியாலயத்தினு டைய உயர்தர வகுப்பு மாணவி எவ்வளவு தூரம் கூட்டு பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்டு படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட தன் விளைவாக மிகப் பெரிய ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட் டுள்ளது.

அப்படிப்பட்ட சம்பவங்கள் இடம் பெறக் கூடாது. மது போதையிலே, போதை வஸ்துவுக்கு உள்ளான வர்கள் அந்த வெறியோடு அந்த பிள்ளையை அப்படி கொன்றொழித் திருக்கின்றார்கள் என்பது எங்களு டைய மாணவ செல்வங்களுக்கு மட்டுமல்ல எமது சமுதாயம் சார்ந்த எல்லோருக்குமே அது ஒரு பெரும் சவாலாக இன்று இருக்கின்றது.

அப்படி எங்களுடைய சமுதாயத் திலே எங்களுடைய பெண்களுக்கு பாதுகாப்பற்ற தன்மை இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதனால் போர்க் காலத்திலும் அதற்கு பின்னரும் அவர்கள் படுகின்ற அவலங்களைப் பற்றியெல்லாம் ஐ.நா. மனித உரி மைகள் சபையில் தென்னாபிரிக்க நீதிபதி ஒருவர் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருக்கின்றார்.

நாங்கள் இந்த போர்க் காலத்திலும் அதற்கு பின்னரும் லட்சக்கணக்காக குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தி னர், கடற்படையினர், விமானப் படையினர், பொலிஸார் மீதெல் லாம் குற்றங்களை சுமத்தி வந் திருக்கின்றோம். ஆனால் இப்போது எங்களுடைய தமிழ் இளைஞர்கள் இருப்பவர்கள் போதை வஸ்துக் களை பாவித்து மாணவிகளை இவ்வாறு பாலியல் வன்புணர்வு களுக்கு உள்ளாக்குவதும், கொலை செய்வதுமான முயற் சிகள் இடம் பெறுவது எங்களுக்கு மிகவும் அதிர்ச்சியாகவும் மிகவும் வேத னையாகவும் இருக்கின்றது.

அதைவிட அந்த செயல்களில் இன்னுமொரு குழு வேலை செய்து கொண்டிருக்கின்றது. வித்தியாவி னுடைய பாலியல் வன்புணர்விலும் இடம்பெற்றிருப்பதாக எம்மிடம் தகவல்கள் உள்ளன. பலவிட யங்கள் எமக்குத் தெரியாமல் இருக் கின்றது. எங்களுடைய இளம் பெண் கள். மாணவிகள், அவர்களை வன் புணர்வாகவோ அல்லது நிர்வாண மாகவோ ஒளிப்படங்கள், புகைப் படங்கள் எடுத்து உலகத்திலே வியாபாரம் செய்யும் ஒரு கும்பல் வடக்கிலே வேலை செய்து கொண்டு இருக்கின்றது.

அதுதான் மிகவும் கொடூரமானது அவர்களுடைய பின்னணியில் தான் புங்குடுதீவு மாணவியின் சம்பவ மும் இடம் பெற்றிருப்பதாக எங் களுக்கு சில தகவல்கள் இருக்கின் றன. ஆகவே எங்களுடைய இளம் பெண்கள், மாணவிகள் பாதுகாக் கப்படவேண்டும்.

புங்குடுதீவு மாணவியின் சம்பவத் திற்கு பின்னர் யாழ்ப்பாணம் வந் திருந்த இலங்கை ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவுக்கு யாழ். மாணவிகள் கூறிய செய்தி எங்களு டைய பாடசாலைகளுக்கு பக்கத் திலே மதுபானசாலைகள் இருப்பத னால் மாணவர்களே சென்று மது அருந்துகின்ற இலகுவான நடை முறைகள் உள்ளன. போதை வஸ் துக்கள் பயன்படுத்தும் சம்பவங் களும் பாடசாலைகளிலே இடம் பெறுகின்றன என்று மாணவிகள் கூறினார்கள். எனவே இவ்வாறான விடயங்கள் வேறு எந்தப் பாட சாலையிலும் இடம்பெறுமானால் ஆசிரியர்கள், பாடசாலை சமூகத் தினர் அதற்கான தீவிர நடவடிக்கை எடுத்து இந்த மாணவர்களை காப் பாற்ற வேண்டும் அந்த நிலையில் எமது சமுதாயம் இயங்க வேண் டும் - என்றார். (ற-21)

## பூநகரி கமநல சேவை நிலையத்துக்கு அலுவலரை நியமிக்க கோரிக்கை

பூநகரி, ஜூன் 15

பூநகரி கமநல சேவைகள் நிலை யத்துக்கு நிரந்தர பெரும்பாக அலு வலரை நியமிக்குமாறு பூநகரி கமக் கார அமைப்புக்களும், விவசாயக் கழகங்களும் கோரியுள்ளன.

இங்கு கடமையாற்றிய பெரும்பாக அலுவலர் இடமாற்றம் பெற்றுச் சென்று மூன்று வருடங்களாகியும் வேறு உத்தியோகத்தர் நியமிக் கப்படாததால் விவசாயிகள் பல் வேறு சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர்.

அத்துடன் பூநகரிப் பிரதேசத்தில் உள்ள கமக்கார அமைப்புக்களின் நிர்வாகங்கள் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களாகியும் பெரும்பாக அலு வலர் இல்லாததால் நிர்வாகிகள் தெரிவு நடத்த முடியாது உள்ளது.

காலபோக நெற்செய்கைக் காலத் தில் மானிய உரவகைகள், விதை நெல் விநியோகம் போன்றவை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அலுவலரின் சேவை அவசியமென்பதால் 2015/ 2016 காலபோக நெற்செய்கை காலத்துக்கு முன்னர் பெரும்பாக அலுவலரை நியமிக்குமாறு கோரி யுள்ளனர். (ற-9)

# பசுமாடு திருட்டு

கொழும்புத்துறை, ஜூன் 15

கொழும்புத்துறை சுவாமியார் வீதி யில் உள்ள கால்நடை வளர்ப்பாளர் ஒருவரின் 45ஆயிரம் ரூபா பெறு மதியான கறவைப் பசுமாடு கடந்த வியாழக்கிழமை திருடப்பட்டுள் ளது.

வீட்டுவளவில் ஏனைய மாடுகளு டன் கட்டப்பட்டிருந்த நிலையில் நள்ளிரவு வேளையில் உட்புகுந்த திருடர்கள் பசுமாட்டை அவிழ்த்துச் சென்றுள்ளனர்.

அதேவேளை கடந்த மாதமும் குறித்த கால்நடை வளர்ப்பாளரின் மாட்டுக்கன்று ஒன்று காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இப்பகுதியில் தொடர்ச்சியாக ஆடு கள், மாடுகள் என்பன திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வ தாக மக்கள் கவலை தெரிவிக் கின்றனர். (ற-135)

# கிராமிய வங்கி ஊடான கடன் திட்டம் மீள ஆரம்பம்

## யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட் டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி ஊடாக அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கும் திட்டம் மீண்டும் ஆரம் பித்து வைக்கப்படவுள்ளது என்று சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜிந் திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது:-

சங்க கிராமிய வங்கி ஊடான கடன் வழங்கும் திட்டம் ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது இந்த திட்டத்தை அங்கத்தவர்களின் வசதி கருதி மீண்டும் ஆரம்பித்து வைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைக்கு எட்டு வீத வட்டி அறவிடப்படும். இந்தக் கடன் திட்டம் எதிர்வரும் முதலாம் திகதி தொடக் கம் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்தக் கடனுக்கான விண்ணப் பப் படிவங்கள் சங்க கிளை நிலையங் களில் இருந்து அங்கத்தவர்கள் பெற்றுக்கொள்ள முடியும். கிளை கள் செயற்படாவிடின் அதில் அங் கத்தவர்களாக இருப்போர் சங் கத்தின் கிராமிய வங்கியில் அதற் கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கடனுக்கு விண்ணப்பிப்போருக்கு அதற்கான ஒழுங்கு விதிமுறைக்கு ஏற்ப ஒரு வார காலத்திற்குள் கடன் வழங்கப்படும். சங்க கிராமிய வங் கிகளின் செயற்பாடுகள் மேலும் அதிகரிக்கப்படவுள்ளன. அங்கத்த வர்கள் மற்றும் கூட்டுறவுப் பணி யாளர்களின் வசதி கருதி புதிய கடன் திட்டங்களும் நடைமுறைப்படுத் தப்படும். இந்தக் கடன் திட்டத்தின் மூலம் அங்கத்தவர்கள், பணியாளர் கள் பெரிதும் நன்மையடைவார் கள்.- என்றார். (ற-17)


## மரண அறிவித்தல்

### திருமதி தில்லையம்மா நமசிவாயம்



யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தில்லையம்மா நமசிவாயம் 03.06.2015 புதன் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு-பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்ற நமசிவாயம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் ) அவர்களின் அன்பு மனைவியும் சுவேந்தினி , கிருஷாந்தினி காலஞ்சென்றவர்களான சிவபாலன், தர்ம பாலன், அருட்செல்வன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அருந்தவ ராஜா,தேவராஜா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற இராசமணி, பாலசிங்கம், சற்குணநாதன், சாந்தநாயகி, யோகராணி (பாப்பா) ஆகியோ ரின் மைத்துனியும். இராஜேஸ்வரி, சண்முகலிங்கம், புவனேஸ்வரி, கமலேஸ் வரி ஆகியோரின் சிறிய தாயும் மிருஷினி, தேவசாந்தன், மனோசாந்தன், ரகுசாந்தன், கஜீபன், கபர்த்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.06.2015) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்று பூதவுடல் மாதம்பிட்டி மயானத்தில் தகனம் செய் யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10,2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தகவல்: தே. கிருஷாந்தினி (மகள்)


## ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத் திருவிழா

ஒட்டுசுட்டான், ஜூன் 15

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ள உற்சவமானது தொடர்ந்து 16 நாள்கள் நடை பெறும். நாளை கொடியேற்றமும், எதிர் வரும் 28ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 30 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், முதலாம் திகதி தீர்த் தத் திருவிழாவுடன் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-500)

# பாதுகாப்பற்ற கடவையால் பொது மக்கள் கடும் விசனம்

அக்கரையான், ஜூன் 15

அக்கரையான் முருகண்டி பிரதான விதியில் ரயில் கடவை அமைக்கப் படாததால் அதனுடாகப் பயணிப் போர் பெரும் உயிர் அபாயத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித் தனர்.

வன்னி பிரதேசத்தில் இருந்து வன்னி மேற்கை இணைக்கும் பிரதான வீதிகளில் ஒன்றான குறித்த வீதியில் பாதுகாப்பான ரயில் கடவை இதுவரை அமைக்கப்படவில்லை என்றும் குறித்த வீதி ஊடாக பெருந் தொகை கனரக வாகனங்கள், பாட சாலை மாணவர்கள் , பொதுமக்கள் என பலரும் உயிர் ஆபத்துடனேயே பயணிக்கின்றனர் என்றும் பொது மக்கள் சுட்டிக்காட்டினர்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் உரிய நடவ டிக்கை முன் எடுத்து பாதுகாப்பான புகையிரத கடவையை அமைக்க முன் வர வேண்டும் என பொது மக்கள் கேட்டுள்ளனார். (ற-106)

# 35,000 டொலருடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 15

சட்டவிரோதமான முறையில் 35 ஆயிரம் அமெரிக்க டொலரை சிங்கப்பூருக்கு கொண்டுச் செல்ல முயன்ற நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யு.எல்.302 என்ற விமானத்தில் சிங்கப்பூருக்கு செல்லவிருந்த குருநாகல் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் ஒருவரே நேற்றுக் காலை 7.25 மணியளவில் கட்டுநாயக்க சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து 47 இலட்சத்து 53 ஆயிரம் ரூபா பெறுமதியான 35 ஆயிரம் அமெரிக்க டொலர் [illegible] கைப்பற்றப்பட்டுள்ளது. [illegible] (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கரும்பிலிருந்து ஜெட் விமானங்களுக்கு டீசல்

நாள் தோறும் 8 மில்லியன் வரையான மக்கள் விமானங்களில் பயணம் செய்கின்றனர். இந்த விமானப் பயணத்துக்கு பயன்படுத்தப்படும் பெற்றோலால் சூழல் மாசடைதல் அதிகரிப்பது அனைவரும் அறிந்ததே.
இந்த நிலையில் குறைந்தளவு காபனை வெளியிடக்கூடிய மாற்று எரிபொருளை உற்பத்தி செய்யும் முயற்சியில் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இதில் கரும்புச் சாற்றிலிருந்து ஜெட் விமானங்களுக்குரிய டீசலை தயாரிப்பதில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதுடன் இதனால் 2 சதவீதம் வரை காபன் வெளியேற்றத்தைக் குறைக்க முடியும் என தெரிவித்துள்ளனர்.
இதேவேளை –2008ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் பிற்பகுதியில் உயிர் எரிபொருளின் உதவியுடன் முதலாவது வர்த்தக விமான சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் முற்றுமுழுதாக சூழலுக்கு தீங்கு விளைவிக்காத எரிபொருளை உருவாக்குவதில் ஆராய்ச்சியாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

# உணர்வை ஏற்படுத்தக் கூடிய செயற்கைப் பாதம்

விபத்துக்களில் கால் பாதங்களை இழந்தவர்களுக்கு உதவக்கூடிய வகையில் செயற்கையானதும் உணர்ச்சி உடையதுமான பாதங்களை ஆஸ்திரேலியா விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.
இலத்திரனியல் சுற்றுக்கள் மற்றும் 6 சென்சார்களை உள்ளடக்கிய இந்தப் பாதத்தினால் சிறிய கற்கள் போன்றவற்றைக் கூட உணர முடியும்.
இந்தச் செயற்கைப் பாதனமானது 2007ஆம் ஆண்டு தனது பாதத்தை இழந்த Wolfgang Rangger எனும் 54 வயதான நபருக்கு ஆறு மாதங்களாக பொருத்திப் பரீட்சிக்கப்பட்டுள்ளது.100 சதவீதம் நிஜமான பாதங்களைப் போன்றே உணர்ச்சியை ஏற்படுத்தும் இந்த செயற்கை பாதத்தின் விலையானது தற்போது 11,000 அமெரிக்க டொலர்களாகக் காணப்படுகின்றது. எனினும் இதனைக் குறைவான விலையில் சந்தைப்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்க விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.



# iOS 9 இயங்குதளத்தின் பீட்டா 1 பதிப்பு வெளியீடு



அப்பிள் நிறுவனம் தனது மொபைல் சாதனங்களுக்கான iOS இயங்குதளத்தின் புதிய பதிப்பான iOS 9 பதிப்பை அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.
இந்த நிலையில் iOS 9 இயங்குதளத்தின் பீட்டா 1 பதிப்பை வெளியிட்டுள்ளது. இந்தப் பதிப்பில் முன்னைய பதிப்பில் காணப்பட்ட சில தவறுகள் நீக்கப்பட்டுள்ளதுடன் மேலும் சில புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த இயங்குதளமானது iPhone மற்றும் iPad சாதனங்களில் பயன்படுத்தக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இயங்குதளப் பதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள புதிய அம்சங்களை விளக்கும் காணொலி ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

# முப்பது நாள்களுக்குள் 20 ஐ நிறைவேற்றுவோம்

## கூறுகிறது சுதந்திரக் கட்சி



கொழும்பு, ஜூன் 15
ஐக்கிய தேசியக் கட்சியில் ஆதரவு இல்லாமல் 20 திருத்த சட்டத்தை 30 நாள்களுக்குள் நிறைவேற்றிக் கொள்ளத் தமது கட்சிக்கு முடியும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.
புதிய சட்டத்தின் மூலம் நியாயமான தேர்தலை நிறுவ முடியும் எனவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா கருத்து வெளியிட்டுள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியானது முற்றிலும் பொய்யான விடயங்களை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றது எனவும், இதனால் ஐக்கிய தேசியக் கட்சி இல்லாமல் எங்களால் 20 திருத்த சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என டிலான் பெரேரா தெரிவித்தார்.
இதேவேளை – அரசை எங்களிடம் ஒப்படைத்தால் 30நாள்களுக்குள் 20ஆவது திருத்தசட்டத்தை நடை முறைப்படுத்திக் காட்டுகிறோம் என ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா. (த)

# சிட்டிவேரம் தேர்த்திருவிழாவில் நூற்றுக்கணக்கான காவடிகள்

வடமராட்சி, ஜூன் 15
வரணி சிட்டிவேரம் அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போது பெரும் எண்ணிக்கையிலான காவடிகளும் பறவைக் காவடிகளும் வந்தவண்ணமிருந்தன.
இந்த வருடம் தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி போன்ற இடங்களிலிருந்து பறவைக்காவடிகளும், தூக்குக் காவடிகளும் ஆலயத்துக்கு வந்தன.
கொடிகாமம்– பருத்தித்துறை வீதி காவடிகளாலும் பறவைக் காவடிகளாலும் நிறைந்து காணப்பட்டது.
(த–100)

# கோயம்பேடு சிறையில் தப்பினார் இலங்கையர்

சென்னை, ஜூன் 15
சென்னை கோயம்பேடு சிறையில் இருந்து இலங்கையர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.
போதைவஸ்து கடத்தல் தொடர்பில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர் புழல் சிறைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
32 வயதான கொழும்பைச் சேர்ந்த சுரேஷ் என்றழைக்கப்படும் நிசாந்த் என்பவரே கடந்த வெள்ளிக் கிழமை அதிகாலை 12 மணியளவில் இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.
சிறுநீர் கழிக்கப்போவதாகக் கூறி அனுமதி கிடைத்தநிலையில் தமக்குப் பாதுகாப்பாக வந்த காவலாளியைத் தாக்கிவிட்டு அவர் பஸ் ஒன்றில் ஏறி தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை– இவர் 2014ஆம் ஆண்டு போதைபொருள் கடத்தல் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# விமானப்படைத் தளபதி நியமனத்தில் குழப்பம்


கொழும்பு, ஜூன் 15
விமானப்படைத் தளபதியை நியமிப்பதில் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
புதிய விமானப்படைத் தளபதியை நியமிப்பது தொடர்பில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கி வருகின்றனர்.
விமானப்படையின் இரண்டாம் நிலைத் தளபதியாகக் கடமையாற்றி வரும் அதிகாரிக்கு எதிராக நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விமானப்படை உத்தியோகத்தர் ஒருவரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
விமானப்படைத் தளபதியாக நியமிக்குமாறு இரண்டு அதிகாரிகளின் பெயர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.
கடந்த அரச ஆட்சிக் காலத்தில் மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டு வரும் ககன் புலத்சிங்களவின் பெயரும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இதனால் விமானப்படைத் தளபதியை நியமப்பதில் அதிகாரிகள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.
விமானப்படைத் தளபதியாகக் கடமையாற்றி வந்த எயார் சீப் மார்ஷல் கோலித குணதிலகவுக்கு பதவி உயர் வழங்கப்பட்டுள்ளதனால் அந்த வெற்றிடத்துக்கு விரைவில் ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டியுள்ளது.
தற்போதைக்கு கோலித குணதிலக விமானப்படை தளபதி பதவியையும் மேற்பார்வை செய்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)




# மொரட்டுவை கொள்ளை: 6 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூன் 15
மொரட்டுவை பிரதேசத்தில் உள்ள நிதி நிறுவனமொன்றில் கொள்ளையிட்டதாகக் கூறப்படும் பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட அறுவரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அந்த நிதி நிறுவனத்துக்குள் அண்மையில் புகுந்த ஆயுததாரிகள், அங்கிருந்த சேவையாளர்களை ஆயுதங்களைக் காண்பித்து அச்சுறுத்திவிட்டுப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம், தொடர்பில் ஏற்கெனவே கைது செய்யப்பட்ட இருவரிடம் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்தே இந்த அறுவரையும் கைது செய்துள்ளதாகவும் அதில் இருவர் பெண்கள் என்றும் தெரிவித்த பொலிஸார். அந்தஅறுவரும்பல்வேறுகொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவித்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பெல்ஜியத்தில் நடைபெறவுள்ள மணல் சிற்பக் கண்காட்சிக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடும் சிற்பிகள்

# சீனா மீது நடவடிக்கை ஒபாமா பரிசீலனை

வொஷிங்டன்,ஜூன் 15

அமெரிக்க இராணுவ இரகசியங்கள் திருடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அது தொடர்பாக சீன நாட்டினர் மீது நடவடிக்கை எடுக்க ஒபாமா பரிசீலனை செய்து வருகிறார்.

அமெரிக்காவில் ஓ.பி.எம். என்னும் 'ஆபிஸ் ஆப் பெர்சனல் மேனேஜ் மென்ட் நெட்வொர்க்'கில் சட்ட விரோதமாக நுழைந்து, முக்கிய இராணுவ இரகசியங்களை சீன நாட்டினர் திருடியதாக பரபரப்புத் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள், வீரர்கள், அவர்களது குடும்பத்தினர் பற்றிய தகவல்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிய வந்துள் ளது. 'ஆபிஸ் ஆப் பெர்சனல் மேனேஜ் மென்ட் நெட் வொர்க்'கில் புகுந்து தகவல்கள் திருடப்பட்டிருப்பது, இது இரண்டாவது முறை எனவும் கூறப்படுகிறது. ஏற்கனவே அமெரிக்க அரச துறை ஊழியர்கள், முன்னாள் ஊழி யர்கள் என 40 லட்சம் பேரின் தகவல்கள் திருடப்பட்டுள்ளன.

தற்போது, அமெரிக்க புலனாய்வுத் துறையினர், இராணுவத்தினர்,



ஒப்பந்தகாரர்கள் பாதுகாப்பு அனுமதிக்காக சமர்ப்பித்திருந்த இரகசியச் தகவல்களைக் குறி வைத்து, திருட்டு நடந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இரண்டு திருட்டுக் களையும் செய்திருப்பது ஒரே தரப்பினர்தான் எனவும் நம்ப கமான தகவல்கள் கூறுகின்றன.

இராணுவ வீரர்களின் கண் நிறம் உள்ளிட்ட தனிப்பட்ட அங்க அடையாளங்கள், நிதி நிலைமை, அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் களவாடப்பட்டுள்ளன. தற்போது இணையதளத்தில் புகுந்து தகவல்கள் திருடப்பட்டிருப்பதையடுத்து, இணையதளப் பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்து அமெரிக்க ஜனா திபதி ஒபாமாவின் நிர்வாகம் நேற்று முன்தினம் தீவிரமாகப் பரிசீலித்தது. 'ஆபிஸ் ஆப் பெர்சனல் மேனேஜ் மென்ட் நெட்வொர்க்'கில் புகுந்து திருடியவர்கள் மீது பொருளாதார தடை விதிக்கவும் ஜனாதிபதி ஒபாமா பரிசீலித்து வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

## சிங்கப்பூரில் ஊழியர்களுக்கு சம்பளப் பிரச்சினை அதிகரிப்பு

சிங்கப்பூர்,ஜூன் 15

சிங்கப்பூரில் வெளிநாட்டு ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை அதிகரித்துள்ளது.

சிங்கப்பூரில் பணிசெய்து வரும் வெளிநாட்டு ஊழியர்கள் 4 ஆயிரத்து 500 பேர் கடந்த வருடம் தங்களுக்கு வேலை வழங்கியவர்களுடன் ஏற்பட்ட பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என்று சிங்கப்பூர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து இந்த ஊழியர்கள் சந்தித்துவரும் பிரச்சினை அதிகரித்துள்ளது.

சிங்கப்பூரில் பணிசெய்துவரும் வெளிநாட்டவர்களில் அதிகளவானோர் தாங்கள் பணிசெய்யும் நிறுவனத்துடன் உள்ள பிரச்சினை தொடர்பாக முறைப்பாடு வழங்கியுள்ளனர் என்று சிங்கபூரில் சண்டே டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியீட்டுள்ளது.

சிங்கப்பூர் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகத் தகவலின்படி சுமார், 4 ஆயிரத்து 500 வெளிநாட்டு ஊழியர்கள் தமது பிரச்சினையைத் தீர்த்துவைக் கக் கோரி முறைப்பாடு வழங்கி யுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. கடந்த 2013 ஆம் ஆண்டு சுமார் 3 ஆயிரத்து 600 ஊழியர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் வெளிநாட்டுப் பணியாளர்கள் மையத்துக்கு மட்டும் இரண்டாயிரம் முறைப்பாடுகள் வந்துள்ளன. இவையனைத்தும் சம்பளப் பிரச்சினையுடன் தொடர்பு பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பாக அமைச்சகம் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளது. (ஐ)

## ஜேர்மனி- சீனா ரயில் பாதை ஆரம்பம்





பீஜிங்,ஜூன் 15

சீனாவுக்கும் ஜேர்மனிக்கும் இடையேயான சரக்கு ரயில் பாதையை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த சரக்கு ரயில் பாதை சீனாவின் வடகிழக்கிலுள்ள ஹார் பின் நகரிலிருந்து, ஜேர்மனியின் ஹாம் பர்க் நகர் வரை நீடிக்கப்பட்டுள்ளது. மங்கோலியா மற்றும் ரஷ்யா வழியாகச் செல்லும் இந்தப் பாதையில் சரக்குகள் 15 நாள்களுக்குள் ஒரு முனையிலிருந்து மறு முனையைச் சென்றடையும். இது நிலம் மற்றும் கடல் பாதை வழியாகச் அதே தூரத்தை [illegible] நேரத்தில் பாதியளவே என்று சீனாவின் அரச ஊடகம் தெரிவித்துள் ளது.

சீனா நூற்றுக்கணக்கான பில்லியன் டொலர் செலவில் தனது சாலை, ரயில் மற்றும் கடல் வழிப் பாதைகள் மற்றும் தொடர்புகளை விரிவு படுத்த எடுத்துவரும் பெரிய அளவிலான இலக்கை நோக்கிய ஒரு பயணத்தின் வெளிப்பாடாகவே இது பார்க்கப்படுகிறது.

அண்மைக் காலங்களில் ஐரோப்பா, மத்திய ஆசியப் பகுதியில் மட்டு மல்லாமல், தென் கிழக்கு ஆசியாவிலும் சீனா தனது போக்குவரத்து [illegible] குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவிரவாதிகளை அழிக்க அமெரிக்கா 58 கோடி செலவு

வொஷிங்டன்,ஜூன் 15

சிரியாவிலும், ஈராக்கிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற ஐ.எஸ். தீவிரவாதிகள் ஒட்டுமொத்த உலகுக்கே அச்சுறுத்தலாக விளங்குகிறார்கள். அவர்களுக்கு எதிராக அமெரிக்கக் கூட்டுப்படைகள் வான் தாக்குதல்களை நடத்தி வந்தாலும், அவர்களை முழுமையாக ஒடுக்க முடியவில்லை.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் இருந்து, சிரியா, ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான உலக நாடுகள் படை நடத்திய வான்வெளித் தாக்குதலில் 10 ஆயிரம் ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்கா தெரிவித் துள்ளது. இரு நாடுகளிலும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக வான்வழித் தாக்குதலில்ஈடுபட்டுள்ள அமெரிக்கா அதற்காக ஒருநாளைக்கு ரூ. 58 கோடிக்கு (இந்திய ரூபாய்) மேல் செலவு செய்கிறது என்றும் தெரிய வந்துள்ளது. இதுவரையில் சுமார் 17 ஆயிரம் கோடிக்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது என்று அமெரிக்கா தரப்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## உயிரிழந்த தலைவர் முதல்வராகத் தெரிவு

### மெக்ஸிக்கோவில் பரபரப்பு



மெக்ஸிக்கோ,ஜூன் 15

மெக்ஸிக்கோவில் இறந்த தலைவர் ஒருவர் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மெக்ஸிக்கோ நாட்டில் அண்மையில் நடந்த யுரெகுவாரோ நகர முதல்வர் தேர்தலில், இடதுசாரி அமைப்பான மொரெனா சார்பில் என்ரிக் ஹெர்னான் டஸ் என்பவர் போட்டியிட்டார். தனது தேர்தல் பரப்புரையில், அந்த நகரத்தில் செயற்படும் நைட்ஸ் டெம்பிளர் போதை மருந்து கடத்தும் கும்பலிடம் அரசு மண்டியிட்டுக் கிடப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

இந்த நிலையில் கடந்த மாதம் யுரெகுவாரோவில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்ட என்ரிக் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். எனினும் தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குச்சீட்டில் என்ரிக்கின் பெயர் இடம்பெற்றிருந்தது.


திட்டமிட்டபடி வாக்குப்பதிவும் முடிந்து கடந்த 7 ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டன. அதில் 39 சதவீத வாக்குகள் பெற்று முதல்வர்; தேர்தலில் என்ரிக் வெற்றிபெற்றார். அதையடுத்து இறந்த என்ரிக்குக்குப் பதிலாக அவரது தேர்தல் பரப்புரை துணை தலைவர் மார்கோ அன்டோனியோ கோன்சாலெஸ் புதிய முதல்வராகப் பொறுப்பேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சாவுத் தண்டனை நிறைவேற்றத் தடை

இஸ்லாமாபாத்,ஜூன் 15
பாகிஸ்தானில் அடுத்து வரவுள்ள புனித ரமழான் மாதத்தில் சாவுத் தண்டனைகளை நிறைவேற்றத் தடை விதித்து அந்த நாட்டு அரசு அறி வித்தல் வெளியிட்டுள்ளது.
கடந்த வெள்ளியன்று அந்த அறி விப்பை வெளியிட்ட அந்த நாட்டின் உள்துறை அமைச்சகம், அரசின் உத் தரவை நடைமுறைப்படுத்துமாறு மாகாண அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. புனிதமான ரம ழான் மாதத்தில் அதி காலை முதல் அந்தி சாயும் வரை உண்ணா நோன்பு இருக்கும் இஸ் லாமியர்கள் தண்ணீர் கூட பருகாமல் கடும் விரதம் மேற் கொள்வார்கள். அப்படிச் சிறப்புகள் மிக்க இந்த உன்னதமான மாதத் தில்சாவுத் தண்டனை நிறைவேற்று வதை நிறுத்திவைத்து பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.
கடந்த டிசெம்பர் மாதம் பெஷாவர் பாடசாலையில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் குழந்தைகள் உள்ளிட்ட 150 பேர் கொல்லப்பட்டதால்,சாவுத்தண்டனை நிறைவேற்றுவதற்கு எதிரான தடையை நீக்கி பாகிஸ் தான் அரசு உத்தர விட்டது. அன்று முதல் தொடர்ந்து அந்த நாட்டில் சாவுத் தண்டனை நிறைவேற்றப் பட்டு வருகிறது. இந்த நிலையில் சாவுத் தண்டனைக்கு எதி ரான தடையை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் பாகிஸ்தானை வலியு றுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தீவிரவாதிகளின் பிடியில் சிரியா மக்கள் தவிப்பு

டமாஸ்கஸ்,ஜூன் 15
சிரியாவில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற மக்களை நாட்டின் எல்லை யில் ஐ.எஸ். தீவிரவாதிகள் சிறைப் பிடித்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
சிரியாவில் ஐ.எஸ். தீவிர வாதி களுக்கும் அதிபர் பஷர் ஆசாத்தின் படைவீரர்களுக்கு இடையே பயங் கர மோதல் ஏற்பட்டுள்ளது. அத னால் அங்குள்ள அப்பாவி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அதனால் அதிகளவான மக்கள் அந்த நாட்டைவிட்டு வெளியேறி ஐரோப் பிய நாடுகளில் அகதிகளாகத் தஞ் சம் அடைந்து வருகின்றனர். இந்த நிலையில் சிரியாவின் அக் காகிலே எல்லைப் பகுதி அருகே ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என நூற்றுக் கணக்கானசிரியமக்கள்எல்லையைக் கடக்க முயற்சி செய்தனர். இன்னும் சில அடிதூரத்தில்எல்லையைக்கடந்து விடுவோம். பின்னர் துருக்கி நாட்டுக் குச் சென்று விட லாம் என்று மகிழ்ச் சியுடனும் தங்கள் உடைமையுடனும் காத்துக் கொண்டிருந்தனர்.
இந்த நிலையில் திடீரென அங்கு ஆயுதங்களுடன் வந்த ஐ.எஸ் தீவிர வாதிகள் அவர்களை நாட்டுக்குள்



மீண்டும் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டனர். அதனால் பயந்து போன மக்கள் மிகுந்த வருத்தத் துடன் மீண்டும் நாடு திரும்பினர்.
மேலும் சில அடி தொலைவில் துருக்கி எல்லையில் இருந்த அந்த நாட்டின் படைவீரர்கள் ஆயுதங் களுடன் இருந்த ஐ.எஸ். வீரர்களை தாக்கமுடியாமல் வேடிக்கைப் பார்த்து கொண்டிருந்தனர். இந்த நிலையில் கடந்த பத்து நாள்களில் மட்டும் 13 ஆயிரம் மக்கள் தல் அப்யாட் எல்லையைக் கடந்துள்ளதாக துருக்கி சுகாதார அமைச்சரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தேர்தல் பரப்புரையில் ஹிலாரி கிளிண்டன்



நியூயோர்க்,ஜூன் 15
அமெரிக்க நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனின் மனை வியும், முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலருமான ஹிலாரி கிளிண்டன், அடுத்த வருடம் அந்த நாட்டில் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் பரப்பு ரையை நேற்று முன்தினம் ஆரம் பித்துள்ளார்.
அந்த நாட்டின் மிகப்பெரும் நகரான நியூயோர்க்கில் உள்ள ரூஸ்வெல்ட் தீவில் தனது பரப்புரையைத் தொடங் கிய ஹிலாரி, தற்போதைய ஜனாதி பதி பராக் ஒபாமா, முன்னாள் ஜனாதி பதி ரூஸ்வெல்ட் மற்றும் தனது கண வர் பில் கிளிண்டன் ஆகியோரின் வழியைப் பின்பற்றி, மக்களுக்கான சேவைகளைச் செய்வேன் என்று தனது பரப்புரையில் தெரிவித்துள் ளார்.
ஜனாதிபதித் தேர்தலுக்காக ஜன நாயகக் கட்சி சார்பில் போட்டியிடு பவர்களில் ஹிலாரி கிளிண்டன் முன்னிலையில் உள்ளபோதிலும், அந்தக் கட்சியைச் சார்ந்த பெர்னி சாண்டர்ஸ், முன்னாள் மேரிலாண்ட் ஆளுநர் மார்ட்டீன் ஓ மால்லே மற்றும் முன்னாள் ரோட் தீவு ஆளுநர் லிங்கன் சாபி ஆகியோர் அவருக்குப் போட்டியாளர்களாக உள்ளனர். (ஐ)

# ஜேர்மனியில் அகதிகளுக்கு நிதியுதவி அதிகரிப்பு



பெர்லின்,ஜூன் 15
ஜேர்மனி நாட்டில் குடியேறியுள்ள மற்றும் எதிர்காலத்தில் குடியேறும் அகதிகளுக்கு செலவிடப்படும் நிதியை அதிகரிப்பதுடன் அவர் களுக்கு மருத்துவக் காப்பீடு வழங் கவும் அந்த நாட்டு அரசு தீர் மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஜேர்மனியில் நடைபெற்ற ஜி–7 உச்சிமாநாட்டுக்குப் பின்னர், ஜேர் மனியின் சான்சலரான ஏஞ்சலா மெர்க்கெல்தலைமையில் 16 அமைச் சர்களின் கூட்டம் அண்மையில் நடை பெற்றது. அந்தக் கூட்டத்தில், எதிர் வரும் 2016 ஆம் ஆண்டு முதல் ஜேர்மனியில் குடியேறியுள்ள மற் றும் எதிர்காலத்தில் குடியேறும் புலம் பெயர்ந்தவர்களின் நலனுக் காகச் செலவிடப்படும் நிதியை இரட்டிப்புச் செய்ய மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.
மேலும், அகதிகளின் வாழ்வா தாரம், பாதுகாப்பு மற்றும் அவர்க ளின் வளர்ச்சிப் பணிகளில் மத்திய அரசு மாநில அரசுகளுடன் இணைந்து நேரடியாக ஈடுபடும்.
மேலும், 3 மணி நேரம் நடந்த அந்தக் கூட்டத்தில், குடியுரிமை கோருப வர்களின் விண்ணப்பங்களை விரை வாக ஆய்வு செய்வதுடன், அவ்வாறு தெரிவானவர்கள் வேலை வாய்ப்பு கள் பெறுவதற்கு தகுந்த முறையில் பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டுள் ளது.
அகதிகளுக்கு தங்குமிட வச[illegible]ள், வாழ்வாதார செலவினங்[illegible]க் காகத் தற்போது செலவிடப்[illegible]ம் 500 பில்லியன் யூரோக்களை[illegible]ட கூடுதலாக நிதியை ஒதுக்க [illegible]ண் டும் என மாநில அரசுகள் ம[illegible]ய அரசுக்குக் கோரிக்கை முன்[illegible]த் ததைத் தொடர்ந்து இந்த [illegible]வு எடுக்கப்பட்டுள்ளது.
தற்போது குடியுரிமை கோ[illegible]ம் காலிகமாகத் தங்கியுள்ள [illegible]ர் களுக்குச் சராசரியாக 12 ஆ[illegible]து 500 யூரோக்கள் செலவிடப்ப[illegible]. மேலும், நடப்பாண்டில், 4 ல[illegible] 50 ஆயிரம் புலம்பெயர்ந்த[illegible] வருவார்கள் என எதிர்பார்ப்[illegible] சுமார் 5.6 பில்லியன் யூரோ[illegible] ஒதுக்கவேண்டும் என்றும் அ[illegible] ஆண்டுதோறும் 1 பில்லியன் யூ[illegible] களாக அதிகரிக்க வேண்டும் எ[illegible] கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள[illegible] இதைத் தவிர, அகதிகள் ம[illegible] புலம்பெயர்ந்தவர்களின் ஆ[illegible] கியத்தைப் பாதுகாக்கும் வ[illegible] அவர்களுக்கு மருத்துவக் கா[illegible] அட்டைகளும் வழங்க வே[illegible] என்றும் அந்தக் கூட்டத்தில் ஆ[illegible] சனை மேற்கொள்ளப்பட்டது. [illegible] களின் திட்டப்பணிகள் மற்றும் [illegible] வினங்கள் குறித்து விரி[illegible] தகவல்கள் அடுத்த வாரம் [illegible] பெறும் கூட்டத்தில் வெளியிட[illegible] என எதிர்பார்க்கப்படுகிறது.

## வாழ்வதற்கு சிறந்த நகரங்கள்

சர்வதேச அளவில் அடிப்படைத் தேவை கள் முதற்கொண்டு அனைத்து வசதி களுடன் மனிதர்கள் வாழத் தகுதி யான சிறந்த நகரங்களின் பட் டியல் தற்போது வெளியாகியுள்ளது.
2015 ஆம் ஆண்டுக்குரிய சிறந்த நகரங் களின் பட்டியலே நேற்று வெளியிடப் பட்டுள்ளது. உணவு, தண்ணீர், ஆரோக் கியம், பொழுது போக்கு அம்சங்கள், சுற்றுச்சூழல் உள்ளிட்ட மிக முக்கிய அம் சங்களின் அடிப்படையில் அந்த நகரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
அதில் ஜப்பான் நாட்டில் உள்ள டோக் கியோ முதல் இடத்தைப் பிடித்தது மட்டு மல்லாமல், டோக்கியோ உட்பட 3 நகரங்கள் அந்தப் பட்டியலில் இடம் பெற்று இருப்பது ஜப்பான் நாட்டுக் குப் கிடைத்துள்ள பெருமை யாகும்.
ஜப்பானைத் தொடர்ந்து, ஸ்பெயின் நாட்டின் 3 நகரங்கள் இந்தப் பட்டி யலில் இடம் பெற்றுள்ளன. (ஐ)

## உக்ரைனில் போர் நிறுத்தம் மீறல்

கிவ்,ஜூன் 15
கிழக்கு உக்ரைனில் தன்னாட்சி அதிகாரம் கேட்டு ரஷ்ய ஆதர வாளர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்கள் கிளர்ச்சிப் படை அமைத்து உக்ரைன் இராணுவத்துடன் போரிட்டு வருகின்றனர். அதில் ஏராளமானவர்கள் உயிரி ழந்தனர்.



அதனைத் தொடர்ந்து உக்ரைன், ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ் நாடு கள் இணைந்து சமரசப் பேச்சை நடத் தினர். எனவே, 4 மாதங்கள் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.
இந்த நிலையில் கிழக்கு உக்ரைனில் கிளர்ச்சியாளர்கள் பேர்ா் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதல் நடத்தி யுள்ளதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது. டொனெஸ்டக் விமான நிலையம் அருகே டாங்கிகள் மூலம் கிளர்ச்சியாளர்கள் குண்டு வீசினர். அந்தக்குண்டுகள் குடியிருப் புகளின் மீது விழுந் துள்ளன.
மேலும் டொனெஸ்ட்க் அருகே யுள்ள ஆக்டியா பிரிஸ்கி கிராமத் திலும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர். 3 மாவட்டங்களின் முக்கிய நகரங்களில் குண்டு வீச்சு நடத்தியுள்ளனர். அந்தத் தாக்குதல் களில் 6 சமூக சேவகர்கள் உயிரிழந் துள்ளனர். அவர்கள் உக்ரைன் ஆதர வாளர்கள் ஆவர். மேலும் 14 பேர் காயம் அடைந்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணி வைத்தீசுவரக் குருக்கள்

# மாணிக்கவாசகர்

சைவ சமயத்தவர் நின்றும் கிடந்தும் என்றும் எப்போதும்மனங் கசிந்து உருகிப் பாடுவதற்கமைய இனிமையான அற்புதமான பாடல்களைப் பாடியருளியவர் மாணிக்கவாசகர். பாண்டியருக்கு வழிவழியாக மந்திரியாக இருந்த பிராமணர் மரபிலே வந்த மாணிக்க வாச கரும் மந்திரியாயினார்.

மந்திரியான மாணிக்கவாசகர் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பெற்று தீட்சை உப தேசம் முதலியன வழங்கப் பெற்று மதுரமான திருவாசகப் பாடல்களைப் பாடியருளும் உணர்ச்சியும் ஊட்டப் பெற்றார். இறையருள் உள்ளே நின்று ஊட்ட ஊட்ட அருள்மயமான திருவாசகப் பாடல்கள் அருவி நீர்போல அவர் வாயிலிருந்து அருமையாக அமைவாகச் சொரிந்தன.

தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமானைச் சுவைத்த மாணிக்க வாசகர் சுவாமிகள் தாம் கொண்ட சுவையை நாமுண்டு பயன் பெறுமாறு 658 பாடல்களில் பாடியருளியுள்ளார்.

திருவாசகம் மனத்தைக் கரைத்து மலத்தைக் கெடுக்கும். அது உள்ளத்தை உருக்கும் உயர் மொழி. உடம்புக்குத் தேன் என்ன செய்யுமோ அதற்கு மேலாகத் திருவாசகம் உயிருக்கு உறுதியும் உய்தியும் தரும். மலம் கட்டு விடப்பட்ட வேளையில் வந்து சொரிந்த ஞான விளக்கமே திருவாசகம். திருவாசகம் ஒளிவீசும் கைவிளக்கு. அது குன்றின் மேலிட்ட பெருவிளக்கு.

திருவாசகம் உலகப் புகழ்பெற்ற பக்தி நூல். அதன் இனிமையை மூலத்திலே சுவைப்பதற்காகத் தமிழ் படித்த பிறமொழியாளர் பலர். எல்லோரும் திருவாசகம் படித்திருத்தல் வேண்டும் என்று மதப் பெரியார் ஒருவர் (ஜி.யு.போப்) தம் மத போதகர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளதாகவும் அறியப்படுகிறது. தமிழ் நாட்டிலும் வட இலங்கையிலும் வாழும் சைவ சமயத்தவர் திருவாசகத்தை எவ்வாறு போற்றிப் படிக்கிறார்கள் என்றும் திருவாசகம் சைவசமயத்தவருடைய உதட்டிலே உலாவும் சிறப்பையும் அந்தப் பெருந்தகையாளர் போற்றியுள்ளார்.

திருவாசகத்துக்குப் பல திருநாமங்கள் வழங்குகின்றன. அவையாவும் அடியார்களால் ஆராமையோடு வழங்கப்பெற்றனவாகும். மணிவாசகம், வாசகமாலை, மதுரவாசகம், வாசகத்தேன் என்பன திருவாசகத்துக்கு வழங்கப்படும் வேறு திருநாமங்கள்.

திருவாசகத்தை ஒரு முறை ஓதினாலும், கேட்டாலும் கருங் கல்லுப் போன்ற கடின மனமும் கசிந்துருகிவிடும். திருவாசகத்துக்கு உருகாதவர் ஒரு வாசகத்துக்கும் உருகார். உயிர்த்தன்மை கெட்டுச் சிவத்தன்மை பெறுவதற்கு உருக்கமான பாடல் திருவாசகம்.

> மந்திரியான மாணிக்கவாசகர் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பெற்று தீட்சை உப தேசம் முதலியன வழங்கப் பெற்று மதுரமான திருவாசகப் பாடல்களைப் பாடியருளும் உணர்ச்சியும் ஊட்டப் பெற்றார். இறையருள் உள்ளே நின்று ஊட்ட ஊட்ட அருள்மயமான திருவாச கப் பாடல்கள் அருவி நீர்போல அவர் வாயிலிருந்து அருமை யாக அமைவாகச் சொரிந்தன.



அலைந்து திரிகின்ற மனத்தை ஆண்டு அதனை ஓடித்திரிய விடாமல் ஓயவைப்பது திருவாசகம். திருவாசகத்தில் வரும் சொற்களின் அமைவால் உண்டாகும் ஒருவகை ஓசைநயம் எவரையும் இறுகப் பிணித்து விழுமியப் பொருளை விளக்குகின்றது.

திருவாசகம் சிவபெருமானின் பழமையைக் கூறும். இறைவன் ஆன்மாக்களின் மீது கொண்ட பெருங்கருணையைக் கூறும். இறைவனின் தூல சூக்குமத் தன்மையைக் கூறும். இறைவன் மீது ஆன்மாக்களின் பக்தி கொள்ளும் முறை உலகப்பற்றை விடுத்து இறையனுபவம் பெறும் முறை முதலியவற்றைக் கூறும்.

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய திருவாசகத்தை எமக்கு அருளிய மாணிக்க வாசகரின் குருபூசைத்தினம் இன்றாகும். இந்தத் தினத்தில் அவரை வணங்கி அவரது அருள் பெற்றுய்வோமாக.

# மனந்தளரா எம்மக்கள்

வலி.வடக்கே நீ வளங்கொழித்து
வாழ்வாங்கு வாழ்ந்து நின்றாய்!
ஈழத்திருநாட்டின் யாழ்.
மண்ணின்
ஒளிவிளக்காய் நீ இலங்கி
நின்றாய்!

சிவந்த நிறம் கொண்ட சிறப்பான
மண் வளமும்
பச்சைப் பசேலென்ற பாங்கான
வயல்களும்
சிலுசிலுத்துத் தலையாட்டும்
தென்னை மரங்களும்
ஓங்கி உயர்ந்து நிற்கும் கற்பக
தருக்களும்
தீங்கனிகள் தங்குநிற்கும் மா,
பலா, வாழைகளும்
எமைச்சூழ நிமிர்வுடனே நாம்
அன்று வாழ்ந்திருந்தோம்.

எழில்நீலப் பட்டாடை கட்டி
எழில்கோலம் காட்டிநின்று
கடற்கரை மணலை வந்து
முத்தமிடும் கடலன்னை
பொற்காசு வாரிவழங்கும்
புண்ணிய மாதாவன்றோ!
முத்துக்கள் விளைந்து நிற்கும் எம்
முத்தான கடலைப் போன்று
மண்ணில் வேறொங்கும் ஓர்
கடலினை யாம் காணவில்லை.

சிப்பிகள், சங்குகள் அங்கே
சிதறியே சேர்ந்திருக்க
சில்லென்ற தென்றல் காற்று
மெல்லெனத் தழுவிச் செல்ல
அலைகடலின் கரையினிலே
ஆவலுடன் கால்பதித்து
நாம் அடைந்த இன்பத்திற்கோ
ஈடிணை ஏதுமில்லை

வான்முட்டும் கூரைகொண்ட
சிமெந்துத் தொழிற்சாலையும்,
கப்பல்கள் தங்கி நிற்கும் அழகான
துறைமுகமும்,
துறைமுகத்தின் அருகினிலே
உயர்ந்து நிற்கும் வெளிச்சவீடும்,
எம்முடைய உடைமையென்று
எண்ணி யாம் களித்திருந்தோம்.
இத்தனைக்கும் பேரிடியாய்
போர் ஒன்று வந்ததம்மா
அத்தனையும் நாம் இழந்து
ஏதிலிகள் ஆகிவிட்டோம்.

நாம் பிறந்த மண்ணைவிட்டு,
நாம் தவழ்ந்த வீட்டைவிட்டு,
சேர்ந்து வாழ்ந்த சுற்றம் விட்டு,
சேர்த்து வைத்த செல்வம் விட்டு,
கரங்களில் கிடைத்தவற்றோடு
கண்களில் நீர் பெருக்கெடுக்க
எங்குசென்று வாழ்வதென்று
எவ்வழியும் புலப்படாது,
ஊரைவிட்டு
இடம்பெயர்ந்தோம். திகைத்து
நின்றோம்,
பின் தெளிந்து வாழ்தோம்.

இடம்பெயர்ந்த நாள் முதலாய்
எம்மக்கள் பட்ட துன்பம்
ஏட்டில் பொறித்திடவே எம்மிடம்
ஒரு வார்த்தையில்லை.
எத்துயர் வந்திடினும்,
அத்தனையும் தாங்கி நிற்போம்
மீண்டும் எம் ஊர்செல்வோம்,
என்றுதானே எண்ணுகின்றார்
மனந்தளரா எம்மக்கள்.

*திருமதி. புவனராணி*
*சிவயோகராசா, மயிலிட்டி*

# மோட்டார் சைக்கிள்களுக்கான புதுவகை ரயர்கள்



நவீன பண்புகளுடன் கூடிய புதிய உயர் செயற்பாடுகள் கொண்ட நான்கு வகை ரயர்கள் கண்ணைக் கவரும் வடிவமைப்புடன் ஏஸியன் ரயர்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தால் இலங்கையில்; அறிமுகம் செய்யப் பட்டுள்ளன. சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் அண்மையில் தொடங்கிய புதிய உற்பத்தி நிலையத்தில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

Gripp என பெயரிடப்பட்டுள்ள நான்கு அளவுகளிலான இந்த புதிய ரயர்கள் இலங்கை வீதிகளில் காணப்படும் 30 வகையான மோட்டார் சைக்கிள் வகைகளுக்கு உகந்தவையாகக் காணப்படுகின்றன. மோட்டார் சைக்கிள் பிரிவில் சியெட்டின் பங்களிப்பை இது கணிசமாக அதிகரிக்கவுள்ளது.

Gripp 3.00–18(TT) ரயர்கள் TVS ஸ்டார் ஸ்போர்ட், TVS ஸ்டார் சிற்றி, ஹீரோ டோன், TVS மெட்ரோ, யமஹா YBR, ஹீரோ எச்சீவர், ஹீரோ கிளாமர், ஹீரோ பெஷன்புரோ, பஜாஜ் கெலிபர் குரோமா, ஆகிய மோட்டார் சைக்கிள்களுக்கு பொருத்தமானவை என்று கம்பனி அறிவித்துள்ளது.

3.00–17 (TT) Gripp ரயர்கள் பஜாஜ் பிளடினா, யீளீம் 125, டிஸ்கவரி 100, மற்றும் பொக்ஸர், டிஸ்கவரி 112, TVS ஜீவா, ஸ்டார் ஸியீ, மற்றும் விக்டர் GLX மோட்டார் சைக்கிள்களுக்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

Gripp 100/90–17 (tubeless) ரயரானது ஹொண்டா CBR ஸ்டன்னர், ஹொண்டா யுனிகோர்ன், TVS பிளேம் SR 125, மற்றும் பிளேம் DS, யமஹா SXdX, பஜாஜ் பல்ஸார்135 LS, டிஸ்கவர் DTS, பல்ஸார் 150 ஆகிய மோட்டார் சைக்கிள்களுக்காக வடிவமைக்கப் பட்டுள்ளன. நான்காவது புதிய வகையான Gripp 100/90 – 18 (Tubeless) ஹொண்டா யுனிகோர்ன் ES, மற்றும் ஹீரோ கரிஸ்மா ZMR என்பனவற்றுக்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

ரயரை சுதந்திரமான முறையில் சுழல வைக்கும் பண்பினை உறுதி செய்யும் வகையில் வலிமையான பிடியினை கொண்டதாக இந்தப் புதிய உற்பத்திகள் அமைந்துள்ளன. வளைவுகளில் திரும்பும் போது அதற்கேற்றவாறு வேகத்துக்கு ஈடு கொடுக்கும் வகையிலும் இவை அமைந்துள்ளன. ஈரமான மற்றும் உலர்ந்த தரைகளில் தேவையான கட்டுப்பாடுகளை இலகுவாக மேற்கொள்ளத்தக்கதாகவும் இவை அமைந்துள்ளன.

சியெட் களனியின் வளாகத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள ஏஸியன் ரயர்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் புதிய உற்பத்தி நிலையம் உள்ளூர் மற்றும் சர்வதேச தரத்திலான மோட்டார் சைக்கிள் ரயர்களை உற்பத்தி செய்யக் கூடிய அதி நவீன வசதிகளைக் கொண்டுள்ளது. 17 அளவுகளில் வருடாந்தம் 162000 டயர்களை உற்பத்தி செய்யக் கூடிய ஆரம்ப நிலை ஆற்றலை அது கொண்டுள்ளது. புதிய முறைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் இந்த ரயர்கள் உள்ளூர் நிலைமைகளுக்கு மிகவும் ஈடுகொடுக்கக் கூடியவையாகும்.

சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் ஒரு அங்கத்துவ நிலையம் என்ற வகையில் இந்த புதிய உற்பத்தி பிரிவு ரயர் இறக்குமதியை மேலும் குறைக்க வழியமைத்துள்ளது. சியெட் ஏற்கனவே ரயர் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதில் கணிசமான பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. அத்தோடு ஏற்றுமதிச் சந்தையில் அதிக பங்களிப்புச் செலுத்தி மோட்டார் சைக்கிள் டயர் பிரிவில் தனது சந்தை நிலையை மேலும் ஸ்திரப்படுத்தவும் வழி வகுத்துள்ளது.

சியெட் களனி நிறுவனம் தற்போது இலங்கையின் மோட்டார் சைக்கிள் சந்தைப் பிரிவில் 17 வீத பங்களிப்பைக் கொண்டுள்ளது. இது தவிர ரேடியல் பிரிவில் 30 வீதம், ட்ரக் மற்றும் இலகு ட்ரக் பிரிவில் 52 வீதம், முச்சக்கர வண்டி பிரிவில் 48 வீதம், விவசாய துறை டயர் பிரிவில் 73 வீதம் என தனது சந்தைப் பங்களிப்பினை அது கொண்டுள்ளது. தற்போது இந்தியாவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள சியெட் உலகளாவிய ரீதியில் 110 நாடுகளில் நிலைகொண்டுள்ள ஒரு வர்த்தக முத்திரையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுதலுக்குரிய நீதிமன்ற அலுவலர்கள்

காணி வழக்கொன்றின் தீர்ப்புப் பிரதியைப் பெறுவதற்காக யாழ். மாவட்ட நீதிமன்ற அலுவலகத்துக்குச் சென்றிருந்தேன்.

அந்தத் தீர்ப்பின் பிரதி எனக்கு அவசரமாகத் தேவைப்படுவது தொடர்பாக எனது சட்டத்தரணி இரண்டு தினங்களுக்கு முன்னால் அந்த அலுவலகத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் தெரிவித்திருந்தார். எனக்கும் அது அவசரமாகத் தேவைப்பட்டது. இந்த நிலையில் நேற்றைய தினம் நான் அங்கு சென்றிருந்தேன். உரிய பணத்தைச் செலுத்திவிட்டு சிறிது நேரம் என்னைக் காத்திருக்கச் சொன்னார்கள். நானும் பொறுமையாகக் காத்திருந்தேன். குறிப்பிட்ட நேரத்தில் இந்தப் பணிகளுக்குப் பொறுப்பான பெண் உத்தியோகத்தர் என்னை அழைத்து தீர்ப்பின் பிரதியைக் கையளித்தார்.

அந்த அலுவலகத்தின் பொறுப்பதிகாரியும் ஒரு பெண்தான் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் இருவரும் கடமையுணர்வுடன் செயற்பட்டு உரிய வேளையில் எனது தேவையை நிறைவு செய்தமை என்னை மெய்சிலிர்க்க வைத்து விட்டது. இத்தகைய உத்தியோகத்தர்கள் அலுவலகங்களில் கடமையாற்றும் போது பொதுமக்கள் சிரமங்களுக்கு முகம் கொடுக்காமல் விரைவாகத் தமது அலுவலகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். இவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

அரச அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் இந்த இரண்டு பெண் உத்தியோகத்தர்களையும் உதாரணமாகக் கொண்டு செயற்படுவார்களாயின், மக்களுக்கு மிகச் சிறந்த சேவையை வழங்க முடியும். அத்துடன் அரச அலுவலர்கள் தொடர்பாகத் தெரிவிக் கப்படும் விமர்சனங்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

*மா. குணபாலன் கொக்குவில்*

# வாசகர் திருமுகம்



## வாய்மண்

அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றபின் அறுபது வயதுடைய எனது வீட்டைத் திருத்துவதற்கு வங்கி ஒன்றில் கடன்கேட்டிருந்தேன். வங்கி உடனடியாகவே மூன்று லட்சம் ரூபாவை எனக்கு கடனாக வழங்கியது.

வீடு கட்டுவதற்கு பணத்துக்கு அடுத்தபடியாகத் தேவைப்படுவது மணல். மணல் விடயம் மர்மமாகவே உள்ளது. இதுபற்றி விசாரிப்பதற்காகப் பிரதேச செயலகத்துக்குச் சென்றிருந்தேன். அதிகாரி ஒருவரை விசாரித்ததில் மணலுக்கு அனுமதிப்பத்திரம் (பெமிற்) வழங்குவதற்கான எந்த நடவடிக்கையும் இங்கு எடுக்கப்படவில்லை. இதுபற்றி திட்டமிடல் கிளையில் விசாரித்துப் பாருங்கள் என்றார்.

திட்டமிடல் கிளையில் அதிகாரி கண்ணாடிக் கூண்டில் அடைக்கப்பட்டிருந்தார். மேசையின் முன்புறத்தில் உள்ள கதிரையில் அதே அலுவலகத்தில் கடமையாற்றும் பெண் அலுவலர் அமர்ந்து அலுவலருடன் உரையாடிக் கொண்டிருந்தாள். அவர்களின் கடைக்கண் பார்வை என்மீது விழுவதாக இல்லை. வெளியே நின்றிருந்த முதியவர் கூறினார்; நான் அரை மணித்தியாலமாக இதிலை காவல் நிக்கிறன் ஐயா! ஏறெடுத்துப் பார்க்கிறார் இல்லை என்று. இதுவெறும் வாய் மண்தான் என்று புறுபுறுத்துக்கொண்டு அந்தவிடம் விட்டு நீங்கினேன்.

இது ஒரு விடயத்தை மிகத்தெளிவாகச் சொல்கிறது. முன்னரெல்லாம்...... நிதியம்தான் மக்களுக்கு மணலை வழங்கியது. இயற்கை அன்னை தருகின்ற மண்ணை அதிகவிலைக்கு விற்று மக்களைக் கொள் ளையடித்தார்கள் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால், மணல் விநியோகம் கிரமமாக நடைபெற்றது. மணல் தேவையானோருக்கு பெமிற் மூலம் மணல் விநியோகிக்கப்பட்டது. கள்ள மணல் விநியோகம் இருக்கவில்லை.

இந்த நிதியத்துக்கு மட்டும்தான் மணல் விநியோகத்தை மேற்கொள்ளும் திறமை, ஆற்றல் உள்ளது என அதிகாரிகள் கருதுகின்றார்களா? அவர்களால் இலகுவில் செய்ய முடிந்ததை ஏன் மற்றவர்களினால் செய்யமுடியவில்லை? கள்ள மணல் கூடிய விலையில் தாராளமாகக் கிடைக்கிறது. பெமிற் இல்லாமல் இந்தக் கள்ள மணல் வியாபாரம் எப்படிச் சாத்தியமாகிறது? கள்ள மணல் வியாபாரத்தை அரச அதிகாரிகள் ஊக்கு விக்கின்றார்களா? அதனால் இவர்களுக்கும் கொமி ஷன் கிடைக்கின்றதா?


பிரதேச சபைகள், பிரதேச செயலகம், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாகாணசபை ஆகியன என்ன செய்கின்றன? மாகாண சபை வந்துவிட்டால் மக்களின் பிரச்சினைகள் பல தீர்ந்துவிடும் என்றுதானே பதவிக்கு வந்தார்கள்! பதவிக்கு வந்து எவ்வளவு காலமாயிற்று? இந்த அற்ப பிரச்சினையைக்கூட மாகாண சபையால் தீர்த்து வைக்கமுடியவில்லை. எங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. தந்த அதிகாரத்தையும் பறித்துவிடுகிறார்கள். எங்களைச் சுதந்திரமாக இயங்க விடுகிறார்கள் இல்லை. போதிய பணத்தைத் தருகின்றார்கள் இல்லை. எங்களை அதிகாரம்பண்ணி அடிமைகளாகவே வைத்திருக்கிறார்களென தினமும் ஒப்பாரி வைப்பதில் என்னபயன்?

பல ஆண்டுகளின் பின்னர் தமது சொந்த மண்ணில் மீள்குடியேறிய மக்கள் வீடுகட்ட மணல் இல்லாமல் தவிக்கின்றார்கள். வீடுகட்ட நிதி உதவித்திட்டம் கிடைத்த மக்கள் வீட்டைக் கட்டமுடியாது அங்கலாய்கிறார்கள். வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தையும் கொண்டு போனது போலாயிற்று எங்கள் நிலை.

நல்லாட்சி என்பது உச்ச அரச அதிகாரத்திலிருந்து பிறப்பதன்று. அது அடிமட்டத்தில் மக்கள் மத்தியில் உருவாகி மேல்நோக்கிச் செல்ல வேண்டும். எங்கள் மக்களோ ஒவ்வொரு தேவைக்கும் நாளாந்தம் நாயாய் அலைகிறார்கள். அதிகாரிகளோ மக்கள் வரியில் சம்பளத்தை மாதாமாதம் பெற்றுக்கொண்டு சுகபோகம் அனுபவிக்கின்றார்கள். மாகாண சபையினரோ கிடைக்கின்ற வரப்பிரசாதங்கள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமெனத் துடிக்கிறார்கள். அறிக்கைகளை மட்டும் நாளாந்தம் விடுக்கிறார்கள். இப்போதேல்லாம் மழை எப்போது பெய்யும் எனச் சரியாகச் சொல்லலாம். ஆனால் வீடு கட்டுவதற்கான மணல் எப்போது மக்களை வந்தடையும் என்பது கடவுளுக்கு மட்டும் தான் வெளிச்சம்.

*சிவன் நல்லூர், யாழ்ப்பாணம்.*

## கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# ஏன் இந்தப் பிடுங்குப்பாடு?

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களை, தென்னிலங்கைக்கு அழைத்து அவர்களுக்குத் தனித்து நிதி வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது எமக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் பிளவை உருவாக்கும் முயற்சியோ என்று சந்தேகம் கொள்ள வேண்டியிருக்கின்றது. அத்துடன் வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் வடக்கு மாகாண சபையின் ஊடாகவே மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதியுடனான சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார். அதாவது, நாடாளுமன்ற உறுப்பினர்களும் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும். அதனால், வலி.கிழக்கு மற்றும் பூநகரிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக நிதி பெறப்பட்டுள்ளது. அந்த நிதி அரச அதிபர்கள் ஊடாக செலவு செய்யப்படும். அரசிடம் பின்வாசல் வழியாக நிதியைப் பெறவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவு நிதி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் இந்த நிதியை,. அமைச்சுக்களினூடாகப் பெற்று செயற்படுத்துகின்றோம் என்று தெரிவித்திருக்கின்றார்..

முதலமைச்சர் சொல்வதில் நியாயப்பாடுகள் இருப்பதைப் போலவே, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சொல்வதிலும் நியாயப்பாடுகள் இருக்கின்றன. இருவரும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்களாக (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) இருக்கின்ற போதும் ஒருங்கிணைப்புடன் - இணக்கப்பாட்டுடன் செயற்பட முடியவில்லை என்பதுதான் வேதனையான விடயம். இதனாலேயே இந்தப் பிடுங்குப்பாடு தோன்றுகின்றது.

இவற்றுக்கு அப்பால், வடக்கு மாகாண சபைக்கு கடந்த வருடம் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்பட்ட நிதியே முழுமையாகச் செலவு செய்து முடிக்கப்படவில்லை. (மாகாண சபையின் ஒவ்வொரு அமர்விலும் எதிர்கட்சித் தலைவர் தவராசா இதைப் பற்றிக் கேள்வி எழுப்புவதும், அதற்கு முதலமைச்சர் சமாளிப்பு பதில் வழங்குவதும் தொடர்கின்றது). இவ்வாறானதொரு நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நிதி வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருந்தால், குறித்த நிதியையும் செலவு செய்து முடித்திருப்பார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

வழங்கிய நிதியையே வைத்து இழுத்துக் கொண்டிருக்கும் மாகாண சபை அதிகாரிகள் இதனை எந்தளவு தூரம் செய்து முடிப்பார்கள் என்ற கேள்விக்குப் பதில் காண முடியாது. ஆளுநர் - பிரதம செயலாளர் மாற்றப்பட்டு ஆறு மாதங்கள் கடந்தும் அபிவிருத்தி வேலைகள் பூரணப்படுத்தப்படவில்லை.

வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் வடக்கு மாகாண சபையினால் மாத்திரமே முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற முதலமைச்சரின் எண்ணம் சரியானது. ஒரு முகப்படுத்தப்பட்ட ஓர் நிறுவனத்தின் - அரசின் - ஊடாக அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படும்போதுதான், அவற்றை ஒழுங்காகச் செய்து முடிக்க முடியும். அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமங்களுக்கு மீண்டும் அபிவிருத்தித் திட்டங்கள் செல்லாமல், பாதிக்கப்பட்ட - பின்தங்கிய கிராமங்களுக்கும் அபிவிருத்திக்கான வாய்ப்பு கிடைக்கும்.

வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்குரிய ஓர் அரசு அமைக்கப்பட்ட பின்னர், அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் அந்த அரசுக்கு - வடக்கு மாகாண சபைக்கு தெரியப்படுத்தப்படுவது நல்லது.

முன்னைய ஆட்சியில் மத்திய அரசு, வடக்கு அரசைப் புறக்கணித்து தான்தோன்றித்தனமாக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தது. இதன்போது, வடக்கு அரசுடன் மத்திய அரசு கலந்தாலோசித்து அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று, வடக்கு அரசு குரல் கொடுத்தபோது அதற்கு ஆதரவாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் எழுப்பியிருந்தனர். ஆனால் இப்போது, அவர்களே, வடக்கு அரசைப் புறந்தள்ளி தமது செயற்றிட்டங்களை முன்னெடுப்பதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

மேலும் வடக்கு அரசும், கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி முழுமையான அபிவிருத்தித் திட்டங்களை செய்து முடிக்ககக் கூடிய அளவுக்கு தமது அதிகாரிகளைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரே குடையில் இருந்து கொண்டு வடக்கு மாகாண சபை ஒரு பாதையிலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்னொரு பாதையிலும் பயணிப்பது, தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் பெற்றுத் தரப் போவதில்லை என்பதை இரண்டு தரப்பினரும் [illegible]

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புலம்பெயர் தமிழர் குறித்த கணிப்பும் பின்னணியும்

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் என்றாலே, ஏதோ பூதாகாரமான மனிதர்கள் என்பதாக உருவகப்படுத்தி தென்னிலங்கை சிங்கள மக்களை அச்சுறுத்தி அரசியல் நடத்திக் கொண்டிருந்த ராஜபக்ஷ தரப்பினரின் செயற்பாடுகளுக்கு ஆப்பு வைப்பது போல் வெளி யுறவு அமைச்சர் மங்கள சமரவீர சிலபல கருத்துக்களை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியிருந்தார்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் கொம்பு முளைத்த பிசாசுகளும் அல்லர். சிவப்பு நிற குள்ளரும் அல்லர். அவர்கள் நாட்டில் ஒரு கால கட்டத்தில் நிலவிய சூழ்நிலைகளின் காரணமாக வெளிநாடுகளில் குடியேறியவர்கள் என்பதாக அமைச்சர் விளக்கமளித்திருந்தார்.

தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய காலகட்டங்கள் அல்லது சூழ்நிலைகள் பிரிவினை கோரி ஆரம்பிக்கப்பட்ட உள்நாட்டுப் போருக்கு முன்னதாகவே தொடங்கியிருந்தது என்பதை எவரும் மறந்துவிட அல்லது மறைத்துவிட முடியாது. தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் பேரின வாதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட 50 பதுகளிலேயே அது ஆரம்பமானது. அது பின்னர் சில பல சமயங்களில் தமிழர்கள் குடும்பம் குடும்பமாகவும், பெரும் கூட்டங்களாகவும் நாட்டைவிட்டு ஓட வேண்டிய கட்டாயமாக காணப்பட்டது.

தென்னிலங்கையில் இருந்து தமிழர்களை அடித்து துரத்துவதையே நோக்கமாகக் கொண்ட பேரினத் தலைவர்களும் இருந்துள்ளார்கள். அப்படிச் செய்வதன் மூலம் ஆங்காங்கே தமிழர் வாக்குப் பலத்தை சிதைத்து விடவும் கூட முயற்சிக்கப்பட்டிருந்தது. இவை பற்றி முறையான விசாரணையொன்று நடத்தப்படு மானால் பல உண்மைகள் வெளிவரும். அவைகளுக்கு பின்னணி வகித்தவர்களின் விவரங்களையும் பெறக் கூடிய தாய் இருக்கும்.

இப்போதைய நிலையில், வெளிநாடு சென்ற தமிழர்கள் நாடு திரும்பவேண்டும் என்பதையே மைத்திரிபால அரசு விரும்புவதாக அமைச்சரின் கருத்து தொனிக்கிறது.

புலம்பெயர்ந்து சென்றவர்களில் அனேகர் வெளிநாடுகளில் மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, விஞ்ஞானிகளாக மட்டுமல்ல பெரும் எடுப்பிலான வர்த்தகர்களாகவும் தொழில் அதிபர்களாகவும்கூட விளங்குகிறார்கள். இவர்கள் எல்லாம் நாடு திரும்புவார்களாயின் நாடு பெரும் அளவில் பயன்பெறும். உள்ளூர் பொருளாதார மற்றும் வளர்ச்சித்துறைகளில் அவர்களின் பங்களிப்பை பெரிய அளவில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதாக அமைச்சரின் கருத்துக்கள் அமைந்திருந்தன.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடன் வெளியுறவு அமைச்சர் நடத்தியிருந்த சந்திப்பு குறித்துக் கடுமையாகச் சாடியிருந்தார். புலம் பெயர்ந்தவர்கள் நாடு திரும்புவதையும் அவர் கண்டித்திருந்தார். அதனால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதாகவும் அவர் எச்சரித்தார். அதே விதமான கருத்துக்களையே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாத்தறையில் நடைபெற்ற, அவருக்கு ஆதரவளிக்கும் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். இன்றைய அரசின் சமீப கால நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப்புலிகள் மீளவும் தலைதூக்க வழிவகுப்பதாக இருக்கின்றன என்பது அவருடைய வாதம்; ஞானம்.

தமிழீழ விடுதலைப்புலிகளை நாட்டிலிருந்து ஒழித்துக் கட்டியவர் தாமே என்று அவர் சிங்கள மக்கள் மத்தியில் மார்பில் தட்டிக் கூறிவருகிறார். ஆனால் அந்த செயலுக்கு கோத்தபாய ராஜபக்ஷ ஒரு பக்கம் தனக்கும் பங்கிருப்பதாக அடிக்கடி வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில், அதில் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்கே பெரும் பங்கிருப்பதாக இன்றைய அரசு கருதுகின்றது. அந்த வகையிலேயே ராஜபக்ஷ ஆட்சியினரால் அவருக்கு வழங்காமல் தடுக்கப்பட்டிருந்த கொடுப்பனவுகள் அனைத்தையும் வழங்கியதுடன், பீல்ட்மார்ஷல் என்று இராணுவத்துறையின் அதிஉச்ச பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்திருந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் சிறிபால டி சில்வாவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இன்றைய அரசு புலம்பெயர் தமிழர்களுடன் மேற்கொண்டுவரும் தொடர்புகளையும் அதனுடன் ஒட்டிய கூட்டங்களையும் விமர்சித்து என்னதான் உள்நாட்டில் சிங்கள மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி வாக்கு சேகரிக்க எத்தனித்தாலும், அவர்களால் செய்யமுடியாத அவர்கள் விரும்பாத, ஆனால் அவர்களுக்கு நன்மை விளைவிக்கும் ஒரு கருமத்தையே இந்த அரசு செய்துவருகிறது. அதுதான் நாட்டில் சகல மக்கள் மத்தியிலும் முரண்பாடுகளை அகற்றி நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சி. புலம் பெயர்ந்த தமிழர்களை நாடு திரும்பும்படி செய்ய எடுக்கப்படும் முயற்சியும் அதன் பாற்பட்டதே எனக் கருத இடமுண்டு.

நாட்டில் நல்லிணக்கத்தை மீள் உருவாக்கம் செய்வதில் இப்போதைய அரசு தீவிரமாக இறங்கியுள்ளது என்பதை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டுவதாகவும் இது இருக்கலாம்.

இந்த முயற்சியை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் ஐ.நா. மனித உரிமை சபையில் இவை பிரதிபலிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

எதுவானாலும், தமிழ்த் தரப்பினரின் செயற்பாடுகள் எந்தக் காரணத்தைக் கொண்டும், போர்க்குற்றமும் மனித உரிமை மீறல்களும் புரிந்தவர்களுக்கு சாதகமாக அமைந்து விடலாகாது. பாதிக்கப்பட்ட எம்மவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். ஒவ்வொரு நகர்வும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்பதைத் தமிழ்த் தலைவர்கள் கருத்தில் கொள்ளட்டும்.

# அமெரிக்க - சிறிலங்கா உறவுகள் தொடருமா?





தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் முதன்மை பிரதி உதவிச் செயலர் றிச்சார்ட் ஈ. கொக்லான்ட் அண்மையில் வோஷிங்ரன் அனைத்துலக வர்த்தக சபையில் உரை ஒன்றை நிகழ்த்தியிருந்தார். இவர் தனது உரையின் ஆரம்பத்தில் நேபாளம் தொடர்பாகவும் பின்னர் அமெரிக்க–இந்திய உறவு நிலை முன்னேற்றம் அடைந்தமை தொடர்பாகவும் குறிப்பிட்டார்.

இதைவிட சிறிலங்கா, பங்களாதேஷ், மத்திய ஆசியா, அமெரிக்காவின் வர்த்தக நலன்கள் மற்றும் அமெரிக்க அரசால் மேற் கொள்ளப்படும் வர்த்தக சார் செயற்பாடுகள் தொடர்பாகவும் கொக்லண்ட் எடுத்துக் கூறினார். இவரது உரை தரம் மிக்கதாகக் காணப்பட்டது. கொக்லண்ட் தனது உரையின்போது சீனா தொடர்பில் மென்மையான வார்த்தைகளைப் பயன்படுத்தியமை வரவேற்கத்தக்கதாகும்.

அமெரிக்க–சிறிலங்கா உறவு தொடர்பாக கொக்லண்ட் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:–

இந்தியாவின் தென்கிழக்குத் திசையிலிருந்து பாக்குநீரிணைக்குக் குறுக்காக 35 மைல்கள் தொலைவிலுள்ள சிறிலங்காத் தீவில் இடம்பெற்ற ஜனநாயகத் தேர்தல் அமெரிக்காவுடன் நல்லதொரு உறவைப் பேண வழிவகுத்தது. சிறிலங்காவில் தற்போது ஆட்சி செய்யும் புதிய அதிபர் ஏற்கனவே நடைமுறையிலிருந்த கடும்போக்கு அரசியல் மற்றும் குடும்ப முதலாளித்துவம் போன்றவற்றிலிருந்து நாட்டை மீட்டெடுத்து மீளிணக்கப்பாடு மற்றும் முழுமையான அபிவிருத்தி போன்றவற்றை முன்னெடுப்பதற்கான புதிய பாதையை நோக்கிநாட்டைக்கொண்டுசெல்கிறார். இதுவே எமக்கும் சிறிலங்காவுக்கும் இடையில் நல்லுறவைப் பேண வழிவகுத்துள்ளது

சிறிலங்காவின் தற்போதைய அதிபர் தேர்ந்தெடுத்துள்ள புதிய பாதையை நோக்கிச் செல்வதற்கும், சிறிலங்காவில் நல்லாட்சியைப் பலப்படுத்துவதற்கும் குறிப்பாக இதனுடைய நீதி மற்றும் நிதி நிறுவகங்கள் தொடர்பில் புதிய அதிபரால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துவதற்கு நாங்கள் நிறையத் திட்டங்களைக் கொண்டுள்ளோம். இந்தப் புதிய பாதையானது சிறிலங்கா வாழ் மக்களுக்கு நலன் பயக்கும் என்பதுடன் அமெரிக்க நலன்களுக்கும் துணை போகும். சிறிலங்காவில் நல்லாட்சியை மேம்படுத்துவதற்கும், மனித உரிமைகளை முன்னேற்றவும், இந்திய மாக்கடலின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தவும் சிறிலங்காவுடன் இணைந்து தற்போது எம்மால் பணியாற்ற முடியும் என கொக்லண்ட் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பந்திகள் கொக்லண்டால் ஆற்றப்பட்ட உரையில் காணப்படும் மிகவும் நம்பிக்கை தரும் பகுதிகளாகும்.

சிறிலங்காவில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அதிபரான மைத்திரிபால சிறிசேனவுடன் தனது நட்புறவை முறித்துக் கொள்வதற்கான எவ்வித சமிக்ஞைகளையும் ஒபாமா நிர்வாகம் காண்பிக்கவில்லை என்பது நிச்சயமாகும். சிறிலங்காவின் நீதி மற்றும் நிதி நிறுவகங்களை முன்னேற்றுவதற்கு அமெரிக்கா துணை நிற்கும் என கொக்லண்ட் தனது உரையில் குறிப்பிட்டுள்ளதானது சிறிலங்காவில் முன்னெடுக்கப்படும் ஊழல் விசாரணையை முதன்மைப்படுத்தியதாகும்.

அதாவது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்த போது நாட்டில் இடம் பெற்ற மிக மோசமான ஊழல் மோசடிகள் தற்போது மைத்திரி பால அரசினால் விசாரணை செய்யப்படுகின்ற நிலையில் அமெரிக்கா இதற்கு தனது ஆதரவை வழங்குவதாக கொக்லண்ட் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான பரப்புரையில் ஈடுபடுவந்த அண்மைய சில சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தன்னால் தலைமை வகிக்கப்படும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டுப்படுத்துவதில் சிறிசேன தற்போதும் சிக்கல்களுக்கு முகங் கொடுக்கிறார்.

சிறிலங்காவின் அரசியலில் தற்போது குழப்பமான காலமாகும். சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்து ஓகஸ்ட்டில் பொதுத் தேர்தலை முன்னெடுப்பார் எனக் கூறப்படுகிறது. இருப்பினும் இந்தத் தீர்மானத்தை இன்னமும் மைத்திரிபால சிறிசேன உறுதிப்படுத்தவில்லை.

தற்போதைய நாடாளுமன்றம் 2016 ஏப்ரல் வரை நாட்டை நிர்வகிக்க முடியும். ஆனால் சிறிசேன அரசுக்குள் ஏற்பட்டுள்ள குழப்பமே நாடாளுமன்றைக் கலைப்பதற்கான முக்கிய காரணமாகும்.

ராஜபக்ஷ அரசின் மீதான ஊழல் மோசடி விசாரணைக்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்குவது நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஷ தனக்கான ஆதரவு வாக்குகளை இழப்பதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக மஹிந்தவைப் போட்டியிட ஒரு போதும் அனுமதிக்கமாட்டேன் என சிறிசேன தெளிவாக அறிவித்துள்ளார். இருப்பினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலர் ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட வேண்டும் என விரும்புகின்றனர்.

இது தொடர்பில் ஒரு சாரார் ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை மேற்கொள்கின்றனர். இதன்மூலம் இவர்கள் ராஜபக்ஷவின் தலைமையில் பிறிதொரு கட்சியின் கீழ் போட்டியிடலாம் என ஊகிக்கப்படுகிறது.

சிறிலங்கா அதிபர் என்ற வகையில் சிறிசேனவின் நிர்வாகம் சிறப்பு மிக்கதாக இல்லாவிட்டாலும் கூட கண்ணியம் மிக்கதாக உள்ளது. வருகின்ற மாதங்களில் சிறிலங்காவின் அரசியலில் எத்தகைய மாற்றங்கள் வரவுள்ளன என்பதை எதிர்வுகூறுவது கடினமானதாகும்.


தற்போது, குறைந்தது இரண்டு விடயங்களாவது தெளிவாக உள்ளன. முதலாவதாக, சிறிசேன தன்னால் முடிந்தளவு தனது சொந்த அரசியற் கட்சிக்குள் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். இரண்டாவதாக, என்ன நடந்தாலும் சிறிசேன, ராஜபக்ஷவைப் போன்ற ஒரு ஆட்சியாளர் அல்லர்.

ஆகவே அமெரிக்க சிறிலங்கா உறவு இன்னமும் சில காலம் நீடிக்கும் எனத் தோன்றுகிறது. குறிப்பாக ராஜபக்ஷ மீண்டும் சிறிலங்காவின் ஆட்சியில் அமர்வதற்காக முன்னெடுக்கும் நடவடிக்கைகளை குழிதோண்டிப் புதைப்பதற்கு அமெரிக்கா தனது தடையற்ற ஆதரவை வழங்குவதன் மூலம் சிறிலங்காவுடன் தொடர்ந்தும் நல்லுறவைப் பேணமுடியும்.


*நன்றி –புதினப்பலகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலும் போர்க்குற்ற அறிக்கையும்







● சிலோன் ருடே நாளிதழில்
உபுல் ஜோசப் பெர்னாண்டோ

ஐக்கியநாடுகளின்பொதுச் செயலர் பான் கீ –மூன், சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேனவுக்குத் திடீரென தொலைபேசியில் அழைப்பு விடுத்தமைக்கான காரணம் என்ன என்பது தொடர்பாக கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் கடந்த வாரம் ஆராய்ந்தன.

பான் கீ – மூன் தனது தொலைபேசி உரையாடலின்போது மைத்திரிபால சிறிசேன அரசைப் புகழ்ந்து பேசிய போதிலும், செப்ரெம்பர் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடர் இடம்பெறுவதற்கு முன்னர் சிறிலங்காவில் பொதுத் தேர்தல் நடத்தப்படுமா என்பது தொடர்பாக அறிவதற்காகவே அவர், தொலைபேசியில் உரையாடியதாகக் கூறப்படுகிறது.

புதிய அரச பிரதிநிதிகளுடனேயே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் பங்கேற்பேன் என மைத்திரிபால சிறிசேன, ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் தெரிவித்ததாக செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. இந்தத் தகவலானது மைத்திரியும் பான் கீ–மூனும் பொதுத்தேர்தல் தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளமையை உறுதிப்படுத்துகிறது.

செப்ரெம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் இடம்பெறுவதற்கு முன்னர் சிறிலங்கா தனது பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய தேவையுள்ளதாக அண்மையில் சிறிலங்காவுக்கான உத்தியோக பூர்வ பயணத்தை மேற் கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி வலியுறுத்தியிருந்தார்.

சிறிலங்காவை விட்டு கெரி புறப்படுவதற்கு முன்னர் மறைமுகமாக மைத்திரி அரசுக்கு சாதகமான பொதுத்தேர்தலை நடத்துவதற்கு அமெரிக்கா ஆதரவாக இருக்கும் என்பதைத் தெரிவித்திருந்தார்.

சிறிலங்காவில் ஜனநாயகத்தைக் கட்டி யெழுப்புவதற்காக தங்களால் எதிர்கொள்ளப்படும் பல்வேறு சவால்களுக்கும் அதாவது பாரம்பரியத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ள சவால்கள் மற்றும் திறன் விருத்திக்காக எடுக்கப்படும் முயற்சிக்கும் நாங்கள் என்றும் ஆதரவளிப்போம்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நாங்கள் உங்களுக்கு ஆதரவு தர விரும்புகிறோம். காலத்திற்குகந்த வகையில் தேர்தலை நடத்துவதானது அரசு தனது கடப்பாடுகளைப் பின்பற்றுகிறது என்பதற்கான சிறந்ததொரு சமிக்கையாக இருக்கும் என சிறிலங்கா அதிபரிடம், அமெரிக்க இராஜாங்கச் செயலர் கெரி குறிப்பிட்டிருந்தார்.

> “உரிய காலத்துக்கு முன்னர் மைத்திரி அரசு தேர்தலை நடத்தி, பலமான அரசு ஒன்றை உருவாக்கினால், இவ்வாறான போர்க்குற்ற அறிக்கை தொடர்பான சவால்களுக்கு முகங் கொடுப்பதற்கான திட்டத்தை மைத்திரிபால சிறிசேன வரையமுடியும்.

சில வாரங்களின் முன்னர் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவும் பொதுத் தேர்தலை குறுகிய காலத்தில் நடத்துவது தொடர்பாக மோதிக் கொண்டனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாத கூட்டத் தொடருக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு அனைத்துலக சமூகமும் அமெரிக்க இராஜாங்கச் செயலரும் வலியுறுத்தியுள்ளதாக மங்கள சமரவீர சுட்டிக்காட்டியிருந்தார். பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பில் தீர்வை எட்ட வேண்டியது மைத்திரிபால சிறிசேனவின் பணியே அன்றி இது கெரியின் பணியன்று என ராஜித தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நலன்களை அடிப்படையாகக் கொண்டே தேர்தலை நடத்துமாறு கெரியும் பான் கீ மூனும் மைத்திரி மீது அழுத்தம் கொடுப்பதாக மைத்திரியின் விசுவாசிகள் கருதுகின்றனர்.

இது உண்மையாயின், ராஜபக்‌ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்பளிக்குமாறு சிறிலங்கா மீது கெரியும் பான் கீ – மூனும் அழுத்தத்தை வழங்குவது கடினமான செயலாகும்.

இவ்வாண்டு மார்ச் மாதத்தில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் சிறிலங்காவுக்கு எதிராக மேலும் நடவடிக்கை எடுக்காது தடுப்பதற்கு அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி கடுமையாக உழைத்திருந்தார். சிறிலங்காவுக்கு எதிரான போர்க்குற்ற அறிக்கையை வெளியிடுவதற்கான காலஅவகாசத்தை செப்ரெம்பர் வரை நீடிப்பதற்கு கெரி உதவியுள்ளார்.

போர்க்குற்றம் தொடர்பாக விசாரணை செய்வதற்கான உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை செப்ரெம்பருக்கு முன்னர் நடை முறைப்படுத்துவதாக சிறிலங்கா வாக்குக்கொடுத்த பின்னர் இதற்கெதிரான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் பிற்போடப்பட்டுள்ளது.

உள்ளகப் பொறிமுறை விரைவில் உருவாக்கப்படும் என மைத்திரி ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். செப்ரெம்பர் மாதத்திலும் உள்ளக விசாரணை அறிக்கையை வழங்காது, அதற்கப்பாலும் கால அவகாசத்தைக் கோர முடியும் என்ற நம்பிக்கையுடன் தான் மைத்திரி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாதக் கூட்டத் தொடரில் பங்கேற்கவுள்ளார் என்பதையே இவரது அறிவித்தல் சுட்டி நிற்கிறது.

இதற்கு முரணாக, செப்ரெம்பரில் சிறிலங்கா அரசு தனது உள்ளக விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்காது தட்டிக்கழிப்பதற்கும் இதற்காக மேலதிக காலஅவகாசத்தைக் கோருவதற்கும் ஜோன் கெரியால் கூட ஆதரவளிக்க இடமளிக்கப்படமாட்டாது என ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை ஓகஸ்ட்டில் சிறிலங்கா அரசிடம் கையளிக்கப்படும். இக்கால அவகாசத்துக்கு முன்னர் அனைத்துலக ஊடகங்களின் அழுத்தத்தின் ஊடாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டு விடுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

இந்த அறிக்கை மக்களின் பார்வைக்காக வெளியிடப்படும் போது, மஹிந்த ஆதரவாளர்களும் தேசப்பற்றாளர்களும் இதனைப் பயன்படுத்தி மைத்திரியின் தேர்தல் வெற்றியைக் குழப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு விடுவார்களோ என ஊடகங்கள் கருதுகின்றன.

போர்க் காலப்பகுதியில் பணியாற்றிய உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் மீது போர்க் குற்றம் சுமத்தப்பட்டால், மைத்திரி அரசு பொதுத்தேர்தலை முதன்மைப்படுத்தி பிறிதொரு தீர்மானத்தை முன்னெடுக்கலாம்.

உரிய காலத்துக்கு முன்னர் மைத்திரி அரசு தேர்தலை நடத்தி, பலமான அரசு ஒன்றை உருவாக்கினால், இவ்வாறான போர்க்குற்ற அறிக்கை தொடர்பான சவால்களுக்கு முகங் கொடுப்பதற்கான திட்டத்தை மைத்திரி பால சிறிசேன வரையமுடியும்.

செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னரும் பொதுத் தேர்தலின் முன்னரும் மைத்திரி உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்காது விட்டால், மஹிந்த ஆதரவுக் குழுக்கள் இந்த நகர்வை முறியடிப்பதற்காக திட்டங்களைத் தீட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மைத்திரி போரை வென்றெடுத்த வீரர்களை அவமதிப்பதாக மஹிந்தவின் விசுவாசிகள் தவறான விளக்கத்தைக் கற்பிக்க முற்படுவார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவும், மஹிந்த விசுவாசிகளைப் பலவீனப்படுத்துவதற்குமாக மைத்திரி பொதுத்தேர்தலைப் பிற்போட வேண்டும். ஆனால் பொதுத் தேர்தலுக்கு முன்னர் போர்க்குற்ற விவகாரம் தீவிர முற்றால், இந்தச் சூழலை மஹிந்த விசுவாசிகள் தமக்குச் சாதகமாக்கிக் கொள்வார்கள். இது நடந்தால், மைத்திரி தனது அரசியற் கட்சிக்குள் மட்டு மல்லாது தேசிய அளவிலும் பல வீனமடைகின்ற நிலை உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | | | | 8 | | | |
| 9 | 6 | | | | | 7 | | |
| | | | | 4 | | 5 | | |
| 8 | | | | | | 4 | 2 | |
| | | | | | | | 8 | |
| | 4 | | | 2 | | | 7 | 6 |
| | | 9 | 7 | | | 3 | 4 | |
| | | | | | | | 9 | 7 |
| 7 | | | | 1 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 7 | 6 | 3 | 9 | 2 | 1 | 4 |
| 6 | 1 | 3 | 8 | 4 | 2 | 7 | 5 | 9 |
| 4 | 9 | 2 | 1 | 5 | 7 | 3 | 8 | 6 |
| 3 | 6 | 9 | 5 | 7 | 1 | 8 | 4 | 2 |
| 2 | 5 | 8 | 4 | 6 | 3 | 1 | 9 | 7 |
| 7 | 4 | 1 | 9 | 2 | 8 | 5 | 6 | 3 |
| 9 | 2 | 4 | 7 | 8 | 5 | 6 | 3 | 1 |
| 1 | 3 | 5 | 2 | 9 | 6 | 4 | 7 | 8 |
| 8 | 7 | 6 | 3 | 1 | 4 | 9 | 2 | 5 |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளை யும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக் கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**

## நாளை

**ஆனி-01**

**செவ்வாய்க்கிழமை**

**16.06.2015**

**திதி:** அமாவாசை மு.இ. 08.14 வரை

**நட்சத்திரம்: ரோகினி கா.06.25 வரை**

**சுபநேரம்:** 10.23-11.53 வரை

**இராகுகாலம்:** 02.53-04.23 வரை

அமாவாசை விரதம்

# சத்துள்ள கீரையில் ஒன்று வெங்காயத்தாள்

எம்மில் பெரும்பாலோர் வெங்காயத்தாளை வாசனைக்காகவும், சுவையை மெருகூட்டவுமே உணவில் பயன்படுத்துகிறார்கள். சத்துள்ள கீரைகள் என்ற பட்டியலில் வெங்காயத்தாளை யாரும் இணைப்பது மிக அரிது. ஆனால் அதையும் தாண்டி வெங்காயத் தாளில் ஏராளமான சத்துக்கள் உள்ளன.

பெரும்பாலும் சீன உணவுகளில் வெங்காயத்தாள் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படுவதுண்டு. நீண்ட காலமாக வெங் காயத்தாள் சீன பாரம்பரிய மருந்துகளில் பயன்படுத்தப்படு கின்றன. வெங்காயம் போலவே வெங்காயத்தாளிலும் கூட கந்தகச்சத்து அதிகமாக உள்ளது. அதிக அளவிலான கந்தகச்சத்து பல சுகாதார நன்மைகளை வழங்குகிறது. இந்த இளந்தளிர் வெங்காயத்தாளில் குறைந்த கலோரி இருக்கின்றன.

மேலும் வெங்காயத்தாளில் பல விற்றமின்கள் நிறைந்துள்ளன. இது தவிர காபன், பொஸ்பரஸ், மக்னீசியம், பொட்டாசியம், குரோமி யம், மங்கனீஸ் மற்றும் நார்ச்சத்துக்களும் மூலங்களாக உள்ளன. நீரிழிவு நோயைக் கட்டுப் படுத்தும், புற்று நோயைக் குணப்படுத்தும்.

இந்த காய்கறிகளிலுள்ள விற்றமின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, உடலை நோயிலிருந்து பாதுகாக்கி றது. வெங்காயத்தாளில் உள்ள பெக்டின் என்னும் நீரில் கரையக்கூடிய கூழ்ம நிலை கார்போஹைதரேற், குறிப்பாக பெருங்குடல் புற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பைக் குறைக்கிறது. வெங்காயத்தாள் கண்நோய் மற்றும் கண் பிரச்சினை களுக்கு நல்ல தீர்வை வழங் குகிறது.

வெங்காயத்தாள் இதய ஆரோக்கியத்துக்கு நல்லது. அவைகள் உடலில் உள்ள கொழுப்புக்களைக் குறைக்க வும் மற்றும் அதனால் உண் டாகும் இதய நோய் அபா யத்தையும் குறைக்கின்றது. இந்த காய்கறிகளில் உள்ள சல்பர் சேர்மங்கள், இரத்த அழுத்த அளவுகளை குறைக் கவும் மற்றும் கட்டுப்படுத்த வும் உதவுகிறது. வெங் காயத் தாள் இரத்தத்தில் உள்ள கொழுப்பு அளவுகளையும் குறைக்க உதவுகிறது.

வெங்காயத்தாளில் உள்ள குரோமியம் சத்து நீரிழிவு நோய்க்கான சுகாதார நலன் களை வழங்குகிறது. இது இரத் தத்தில் காணப்படும் சர்க்கரை யின் அளவை கட்டுப்படுத் துகிறது மற்றும் குளுக்கோஸ் ஏற்புத் தன்மையை அதிகரிக் கிறது. மேலும் இதில் உள்ள புரோப்பைல் டைசல்பேட்டா னது, இரத்த சர்க்கரை அள வைக்குறைக்கமிகவும்பயனுள் ளதாக உள்ளது. வெங்கா யத்தாளில் உள்ள பக்ரீரியா [illegible] தடி [illegible]எதிர்த் துப் போராட உதவுகிறது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## உன்னுடைய மனமும் புத்தகமே

இரசாயனமும் இயற்கை விஞ்ஞானமும் எப்படி இந்தப் பௌதிக உலகம் பற்றிய உண்மைகளைக் கையாள்கின்றனவோ, அதைப் போலவே மதம் அரிய தத்துவ உண்மைகளைக் கையாள்கிறது. ஒருவன் இரசாயனத்தைக் கற்க இயற்கை என்னும் புத்தகத்தைப் படிக்க வேண்டும். உன்னுடைய மனம், இதயம் ஆகியவைதாம் மதத்தைக் கற்பதற்கு நீ படிக்க வேண்டிய நூல்களாகும்.

ஞானி பெரும்பாலும் பௌதிக விஞ்ஞானம் பற்றித் தெரியாத வராக இருக்கிறார். ஏனென்றால், அவர் தமக்குள் இருக்கும் புத்தகத்தைப் படிக்ககிறார். அது பௌதிக விஞ்ஞானத்தைத் தெரிந்து கொள்வதற்குத் தவறான புத்தகமாகும். விஞ்ஞானியும் கூடப் பெரும்பாலும் மதத்தைப் பற்றித் தெரியாதவராக இருக் கிறார். ஏனென்றால் அவரும் கூடத் தவறான புத்தகத்தையே படிக்கிறார்; அதாவது அவர் தமக்கு வெளியே உள்ள புத் தகத்தைப் படிக்கிறார்.





| | மருதனாமடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 120 | 60 | 80 | 80 | 80 | 30 |
| கத்தரி | 80 | 80 | 80–100 | 80 | 40–50 | 60 | 80 | 45–60 |
| கரட் | 250 | 180 | 120 | 160 | 260 | 280 | 250 | 240 |
| மரவள்ளி | 50 | 60 | 60 | 40 | 50 | 60 | 80 | 40 |
| பயிற்றை | 140 | 140 | 120 | 100 | 100 | 120 | 160 | 130 |
| பாகல் | 160 | 140 | 200 | 120 | 140 | 120 | 160 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 80–120 | 80 | 100 | 160 | 160 | 65 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 90 | 120 | 100 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 100 | 100 | 140 | 140 | 140 | 200 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 30 | 40 | 60 | 15 |
| தக்காளி | 70 | 80 | 80 | 80 | 80 | 120 | 80 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 40 | 40 | 40 | 60 | 30 |
| கீரை | 10 | 20 | 40 | 10 | 10 | 40 | 35 | 35 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 40 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 160 | 120 | 80 | 120 | 240 | 200 | 160 |
| புடோல் | 60 | 120 | 80 | 80 | 100 | 80 | 100 | 70 |
| கோவா | 120 | 100 | 100 | 100–140 | 80 | 100 | 120–80 | – |
| வெண்டி | 120 | 140 | 70–120 | 100 | 120 | 60 | 120 | 60 |
| போஞ்சி | 160 | – | 140 | 160 | 200 | 300 | 220 | 180 |
| லீக்ஸ் | 100 | 180 | 150 | 120 | 160 | 160 | 160 | 180 |
| தேங்காய் | 50 | 30 | 60 | 50 | 40 | 40 | 35–45 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 90 | 100 | 90 | 100 | 120 |
| தேசிக்காய் | 140 | 120 | 160 | 120 | 140 | 100 | 160 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 140 | 140 | 100 | 160 | 200 | 200 | 250 | 180 |
| இராசவள்ளி | 120 | – | 120 | 120 | 100 | 160 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 350 | 200 | 350 | 250–300 | 300 | 200 | 250 | 170 |




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 700 | 800 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 350 | 200 | 400 |
| கணவாய் | 550 | 550 | 600 | 600 | 700 | 500 |
| பாரை | 600 | 500 | – | 500 | 600 | 400 |
| சுறா | 600 | 500 | – | 600 | – | – |
| சீலா | 300 | 400 | 500 | 400 | 200 | – |
| விளை | 650 | 400 | 400 | 500 | 400 | – |
| முரல் | 300 | 350 | 400 | 400 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 500 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 400 | 500 | – | – |
| ஒரா | 400 | 400 | 300 | 400 | – | 300 |
| திரளி | 300 | 300 | 200 | 350 | 200 | 250 |
| நகரை | 200 | 400 | 200 | 300 | 200 | 300 |
| ஆடை | 150 | 200 | 100 | 120 | 200 | 80 |
| ஒட்டி | 300 | 250 | – | 350 | 200 | – |
| திருக்கை | 150 | 350 | 100 | 250 | 300 | 180 |
| பாலை | 450 | 300 | 300 | 500 | 450 | 300, |
| வாழை | 100 | 200 | – | 300 | 200 | – |
| கொய் | 150 | 200 | 100 | 160 | 100 | – |
| மதனம் | 150 | 300 | 200 | 250 | 350 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீன் மாத எண் சோதிடப் பலன்கள்



1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்த உங்களுக்கு, இந்த மாதம் எதிர் பார்ப்புகள் நிறைவேறும். முக்கியஸ்தர்களின் தொடர்புகள் கிடைக்கும். குடும்பத்தில் நல்லது நடக்கும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். பெரிய பதவிகள் தேடி வரும். பணப் புழக்கம் அதிகரிக்கும். உறவினர்களால் அனுகூலம் உண்டு. குலதெய்வப் பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் சென்று நிறைவேற்றுவீர்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உங்களை இணைத்துக் கொள்வீர்கள். அயல்நாடு செல்ல நுழைவு விசைவு கிடைக்கும். எதிரும், புதிருமாகபேசிக் கொண்டிருந்த உறவினர்கள் தனது தவறை உணர்வார்கள். இரத்த சொந் தங்கள் வலிய வந்து உதவு வார்கள். வீட்டை அழகுப்படுத்துவீர் கள். என் றாலும் சிறுசிறு விபத்து, அலைச்சல், மனைவிக்கு மருத்துவச் செலவுகள், முன் கோபம், உறவினர் பகை வந்து நீங்கும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை உடன் செலுத்துங்கள். பழைய கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள்.



2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்த உங்களுக்கு இந்த மாதம் எதிலும் வெற்றி கிட்டும். அரசாலும், அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் ஆதாயம் உண்டு. கணவன்–மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். மகள் உங்களைப் புரிந்துக் கொள்வாள். மகனுக்கு வெளிநாட்டில் வேலைக் கிடைக்கும். தாயாரின் உடல் நலம் சீராகும். நேர்மறை சிந்தனைகள் தோன்றும். புது நிலம், வீடு வாங்குவீர்கள். சிலர் வீடு மாறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களின் உண்மையான பாசத்தை உணர்வார்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். குலதெய்வக் கோயிலுக்குச் சென்று நேர்த்திக் கடனை செலுத்துவீர்கள். பிற்பகுதியில் நண்பர்களுடன் பகைமை வந்து நீங்கும். அக்கம்–பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். வெளி வட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உடல் வலி, வீண் கவலை, அலைச்சல், திடீர் செலவுகள் வந்துப் போகும். வேற்றுமதத்தினரால் அனுகூலம் உண்டு. சாதுக்கள் உதவுவார்கள்.




# மரியாதை கலந்த அங்கீகாரம்

(தொடர்ச்சி)

அது உங்கள் வாழ்க்கைத் துணைக்கான மரியாதையை நீங்கள் தர மறுக்கின்ற தருணம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இன்னொரு முக்கியமான விடயம். நம்பிக்கை. உங்கள் வாழ்க்கைத் துணைக்கு நீங்கள் தரமுடிந்த அதிகபட்ச மரியாதை, அவரை முழுமையாய் நம்புவது. அதேபோல், அந்த நம்பிக்கைக்கு உரியவராய் நீங்கள் இருப்பது பதில் மரியாதை. இது மட்டும் அழுத்தமாய் இருந்தாலே போதும்.வாழ்க்கை ஆனந்த மாய் ஓடும். நள்ளிரவில் வாழ்க்கைத் துணையின் செல்போனை நோண்டுவது, கணினியை ஆராய்வது போன்றவை நீர்த்துப்போன நம்பிக்கையின் அடையாளங்கள்.



சின்னச்சின்ன விடயங்களுக்குக் கூட நன்றி சொல்வது அடுத்தவர் செய்யும் விடயங்களை நீங்கள் மதிக்கிறீர்கள் என்பதன் அடையாளமாகும். அது மின் கட்டணம் கட்டுவ தாக இருக்கலாம், உங்கள் துணியை அயர்ன் பண்ணுவதாக இருக்கலாம். புன்னகையுடன் கூடின மனமார்ந்த நன்றி அந்தச் செயலை அர்த்தப்படுத்தும். கணவன் மனைவிக்குள்ளே என்ன நன்றியெல்லாம் சொல்வது என்பதெல்லாம் பழைய பஞ்சாங்கம். நீங்கள் முயன்று பாருங்கள், மாற்றம் நிச்சயம் உங்களுக்கே தெரியும்.

மரியாதை பரிமாறப்படாத இடங்களில் உறவுகள் நிலைப்பதில்லை. அலுவலகத்தில் போய் மரியாதைக் குறைவாய் ஒரு மாதம் நடந்து பாருங்கள். உங்களுடைய வேலையே போய் விடலாம். நண்பர் கூட்டத்தில் போய் மரி யாதை வழங்காமல் ஒரு சில மாதங்கள் இருந்து பாருங்கள். நட்புகளெல்லாம் காணாமற் போய்விடும். உங்கள் சொந்தக் காரர் வீட்டுக்குப் போய் மரியாதை இல்லாமல் சில நாள்கள் தங்கிப் பாருங்கள், அந்த உறவு அதோடு முடிந்து போய்விடும். இப்படி எல்லா இடங்களிலும் மரியாதை கொடுப்பதும், வாங்குவதும் தேவைப் படும் போது, ஏன் குடும்பத்தில் மட்டும் அது தேவையற்ற ஒன்று என நினைக்கிறீர்கள் ?

இருக்கும்போது வாழ்க்கைத் துணையின் அருமை பெருமைகள் பலருக்கும் புரிவதில்லை. இழந்த பின் புலம்புவதில் பயனும் இல்லை.

நீ இல்லாதுவிட்டால் என்னால இதெல்லாம் சாதிச்சிருக்கவே முடியாது, நீ இல்லேன்னா வாழ்க்கையே வெறுத்துப் போயிருக்கும், நீ எனக்குக் கிடைச்சது கடவுள் வரம் என்றெல்லாம் உங்கள் வாழ்க்கைத் துணை யிடம் என்றேனும் சொல்லியிருக்கிறீர்களா? மனதிலாவது நினைத்திருக்கிறீர்களா? ஏன் என்றாவது யோசித்திருக்கிறீர்களா? அன்பாகப் பேசுங்கள். அன்பான பேச்சு வாழ்க்கையை ஆழப்படுத்தும். உங்கள் வாழ்க்கைத் துணைவருக்காக பிரார்த்தியுங்கள். அது உங்களுடைய அன்பின் வெளிப்பாடு. மாற்றம் உங்களிடமிருந்து தான் துவங்க வேண்டும். உங்கள் வாழ்க்கைத் துணையிடமிருந்து துவங்க வேண்டும் என நினைப்பது நீங்கள் உங்கள் குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான மரியாதையைக் கொடுக்கவில்லை என்பதன் அடையாளமே.




# பெண்களின் தாய்மைப் பருவம்

தாய்மைப் பருவம் பெண்களின் மிக முக்கிய பருவம். ஆனால் பெரும் பாலான பெண்கள் கர்ப்பகாலத்தையும், பிரசவத்தையும் அதிக அச்சத்துடனே எதிர்கொள்கின்றனர். கர்பமாக இருக்கும் வயிற்றில் இருக்கும் கருக் குழந்தைக்கு சேர்த்து சத்தான உணவு உட்கொள்வதால் உடல் நிலையில் மாற்றம் ஏற்படுவது இயற்கை. பிரசவத்துக்குப் பின்னர் குழந்தை வளர்ப்பதிலேயே கவனம் செலுத் தும் பெண்கள் தங்களைப் பற்றியும், உடலமைப்பு பற்றியும் கவலைப்படுவதில்லை. ஹார்மோன் சுரப்பில் ஏற்படும் மாற்றங்களினால் உடல் பருமன் ஏற்படுகிறது. மேலும் பிரசவ கால தழும்புகளும், இதனால் பெண் களுக்கு அதீத கவலையும் மன அழுத்தமும் ஏற்படுகின்றன. குழந்தையை பாதிக்காத வகையில் தாய்மார்கள் தங்களின் உடல் நலனில் அக்கறை செலுத்தவேண்டும் என்கின்றனர் மகப் பேறு மருத்துவர்கள்.

**தழும்புகள் மறைய**

கர்ப்பமாக இருக்கும்போது விரிவடையும் தசைகள் பிரசவத்துக்குப் பின்னர் சுருங்குகின்றன. ஒரு பெண்ணின் தாய்மையை உணர்த்துவதே இந்த தழும்புகள்தான். பெண்களுக்கு வயிற்றுப் பகுதியிலும், தோல், தொடை பகுதிகளிலும் தழும்புகள் ஏற்படுகின்றன. கர்ப்பமாக இருக்கும்போதே அரிக்கத் தொடங்கும். அந்த இடத்தில் உடனே கைகளால் அரிப்பதைவிட மென்மையான துணிகளைக் கொண்டு அந்த இடத்தை ஒத்தடம் கொடுக்கலாம். மேலும் பாதாம் எண்ணெய், கிரீம் போன்றவைகளை அரிக்கும் இடத்தில் தடவினால் தழும்புகள் ஏற்படாது.

**கருவளையக் கண்கள்**

பச்சிளம் குழந்தையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கவனத்தில் தாயின் தூக்கம் பறிபோகிறது. இதனால் கண்களைச் சுற்றி கருவளையம் போன்றவை ஏற்படுகின்றன. இது அதிக சோர்வை ஏற்படுத்துகின்றன. எனவே விற்றமின் 'கே' குறைபாட்டினால் கண்களைச் சுற்றி கருவளையம் ஏற்படுகிறது. எனவே சத்தான உணவுகளையும், சீரான உறக்கத்தையும் மேற்கொள்ளவேண்டும் .

**கூந்தல் உதிர்வு**

கர்ப்பகாலத்தில் சத்தான உணவுகளை உண்ணும் பெண்கள் குழந்தை பிறந்த பின்னர் உணவுகளில் அதிக கவனம் செலுத்துவதில்லை. பெரும் பாலான சத்துக்கள் பிரசவத்தின் போதிலேயே இழந்துவிடுவதால் சரியான போஷாக்கு கிடைப்பதில்லை. இதனால் பிரசவித்த பெண்களுக்கு கூந்தல் உதிர்கிறது. எனவே இரும்புச் சத்துள்ள காய்கறிகள், கீரைகள் போன்ற உணவுகளை உண்பதன் மூலம் இழந்த சத்துக்களை பெறமுடியும். கூந்தலுக்கு வாரம் ஒருமுறை எண்ணெய் தேய்த்து குளிக்கலாம். இதனால் கூந்தல் உதிர்வது தடுக்கப்படும். உதிர்ந்த கூந்தல் வளர்ச்சியடையும். கர்ப்பகாலத்தில் கூந்தல் உதிர்வது அனேகப்பெண்களுக்கு பிரச்சினை. இக்காலத்தில் எனனதான் போஷாக்கான உணவை சாப்பிட்டாலும் பிரச்சினை தீராது. வருமுன் காப்பதே இதற்கு சரியான தீர்வு. குழந்தை பெற்றுக் கொள்ள முடிவெடுக்கும் முன்பே இரும்புச் சத்துள்ள உணவை அதிகம் சாப்பிட்டு வர வேண்டும்.

**வறண்ட சருமம்**

கர்ப்பகாலத்தில் ஹார்மோன்களின் சுரப்பு அதிகரிப்பதால் உடல் வறட்சித் தன்மையடைகிறது. இதனால் சருமம், செதில்செதிலாக மாறும். மென்மையான மொய்ஸரைசர் பூசிவர சருமம் மென்மையடையும். பிரசவித்த பெண்களுக்கு கரும்புள்ளிகள் ஏற்படுவது இயற்கை. வெளியில் செல்லும் வெயிலில் இருந்து பாதுகாப்பதற்கான கிரீம் உபயோகிக்கலாம். போலிக் அமிலம் உள்ள உணவுகளை உட்கொள்ளவேண்டும். பச்சைக் காய்கறிகள், முட்டை போன்றவைகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். முகத்தில் கருவளையம் உள்ள இடங்களில் ஸ்க்ரப் வைத்து தேய்த்தால் இறந்த செல்கள் உதிர்ந்து விடும்.

**பித்த வெடிப்பு**

நீர்ச்சத்து குறைவினால் பெண்களுக்கு கால்களில் பித்த வெடிப்பு ஏற்படுகிறது. தினசரி காலை, மாலை நேரங்களில் பித்தவெடிப்பை போக்கும் கற்களைக் கொண்டு தேய்க்க இறந்த செல்கள் உதிர்ந்து விடும். வாஸலின் பூசிவர பித்த வெடிப்பு குணமடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ண மயிலே!

மயிலே மயிலே அழகிய மயிலே
ஆடும் மயிலே தோகை மயிலே
உன் கழுத்தின் வண்ணம்தான் என்ன !
நீலம் பச்சை கலவைதான் என்ன !

மயில் கழுத்துக் கலர்
காணக்காணச் சுண்டி இழுக்கும்
கழுத்தை ஆட்டி நடை அழகு
காண்பவரை அசர வைக்கும் !

குனிந்து உன் உணவைக் கொத்த
உன் கொண்டைகள் அசைந்தாடும்
மேகம் திரண்டு வர
உன் ஆனந்தம்தான் என்ன?
உன் உடல் சிலிர்க்கும்
உன் தோகை விரியும்
எத்தனை மயிற்கண்கள் !
எத்தனை வண்ணக்குவியல் !

மழைத்துளியுடன் நடன சங்கமம்
பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத இன்பம்!
அந்தக் குமரனை நீ ஏற்றிக்கொண்டாய்
உலகத்தையே வலம் வந்தாய்
முருகனே மயில் வாகனன்
ஆனான்
உன் பெயருக்குப் பெருமை சேர்த்தான்!






## பொது அறிவுத் தகவல்கள்

உயிரினங்களில் நெடுநேரம் மூச்சை அடக்கும் சக்தி பெற்றது. **முதலை.**

பறவைகளிலேயே மிகவும் நீளமான நாக்கு உடையது. **மரங்கொத்தி.**

தவளை. தன்னுடைய கண்கள் மூலம் ஒலியைக் கேட்கிறது.

ஆண்டுதோறும் கழுதைக் கண்காட்சி நடக்கும் இடம். **உஜ்ஜைனி.**

வாயுக்களின் அழுத்தத்தை அளவிடும் கருவி. **மானோ மீற்றர்.**

உலகத் தொழிலாளர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு. **1919.**

பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திரம். **சூரியன்.**

பால், முட்டை, கரட், வெண்ணெய், மீன், பப்பாளி ஆகியவற்றில் **விற்றமின் ஏ** அதிகமாக உள்ளது.

ஒரு உணவு நிலையில் இருந்து மற்றொரு உணவு நிலைக்கு சக்தி கடத்தப்படுவதே **உணவுச்சங்கிலி** எனப்படும்.

பூனையின் ஆயுள்காலம், **12 வருடங்கள்.**

நம்முடைய கால் பாதங்களில் **16 எலும்புகள்** இருக்கின்றன.

போலியோ தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர். **ஆல்பர்சேலின்.**


தட்டைப்புழுவின் விலங்கியல் பெயர், **டீனியா.**

செஸ் விளையாட்டு தோன்றிய நாடு. **இந்தியா.**

# யானைக்கு வந்த திருமண ஆசை

மன்னரின் யானையொன்று அண்டை அயல் நகரங்களுக்குச் சென்று பயிர்களை அழித்தும், மக்களில் பலரை நசுக்கிப் படுகாயப்படுத்தியும் அடிக்கடி தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தது. இதுபற்றி பாதிக்கப்பட்ட சிலர் மன்னரிடம் முறையிட்ட போது மன்னர் அதனைப் பெரிய விடயமாகக் கருதவில்லை. தன்னுடைய யானை மீது வீண் புகார்கள் கூறுவதாகச் சிலரைக் கடிந்தும் கொண்டார். அதனால் யானையின் அட்டகாசம் பற்றி மேற்கொண்டு முறையிட யாருக்கும் துணிச்சல் வரவில்லை. இதனால் அவர்கள் முல்லாவைச் சந்தித்து மன்னரின் யானையால் தங்களுக்கு ஏற்படும் தொல்லைகளைப் பற்றி எடுத்துக்கூறி, மன்னரிடம் சொல்லி ஏதாவது செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். முல்லா தம்மிடம் வந்தவர்களை நோக்கி நீங்கள் எல்லாரும் ஒன்று திரண்டு அந்த யானையைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டிப்போட்டு விடுங்கள் என்றார். ஐயோ! மன்னரின் யானையைக் கட்டிப் போட்டு மீள முடியுமா? மன்னர் கடுமையான தண்டனை விதிப்பார் என்று அச்சத்துடன் கூறினர் ஊர் மக்கள். நீங்கள் நான் சொன்னவாறு செய்யுங்கள். மன்னரிடமிருந்து எவராவது அங்கு வந்து கேட்டால் முல்லாதான் யானையைக் கட்டிப் போடச் சொன்னதாகக் கூறி விடுங்கள் என்று முல்லா கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று கூடி மிகவும் சிரமப்பட்டு யானையைப் பிடித்து ஒரு பெரிய மரத்தில் கட்டிப்போட்டு விட்டனர். தகவல் அறிந்த மன்னர் முல்லாவுக்கு ஆள் அனுப்பி தம்மை வந்து சந்திக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். முல்லா அரண்மனை சென்று மன்னரை வணங்கினார். என்ன முல்லா என்னுடைய யானையைக் கட்டிப் போட்டீராமே? உமக்கு அவ்வளவு துணிச்சல் எங்கிருந்து வந்தது? என்று கோபத்துடன் கேட்டார் மன்னர். முல்லா பணிவுடன் மன்னரை நோக்கி மன்னர் பெருமானே தங்களது யானை எங்கள் ஊர்ப்பக்கம் வந்து தனக்கு ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்ய வேண்டும் என்று கேட்டு அட்டகாசம் செய்ய ஆரம்பித்து விட்டது. மன்னருடைய யானையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது குடிமக்களாகிய எங்கள் கடமையல்லவா! அதனால் தங்கள் யானைக்காக ஒரு பெண் யானையைத் தேடிக் கொண்டிருக்கிறோம். பெண் யானை கிடைப்பதற்குள் யானை கோபித்துக் கொண்டு ஏதாவது தாறுமாறான நடவடிக்கையில் ஈடுபட்டு விடக் கூடாதே என்பதற்காகத்தான் அதைக் கட்டி வைத்திருக்கிறோம் என்றார். என்ன? யானையாவது தனக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று கேட்பதாவது! யாரிடம் விளையாடுகிறாய்? என்று மன்னர் கோபத்துடன் கேட்டார். மன்னர் பெருமான் அவர்களே தயவு செய்து சிரமம் கருதாது ஒரு தடவை எங்கள் ஊருக்கு வந்து தங்கள் யானையையே விசாரித்துப் பாருங்கள், நான் ஏதாவது பொய் சொல்லியிருந்தால் எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன் என்று முல்லா கூறினார். மன்னர் தமது பரிவாரங்களுடன் முல்லாவை அழைத்துக் கொண்டு முல்லா சொன்ன பகுதிக்குச் சென்றார். வழி



நெடுக்கிலும் விளை நிலங்களுக்கும் பழ மரங்களுக்கும் ஏற்பட்டிருந்த கடுமையான சேதத்தையும் அழிவையும் கண்டு அதிர்ச்சியுற்றார். அந்தப் பேரழிவுக்கு தனது யானைதான் காரணம் என்பதையும் உணர்ந்தார். தன்னை அந்தப் பகுதிகளுக்கு வரச் செய்வதற்காக முல்லா கையாண்ட தந்திரத்தையும் புரிந்து கொண்டார்.

மன்னர் உடனே தனது அதிகாரிகளை அழைத்து யானையினால் எவர் அதிகமான சேதத்துக்கு உள்ளாகியிருக்கிறார்களோ அவர்களுக்குத் தாராளமான நஷ்ட ஈடு வழங்க உத்தரவிட்டார். பிறகு யானையைக் கொண்டு சென்று அரண்மனையில் கட்டிப் போடுமாறும் உத்திரவிட்டார். முல்லாவுக்கு ஊர் மக்கள் நன்றி சொல்லி அவரை வாழ்த்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.கவை படிப்படியாக அழிக்கிறார் மஹிந்த

*அமைச்சர் ரணதுங்க குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூன் 15
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக் கட்சியை படிப்படியாக பலவீனப்படுத்தி வருவதாக அந்த கட்சியின் அத்தனகல்ல தொகுதி அமைப்பாளரும் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்தனகல்லவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சிகளின் தொழிற்சங்க கிளைகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக்க வேண்டும் என்ற எதிர் பார்ப்பில் ஒழுங்கு செய்யப்படும் கூட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி ஏன் கலந்து கொள்வதில்லை?. முன்னாள் ஜனாதிபதியின் தற்போதைய நடத்தை காரணமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி பலவீனப்படும்.

முன்னாள் ஜனாதிபதியின் தற்போதைய செயற்பாடுகளை அவதானிக்கும் போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசு ஒன்றை ஏற்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும் என நான் எண்ணவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அவர் நேசிப்பவராகவும் தான் உண்மையான சுதந்திரக் கட்சிக்காரன் என அவர் எண்ணினால், அவர் கிராமம், கிராமமாக சென்று கட்சியை அழிக்கும் நடவடிக்கைகளை நிறுத்த வேண் டிய காலம் ஏற்பட்டுள்ளது.

மாத்தறையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஒன்றில் அவர் அந்த கூட்டங்களின் மேடைகளில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு ஏற வேண்டும் அல்லது அவற்றில் இருந்த விலகி கட்சியை நடத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடமளிக்க வேண்டும். எனினும் மஹிந்த இவை இரண்டையும் செய்வதில்லை- என்றார். (ற)

# பிரதமராக செயற்படுவதற்கு ரணிலுக்கு உரிமையில்லை

*விஜித ஹேரத் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜூன் 15
100 நாள்களுக்குப் பின்னர் பிரதமராக செயற்பட ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்த வகையான தார்மீக உரிமைகளும் கிடையாதென மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க, அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் எதிர்க் கட்சித் தலைவருக்கும் தங்கள் பதிவிகளில் தொடர்ந்து செயற்படுவதற்கு எந்த வகையிலான தார்மீக உரிமைகளும் கிடையாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சர் பதிவி பெற்றுக் கொண்டுள்ளதனால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் செயற்பட முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு எதிர்க் கட்சித் தலைவர் வெகு விரைவில் அப்பதவியில் இருந்த விலக வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# மஹிந்த போன்றோர் நாட்டுக்குத் தேவை!

*'பல்டி' அடிக்கிறார் சரத் என் சில்வா*

நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக செயற்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்திற்கு வர வேண்டும் என தற்போது கூறி வருகிறார்.

கேகாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்ட முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக செயற்படவில்லை எனவும் இரண்டு தடவைக்கு மேல் போட்டியிடுவதையே தான் எதிர்த்ததாகவும் கூறியுள்ளார்.

அத்துடன்மஹிந்தராஜபக்ஷபோன்ற தலைவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் ஆட்சியில் இருக்கும் அச்சாறு போன்ற ஆட்சியை தான் விரும்பவில்லை எனவும் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக தெரிவு செய்யவே மக்கள் வாக்களித்ததாகவும் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக தெரிவு செய்ய மக்கள் வாக்களிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரை, அந்த கட்சியின் செயலாளர் தோற்கடித்தமை சிறந்த செயல் எனத் தான் கருதவில்லை எனவும் இவ்வாறு அதிகாரத்திற்கு வந்ததை எப்படி நல்லாட்சியாக கருத முடியும் என்ற சிக்கல் தனக்கு இருப்பதாகவும் முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார். (ற)

# தோல்வியடைந்த பின்னரே உண்மை பேசுகிறார் மஹிந்த

*அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 15
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் பொய்களை கூறியதாகவும் தோல்வியடைந்த பின்னர் உண்மை பேசி வருவதாகவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளரானஅமைச்சர் கபீர் ஹாசீம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படுவது குறித்து முன்னாள் ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலேயே வடக்கில் 59 முகாம்கள் அகற்றப்பட்டன.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி, தான் அலரி மாளிகையில் வளர்த்த நாய்களுக்கு மக்களின் பணத்தைப் பயன்படுத்தியே உணவு வழங்கினார்.

முன்னாள் ஜனாதிபதியின் குடும்பம் பயன்படுத்திய வாகனங்களின் எண்ணிக்கை பற்றி இன்னும் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளது எனவும் கபீர் ஹாசீம் தனது அறிக்கையில் கூறியுள்ளார். (ற)

A/L
பரீட்சையின்
மற்றும்
பெறுபேறுகளின்
பின்பு
உங்கள் வளமான
எதிர்காலத்திற்கான
முதல் வாய்ப்பு!!
Sri Lanka
UGC
அங்கீகாரமுடைய
பட்டதாரியாகும்
வாய்ப்பு......
Top up Program
HND or 2 வருட டிப்ளோமா
தகமையுடன் ......
விண்ணப்பிக்கலாம்
B.Sc. in Comp. Sc.
B.Com. with Comp. App
B.Sc. in Civil Eng.
B.Sc. in Q.S

உங்கள் நம்பிக்கையின் சிகரமாக விளங்கும்
NORTH LANKA IIT இன்
ஆலோசனை சபையினர்

பேராசிரியர் பு. பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்
யாழ் பல்கலைக்கழகம்

பேராசிரியர் டாக்ரர் T. வேல்நம்பி
பீடாதிபதி வணிகத்துறை
யாழ்பல்கலைக்கழகம்

திரு. S. அமிர்தலிங்கம்
தலைவர் யாழ் தேசிய கல்வியற்கல்லூரி

திரு. P.விக்னேஸ்வரன்
முன்னாள் கல்விப்பணிப்பாளர்
வடமாகாணம்

திரு.குமரன்
யாழ் பிரபல பௌதீகவியல் ஆசான்

ஆலோசனை சபையினரின் வழிகாட்டலுடன்
பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கவும்

O/L அல்லது A/L தகமையுடன்
B.Sc. in Computer Science    B.Com with Computer App.
Any Degree தகமையுடன்
P.G.Dip. in Comp. Sc. >> M.Sc.    MBA >> DBA
P.G.D in Ed. >> M.Ed.

மேலதிக விபரங்களுக்கு ...
NORTH LANKA IIT
Top Floor People's Bank Building,
Stanley Road, Jaffna.
Phone : 0214927156, 0214545123
0777592666

LANKA CITY CAMPUS
Kodikamam Road
Near NSB, Nelliyadi
0214927087, 0771016524

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கந்தசாமி கனகரத்தினம் (தவராசா)



கரவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், நாவலர் மடம் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கனகரத்தினம் (தவராசா) நேற்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், இராஜேஸ் வரியின் (ராசா) அன்புக் கணவரும், கோமதி (லண்டன்), சுமதி (கனடா), பாமதி (லண்டன்), நளினி (பிரான்ஸ்), ஆனந்தசங்கர், நிர்மலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி, பத்மாவதி காலஞ்சென்ற தங்கவேலு மற்றும் மகேஸ்வரி, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோ தர னும், காலஞ்சென்றவர் களான துரைராசா, தங்கராசா மற்றும் தனபாலசிங்கம், ஸ்ரீ தரன், பரஞ்சோதி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், செல்வராசா, சிவநேசன், தேவகுமார், ஜெயகரன், டயானா (கரவெட்டி பிரதேச சபை), சசிகரன், சந்திரவதனா, ஜெயவதனா, இந்து மதி, ரவிச்சந்திரன், நடராசா, ரங்கநாதன், ராதிகா, அருந்தவசீலன், முகுந் தன், கலாவாணி ஆகியோரின் அன்பு மாமனும், துஷ்யந்தி, அருள் மோகன் ஆகியோரின் பெரியப்பாவும், பிரசாந், கிசோக், சௌமி, சரூண், கிரிசான், கிருத்திக், கபிசன், பிரவின், நிசோன், காவியா, நிகேஸ், அக் ஷிதா, சோனியா, நவீன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2015) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவலர் மடம்,**
**கரவெட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## அருள்வரதன் வித்தியன்

(பொறியியல் பீடம் பாரிஸ் பல்கலைக்கழகம்,
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்)



வவுனியா, கோயிற்புதுக்குளத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட அருள்வரதன் வித்தியன் பிரான்ஸில் 10.06.2015 புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை அருள்வரதன் - வசந்தி தம்பதியரின் பாசமிகு அன்பு மகனும், சத்தியன் (பொறியியல் பீடம் ESTIA) அவர்களின் ஆருயிர் தம்பியும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, பத்தினிப்பிள்ளை (வவுனியா), காலஞ்சென்ற இரட்ணசிங்கம், நாகேஸ்வரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப்பேரனும் சி.மயில்வாகனம் (வட்டக்கச்சி), சி.பத்மநாபன் (சட்டத்தரணி, மட்டக்களப்பு) காலஞ்சென்ற வரதராசா ஆகியோரின் பெறாமகனும், இ.வாசுதேவன் (கனடா), இ.விமலசேகர் (கனடா), சி.அருள்வதனி (கனடா), வி.சுந்தரவதனி (ஆசிரியை - வவுனியா) சி.சறோஜினி (மின் அத்தியட்சகர், வவுனியா) உ.இரஞ்சினி தேவி (லண்டன்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை 18.06.2015 முற்பகல் 10 மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12.10.1993 | 10.06.2015 |

**தொடர்பு:**
அருள் - 0033 1341 95882, சத்தியன் - 0033 6346 60975
நாகேஸ்வரி - 021 222 1870, சறோஜினி - 024 222 0204
கோயிற்புதுக்குளம், வவுனியா.

SATHWITH@HOTMAIL.com
S_Saro_03@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(58596) (45.6.7)

# சாய்ந்தமருதில் இன்று பூரண கடையடைப்பு

*நகர சபைக் கோரிக்கையை வலியுறுத்தி*

மன்னார், ஜூன் 15

சாய்ந்தமருதுக்கான நகர சபைக் கோரிக்கையை வலியுறுத்தி நாளை திங்கட்கிழமை சாய்ந்தமருது பிரதேசத்தில் முழுநாள் ஹர்த்தால்,கடையடைப்பு செய்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல், வர்த்தக சங்கம் மற்றும் நிறுவனங்கள், பொது அமைப்புகளின் ஒத்துழைப்புடன் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக சாய்ந்தமருது பொது மக்கள் அமைப்பு அறிவித்துள்ளது.

குறித்த அமைப்பால் பிரதேசம் எங்கும் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அரச அலுவல கங்கள், பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது..

அனைத்து வர்த்தக நிலையங்கள், கடைகள், அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் அனைத்தையும் திறக்காதிருப்பதுடன் பொது மக்கள் அனைவரும் அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு சாய்ந்த மருது ஜும் ஆப் பெரிய பள்ளிவாசலுக்கு அணி திரண்டு வருமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசலில் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை பிர கடனம் செய்யப்பட்டு விசேட தொழு கையும் துஆப் பிரார்த்தனையும் இடம் பெறவுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட் டுள்ளது.

சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபைக்கு வர்த்தமானி அறிவித்தல் விரை வில் வெளியிடப்படும் என்று உள்ளூ ராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் கரு ஜயசூரிய உறுதியளித்து பல மாதங்களாகியும் அது இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையும் கல்முனைத் தொகுதி யின் அரசியல் தலைமையும் தடையாக இருக்கின்றன என்றும் குற்றம் சாட்டப்படுகின்றது.

இவர்கள் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை கோரிக் கையை நிறைவேற்றித் தருவதாக பொறுப்பேற்றுக் கொண்டுள்ள போதிலும் அதனை மழுங்கடிக்கும் வகையில் தம்மை ஏமாற்றும் வகையில் செயற்படு வதாகவும் இனி மக்களே தீர்ப்பாளர்களாக மாறுவார் கள் எனவும் தெரிவித்து பள்ளிவாசல் நிர்வாகம் இரண்டு பக்க துண்டுப்பிரசுரம் ஒன்றை சில தினங்க ளுக்கு முன்னர் மக்களுக்கு வெளியிட்டிருந்தது. (ற)

## மனைவி மீதான குற்றச்சாட்டை மறுக்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜூன் 15

முன்னாள் முதல் பெண்மணி சிரந்தி ராஜபக்ஷவுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

சிரிலிய சவிய நிதியத்தில் இருந்து சிரந்தி நிதிக் கொள்ளையில் ஈடுபட்டதாகவும் வீடு ஒன்றை கொள்வனவு செய்ததாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்த இந்தக் குற்றச் சாட்டு பிழை யானது என்று குறிப்பிட்டுள்ளார்.

சிரந்தி ராஜபக்ஷ, கொழும்பு 5, டொரிங் டன் எவன்யூவில் வீடு ஒன்றை கொள்வ னவு செய்தமை தொடர்பில் தகவல் வழங் கியுள்ள அவர், சிரந்தியின் மருமகன் தில்சான் விக்கிரமசிங்க ஒரு வர்த்தகர், அவரே 35 லட்சம் ரூபா கடன் பெற்றுக் கொடுத்து வீட்டை கொள்வனவு செய்து கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தங்காலையில் அண்மை யில் விபத்துக்குள்ளான வாகனம் தம்மு டையது என்று என்று வெளியான தகவ லையும் மஹிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார். இது, உலக உணவுத்திட்டத்தால் சிரிலிய சவிய நிதியத்துக்கு அன்பளிப்பாக வழங்கப் பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.(ற)

## ஜெலி மீனுடன் விளையாடியோர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன் 15

கொழும்பின் புறநகர் கல்கிஸ்ஸை கட லில் மிதந்து வந்த நச்சுத்தன்மை கொண்ட ஜெலி மீன் (நுங்கு மீன்) ஒன்றை வைத்து விளையாடிய 21.பேர் கொழும்பு தெற்கு களுபோவில வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டோருக்குக் கடுமையான சொறி, எரிச் சல், தடிப்பு மற்றும் வலி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் எவரது உயிருக்கும் ஆபத்து இல்லை என்று வைத்தியசாலை தகவல்கள் தெரி வித்தன. (ற)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஈஸ்வரி ஆறுமுகம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாக வும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி ஆறுமுகம் நேற்று (14.06. 2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத் தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான வல்லிபுரம் - சிதம்பரம் தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான குமாரு - பார்பதிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற வர்களான நாகலிங்கம், சுப்பிர மணியம், சரஸ்வதி மற்றும் முருகையா ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற வர்களான சிவஞானம், நன்னித் தம்பி, கந்தையா, புனிதவதி மற்றும் சிவ பாக் கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், யோகேஸ்வரி, உமாம கேஸ் வரி (ஆசிரியை, கொட்டாஞ்சேனை, சென்.ஆன்ஸ் மகாவித்தியால யம்), சுகவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், திரு நாவுக்கரசு (ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி), சாந்தகுமார் (அஸ்பெஸ்ரோஸ் சீமென்ற் இன்டஸ்றீஸ், லிமிடெட்), தயாபரன் (லண் டன்) ஆகி யோரின் அன்பு மாமியும், சுகன்ஜா (பிரதேச செயலகம், உடுவில்), கிரீசன் (தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கொழும்பு), அனுஸ்ரீ (லண் டன்), வித்தகன் (லண்டன்), பார்த்தீபன் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்), துவாரகா (Hayleys Industrial Solutions (Pvt) Ltd) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஸ்ரீகரிணியின் அன்புப் பூட்டி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு. — தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி பூமணி அம்பலம்

தோற்றம் 02.03.1937



மறைவு 14.06.2015

நாவலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி பூமணி அம்பலம் நேற்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான ஆறன் - மாகாளி தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகன் அம்பலத்தின் அன்பு மனைவி யும், காலஞ்சென்ற நவநீதராசா மற்றும் சிவபாக்கியம், இந்திராதேவி, நவயோகரத்தினம் (கனடா), நவமோகன ராசா (கனடா), நவயோகேஸ் வரி, நவகிருஸ்ணமோகன் (சுவிஸ்), இந்திராகாந்தி ஆகியோரின் பாசமிகு தாயும், புஸ்பமோகனா, காலஞ் சென்ற தங்கராசா மற்றும் கதிர்காமத்து லிங்கராசா, மல்லிகா (கனடா), திகிஷ் (கனடா), தங்கராசா, துஷ்யந்தி (சுவிஸ்), தெய்வேந்திரம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2015) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக மு.ப. 10.00 மணியளவில் வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி, உடுப்பிட்டி. — தகவல்: [illegible] 070 6688420, 0773299505,077 4462376.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி

### சரவணை தர்சிகா

(குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்)



மண்ணில் 20.06.1983

விண்ணில் 10.07.2010

திதி: அபரபக்க சதுர்த்தசி (15.06.2015)


எம்மை விட்டுப்பிரிந்து ஐந்தாண்டுகள் கழிந்தாலும்
ஆறவில்லை எம் துயரம் என்றும் எம் மனதில்
அணையா ஒளிவிளக்காக
வீற்றிருக்கும் எம்குல தெய்வமே!
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிராத்திக்கின்றோம்.

கைதடி தெற்கு, கைதடி. — [illegible] குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கனகரெத்தினம் நடராசா

(இளைப்பாறிய தொலைத்தொடர்பு திணைக்கள உத்தியோகத்தர்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட கனகரெத்தினம் நடராசா (இளைப்பாறிய தொலைதொடர்பு திணைக்கள உத்தியோகத்தர்) 12.06.2015 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு கனகரத் தினம்-சின்னம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வரும் காலஞ்சென்ற கனகசிங்கம் தம்பதிகளின் அன்பு மருமக னும் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் உருத்திரா (NORWAY), யோகேந்திரா (UK), கமலா (UK) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுகுணா, ஆதவலேகா, சுரேன் கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நாகேஸ்வரி தென்னக்கோன் மற்றும் செல்லத்துரை(UK) இராஜேந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற தென்னக்கோன் மற்றும் சுசிலா, தயாளினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரிஷ்சா, துர்கா, டவன்ஜா, சர்வின், நிஜன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 219/1 கண்டி வீதி அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (15.06.2015) திங்கட் கிழமை மு.ப 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

219/1 கண்டி வீதி, அரியாலை — (60935) — தகவல் :- குடும்பத்தினர்.

### திருமதி வள்ளிப்பிள்ளை நடராசா



ஒட்டுவெளி மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை நடராசா நேற்று 14.06.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம் நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை சின்னத் தம்பி இராசையா ஆகியோரின் அன்பு சகோதரியும் செல்வராணி, சந்திரோதயம், வடி வேலு, இராசேந்திரசிங்கம், பாஸ்கரன் (டோகா), வசிகரன் ஆகி யோரின் பாசமிகு தாயாரும் சிவகுரு, செல்வகுமார்,நேசமலர்,சுதர்சினி, கேதா, சுபேதினி ஆகி யோரின் அன்பு மாமியாரும் பூமலர்,சோமராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரகுகுமார், விஜய குமார்,நந்தகுமார்(கட்டார்) உதயகுமார் (கட்டார்) கிருஸ்ண குமார்,ராஜ்குமார், ஜெயிற்றா,றஜிகுமார், யதிங்குமார், வயூலன்(கட்டார்), வஜிந்தன், வினோஜன், கிரிஜா, விதுஸன், சிந்துஸன், சைலா,சந்துஜா, சுயந்தன், லபீஸன், நிகல்யா, டிசானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2015) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எழுதுமட்டுவாழ் தெற்கு கிராமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்தஅறிவித்தலை உற்றார் ,உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஒட்டுவெளி, மிருசுவில் — தகவல்:- குடும்பத்தினர்

### திருமதி சரஸ்வதி சின்னப்பு



விழிசிட்டி, தெல்லிப்பழையை பிறப்பிடமாக வும் வவுனியா கரப்பன்காட்டை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சின்னப்பு 14.06.2015 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்புவின் அன்பு மனை வியும் காலஞ்சென்ற வயிரவப் பிள்ளையின் சகோதரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சிவபாக்கியம், இளையதம்பி, கனகாம்பிகை காலஞ் சென்ற நடேசமூர்த்தி ஆகியோரின் அன்புத்தாயும் புஸ்பராணி, காலஞ்சென்ற கயிலாசபிள்ளை மற்றும் சர்வேஸ்வரி காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கல்யாணி, வரதாட்சனி, அகிலன்(லண்டன்), சிவகோகிலம் (சுவிஸ்), சிவகாந்தன்(கனடா), சிவசுதன், சிவகரன், சிவரஞ்சன் (பிரான்ஸ்), நதிகா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2015) திங்கட் கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக தச்சனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல .8 , கரப்பன்காடு, வவுனியா. — தகவல் :- குடும்பத்தினர்.

# பிரதமராக பதவி வகிக்க மஹிந்தவே பொருத்தம்

## டலஸ் அழகப் பெரும கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 15
அடுத்த நாடாளுமன்ற தேர்தலுக்கு பிரதமர் வேட்பாளராக ஒருவரை நியமிக்க வேண்டியது அவசியம் என தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷவே அந்த பதவிக்கு பொருத்தமானவர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டை ஸ்திரத்தன்மை இழக்கச் செய்யமாட்டார் மாறாக ஜனாதிபதி சிறிசேனவின் முயற்சிகளுக்கு துணை போவார் என அனேகமான ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருதுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.
எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்பதை எதிர்வுகூற முடியாது,மஹிந்த ராஜபக்ஷவின் உரையைக் கேட்பதற்கு திரண்ட மக்கள் கூட்டத்தையும், அங்கு காணப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் கருத்தில் கொள்ளும்போது ஜனாதிபதியால் முன்னாள் ஜனாதிபதிக்குள்ள ஆதரவை புறக்கணிக்க முடியாது.
மக்கள் முன்னாள் ஜனாதிபதியே பிரதமராக வர வேண்டும் என கருதினால் அதற்கு அனுமதியளிக்க வேண்டும், மக்கள் தீர்ப்பே இறுதியானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# 48 மணிநேரத்தில் ரணிலை வீட்டுக்கு அனுப்ப முடியும்

## இப்படிக் கூறுகின்றார் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, ஜூன்
பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை 48 மணிநேரத்தில் வீட்டுக்கு அனுப்ப முடியும் என மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.
அம்பாறை புதிய நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
ஐக்கிய தேசியக் கட்சி அரசால், நிலைக்க முடியாது. அது சிறுபான்மை அரசு. முற்போக்கான சக்திகளுடன் கூடிய 130 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர்.
அதனால், ரணில் விக்ரமசிங்கவை வீட்டுக்கு அனுப்பி விட்டு மஹிந்த ராஜபக்ஷவின் ஆசிர்வாதத்துடன் அரசை ஏற்படுத்த முடியும். – என்றார். (ற)

# மஹிந்தவுக்கு ஆதரவாக பொதுக்கூட்டம்

'மஹிந்தவுடன்மீளெழுவோம் – மஹிந்தகாற்று,நில்வளாபோராட்டம்'என்றதொனிப் பொருளின் கீழ் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, பிரதமருக்கான வேட்பாளராக அறிவிக்குமாறு கோரியும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தும் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்தே அளுத்கமகே தலைமையில் நாவலப்பிட்டி நகரில் பொதுக்கூட்டம் ஒன்று இடம்பெற்றது.
சிறிலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் சிலருடன், முன்னாள் அமைச்சர்களான பந்துல குணவர்தன, ரோஹித்த அபேகுணவர்த்தன, மஹிந்தானந்தே அளுத்கமகே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மாலினி பொன்சேகா ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

# நாட்டின் எப்பாகத்திலிருந்தும் பிரதமர் ஒருவர் வரக்கூடும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15
ஐக்கிய தேசியக் கட்சியுடன் தான் எந்தவொரு இரகசிய உடன்படிக்கையையும் செய்யவில்லையெனவும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு பிரதேசத்திலிருந்தும் பிரதமர் ஒருவர் வரலாம் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
தம்பதெனியவில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.
நாட்டுக்குத் தேவையான அரசியல் மற்றும் சமூக மாற்றத்துக்காக உயிரைக் கொடுத்து உழைப்பதற்கு தான் தயார் ஏனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
சமூக மாற்றமொன்றுக்காக உழைத்த எஸ்.டபிள்யு. ஆர்.டீ. பண்டாரநாயக்க போன்றவர்களின் தியாகம் நாட்டிற்கு மீண்டும் தேவைப்படுகின்றது. சமூக மாற்றங்களுக்காக உழைத்த உலக தலைவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தனர், சிலர் தமது உயிரையும் தியாகம் செய்தனர்.
இருந்த போதிலும், எந்தவொரு சவாலின் முன்னாலும் பின்வாங்காமல் சகல சமூக மற்றும் அரசியல் சக்திகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு நாட்டுக்குத் தேவையான சமூக, அரசியல், பொருளாதார மாற்றத்தை நோக்கி நான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்.– என்றார். (ற)

## இராணுவ

என்று கூறுகின்றது.
தமது ஆட்சிக்காலத்தில் வடக்கிலிருந்து 59 இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டிருந்தால், அவற்றின் பெயர் விவரங்களை வெளியிடுமாறு மஹிந்தவுக்கு சவால் விடுத்துள்ளது அந்தக் கட்சி.
வடக்கிலிருந்த 152 முகாம்களில் 59 முகாம்கள் அகற்றப்பட்டு 93 முகாம்களே தற்போது எஞ்சியுள்ளன என யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்தார்.
இதன் பின்னர் மாத்தறையில் கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டத்திற்கு தனது செய்தியை வழங்கியிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கில் 59 இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளமை குறித்து குறிப்பிட்டிருந்தார்.
இந்நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சருமான கபீர் ஹாஸிம், மஹிந்தவின் எச்சரிக்கைக் கருத்துக்குப் பதிலளித்துள்ளார். அவர் தெரி வித்ததாவது:–
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட பின்னர் தற்போது உண்மைக்குப் புறம்பான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றார். இதனூடாக இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார்.
நல்லாட்சிக்கு எதிரான கருத்துகளைத் தெரிவித்து வருவதன் மூலம் மக்கள் மத்தியிலும் ஊடகங்களிலும் முன்னுரிமை பெற முயற்சி செய்கின்றார். தனது கோடிக்கணக்கான ஊழல் மோசடிகளை மறைப்பதற்கு முனைகின்றார்.
மீண்டும் நாட்டில் விடுதலைப் புலிகள் தலைதூக்குவதற்கான வசதிகளை அரசு செய்துகொடுத் துள்ளதாகவும், வடக்கில் 59 இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளமை இதனைக் குறித்து நிற்பதாகவும் அண்மையில் மாத்தறையில் இடம்பெற்ற மஹிந்த ஆதரவு கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கருத்தொன்றை முன்வைத்திருந்தார்.
இதன் மூலம் அவர் இந்த நாட்டில் தீவிரவாதத்தை ஒழித்த இராணுவத்தினரை அசௌகரியத்துக்கு உட்படுத்தி குறைத்து மதிப்பிட்டுள்ளார். தனது சுய இலாபத்துக்காக இவ்வாறான கருத்துகளை முன்வைத்துள்ளமை தொடர்பில் அவர் விளக்கம் வழங்கவேண்டும்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவாலோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவாலோ அல்லது இந்த அரசாலோ ஒரு இராணுவ முகாம்கூட வடக்கிலிருந்து அகற்றப்படவில்லை.
மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் தான் 59 முகாம்களும் அகற்றப்பட்டன. அதுமட்டுமன்றி, வடக்கில் இராணுவத்தினர் கைப்பற்றிய 11 ஆயிரம் ஏக்கர் காணியில் 5 ஆயிரம் ஏக்கர் காணியை விடுவித்ததும் மஹிந்தவின் ஆட்சிக் காலத்திலேயேயாகும்.
தற்போதைய அரசானது இராணுவத்தினரின் இணக்கப்பாட்டுடன் ஆயிரம் ஏக்கரை மாத்திரமே விடுவித்துள்ளது. 2014 நவம்பர் மாத்தில் சம்பூர் இராணுவ முகாமை அகற்றுவதற்கு மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்திருந்தார். அதனையே இன்றைய ஜனாதிபதி செய்தார்.
எமது ஆட்சிக் காலத்தல் 59 இராணுவ முகாம்கள் புதிய அரசால் அகற்றப்பட்டுள்ளதாயின் அதன் பெயர்கள் அடங்கிய விவரங்களை வெளியிடுமாறு நாம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சவால் விடுக்கின்றோம். இதற்கு முன்னரும் நாங்கள் பல சவால்களை அவருக்கு விடுத்துள்ளபோதிலும் அதற்கு அவர் பதிலளிக்கவில்லை – எனத் தெரிவித்தார். (உ–சி)

## வவுனியாவிலும்

இது தொடர்பில் அவ ர் மேலும் தெரிவித்ததாவது:
சில நாள்களுக்கு முன்னர் முல்லைத்தீவிலிருந்து கர்ப்பிணிப் பெண்ணொருவர் வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். அவர் வவுனியாவுக்கு மாற்றப்படும்போதே ஆபத்தான நிலையை எட்டியிருந்தார். நாம் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அவரைச் சேர்த்து சிகிச்சை அளித்தோம் 'இன்புளுவன்சா எச் 1 என்1' வைரஸ் தாக்கத்திற்கு அப்பெண் உள்ளாகியிருந்தார். நோய் தாக்கி 48 மணிநேரம் கடந்திருந்தமையால் எமது சிகிச்சைகள் பயனளிக்கவில்லை.
இந்த வைரஸ் கர்ப்பிணிப் பெண்களுக்கும் நீரிழிவு நோயாளிகளுக்கும் தாக்கும் ஆபத்து அதிகமுள்ளது. தொண்டை கரகரப்பு, முகம் சிவத்தல், நீர் போன்ற திரவம் மூக்கால் வடிதல், சுவாசிப்பதற்குச் சிரமப்படுதல் போன்றன இந்த நோயின் அறிகுறிகள்.
அறிகுறிகள் காணப்படும் பட்சத்திலும், ஏதேனும் சுகயீனம் ஏற்பட்டாலும் உடனடியாக அரச வைத்தியசாலையை நாடிச் சிகிச்சைபெறுவதே சிறந்தது.
சிகிச்சைபெறத் தவறும் பட்சத்தில் 24 மணிநேரத்தில் இதன் தாக்கம் அதிகரித்து சுவாசப் பகுதி சேதமடைவதுடன் 48 மணிநேரத்தின் பின்னர் ஆபத்தான நிலை ஏற்பட்டுவிடும்.
வவுனியாவிலும் இந்த வைரஸ் தாக்கத்துக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதனால் மக்கள் இந்த நோய்த் தாக்கம் தொடர்பில் மிக அவதானத்துடன் இருப்பது அவசியமானதாகும் – என்றார்.

## மைத்திரி – சோமா

என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.
சோமவன்ஸவை தனது பக்கம் வளைத்துப்போட்டால், ஜே.வி.பியின் எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிடும் என்பதால், இது விடயத்தை மைத்திரி மிகவும் அவதானமாகக் கையாண்டு வருகிறார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.
அதேவேளை, சோமவன்ஸ அமரசிங்கவை தனது ஆலோசகராக ஜனாதிபதி விரைவில் நியமிக்கக் கூடும் எனவும் கூறப்படுகிறது. எனினும், இதுபற்றி உறுதியான தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.
கட்சியிலிருந்து வெளியேறிய பின்னர், ஜே.வி.பியின் செயற்பாடுகளைப் பகிரங்கமாக விமர்சித்து வரும் சோமவன்ஸ அமரசிங்கவுடன் ஜனாதிபதி நெருங்கிய தொடர்பைப் பேணிவருவதால் ஜே.வி.பி. அதிருப்தியில் இருக்கிறது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ–சி)

## 600 பொலிஸா

ராயப்பு ஜோசப் கேள்வி எழுப்பியிருந்தார். இது தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் 2013 ஓகஸ்ட் மாதம் அமைக்கப்பட்டது. மக்ஸ்வெல் பரணகம தலைமையில் அமைக்கப்பட்ட மூவர் கொண்ட இந்தக் குழு அண்மையில் [illegible] கொண்ட குழுவாக விரிவாக்கப்பட்டது.
இதுவரையில் இந்தக் குழுவிற்கு 18,476 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் 5,000 முறைப்பாடுகள் காணாமற்போன படையினர் தொடர்பானது. தற்போது 1990ஆம் ஆண்டு அம்பாறையில் காணாமற்போன 600 பொலிஸார் தொடர்பில் ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பிக்க இருக்கிறது.
காணாமற்போன அல்லது விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர் என்று கூறப்படும் இந்தப் பொலிஸார் பின்னர் கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான அணியினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இது தொடர்பிலும் ஆணைக்குழு கவனம் செலுத்தவுள்ளது.
ஓய்வுபெற்ற பொலிஸ் சங்கத்தினர் இரண்டு ஆண்டுகளின் முன்னர் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றைக் கையளித்திருந்தனர். அதில் 1990ஆம் ஆண்டு அம்பாறையில் 600 பொலிஸார் காணாமற்போன சம்பவம் தொடர்பிலான விசாரணையை துரிதப்படுத்துமாறு வேண்டியிருந்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஏற்கனவே விசாரணை மேற்கொண்டது எனவும், அந்த விசாரணைக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் ஆராய்வதற்கும் மற்றும் சாவடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கு எவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டன என்பது தொடர்பில் அறிவதற்குமே, பொலிஸ் மா அதிபர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (உ–5)

## மைத்திரி அரசை

வாக்களித்தனர். புதிய அரசும் ஆயிரத்து நூறு ஏக்கருடன் கண் மூடிவிட்டது. விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில்கூட சரிக்கு அரைவாசி நிலப்பரப்பு தரிசு நிலமாகும். அத்துடன் மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் உடனடியாக மீளக்குடியமர முடியாத நிலையே இருக்கின்றது. அந்த மக்களுக்கான உதவிகள், ஆமை வேகத்தில்கூட வழங்கப்படவில்லை.
25 வருடங்களாக எமது மக்கள் பட்ட வேதனைகள் – துன்பங்களை இந்த அரசு விரைவில் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் கடந்த 4 வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. அதை உடனடியாக வழங்கப்படவேண்டும்.
இவற்றுக்கு மேலாக, எமது சொந்த மண் விடுவிக்கப்படவேண்டும். கடந்த ஆட்சியில் இருந்த அரசின் பல்வேறு தடைகளையும் மீறி மண்மீட்புக்கான – சொந்த மண் திரும்புவதற்கான – பல்வேறு போராட்டங்களை நாம் நடத்தினோம். புதிய அரசுக்கு எதிராகவும் அவற்றை நடத்தத் தயங்க மாட்டோம்.
தேர்தல்களைக் காரணம் காட்டி மக்களின் அவல – அகதி வாழ்வுடன் விளையாட வேண்டாம் என்பதை புதிய அரசுக்கு சொல்லி வைக்க விரும்புகின்றோம்.
இந்த ஆண்டிலாவது நாங்கள் எங்கள் சொந்த மண்ணுக்குத் திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். – இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ–5)

## பி.சி. படிவங்கள்

படவுள்ளன.
இந்த நடவடிக்கை அடுத்த மாதம் 15ஆம் திகதி வரையில் தொடரும். இந்தப் படிவங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னரே, புதிய வாக்காளர் பட்டியலில் புதிதாக இணைத்துக் கொள்ளப்படுவோர் மற்றும் நீக்கப்படுவோர் பெயர்ப் பட்டியல் காட்சிப்படுத்தப்படும்.
இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி, நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்படும். (உ–5)

## அரசியலுக்கு

"அரசியலில் ஈடுபடும் உத்தேசம் எதுவும் கிடையாது. பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய காலத்தில் நாட்டின் தேசியப் பாதுகாப்பை உச்சளவில் உறுதி செய்திருந்தேன்" என்றார் கோத்தபாய. போர் நிறைவடைந்த பின்னரான ஐந்து ஆண்டு காலப் பகுதியிலும் தேசியப் பாதுகாப்பைத் தான் உறுதிசெய்திருந்தார் எனவும் அவர் கூறினார்.
"தேசியப் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் தற்போது புலனாய்வுப் பிரிவினர் எனக்குத் தகவல்களை வழங்குவதில்லை. இவ்வாறான ஓர் நிலையில் நாட்டின் பாதுகாப்புக் குறித்து எதனையும் கூற முடியாது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றை கலைத்து தேர்தலை உடன் நடத்துக

## ஜனாதிபதியிடம் ஐ.தே.க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 15
கடந்த ஜனவரி 8ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட புரட்சியைப் பின்நோக்கிச் செல்ல விடாது உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துமாறு ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
மக்கள் எதிர்பார்க்கும் அரசை உருவாக்க இடமளிக்கும் வகையில் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டில் வேர் ஊன்றிய சர்வாதிகாரக் குடும்ப ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து ஜனநாயகத்தின் அடிப்படையிலான நல்லாட்சியை உருவாக்க வேண்டும் என்பதே நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களின் விருப்பாகும்.
நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் தனியானதொரு கட்சியாக நாட்டை நீண்ட காலம் ஆட்சி செய்து மக்களுக்குச் சார்பாக செயற்பட்ட கட்சி என்ற வகையில்,ஐக்கிய தேசியக் கட்சி கடந்த ஜனாதிபதி தேர்தலில் தந்திரோபாயமான முறையில் தேர் தல் வெற்றி ஒன்றைப் பெற்றுக்கொண்டது.
அந்தத் தேர்தலில் பொது வேட்பாளராக சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த மைத்திரி பால சிறிசேனவை களமிறக்கிய ஐக்கிய தேசியக் கட்சி இன, மத பேத மின்றி சிறுபான்மை மக்கள் உட்பட பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் ஆட்சி மாற்




றத்தை ஏற்படுத்தியது.
பெரும் ஆபத்துக்கு மத்தியிலும் மைத்திரிபால சிறிசேனவின் அர்ப்பணிப்பை மறக்க முடியாது.
கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியே அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டது.
தேர்தல் காலத்தில் சுவரொட்டிகள் முதல் துண்டு பிரசுரம் விநியோகித்தல் வரையில் இரவு பகல் பாராது ஐக்கிய தேசியக் கட்சியே அர்ப்பணிப்புடன் செயலாற்றியது.
அனைத்து அழுத்தங்களையும் வன்முறைகளையும் எதிர் கொண்டவாறே ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தல் நடவடிக்கை களில் விழிப்பாக செயற்பட்டனர் என்பதை எவருமே மறந்திருக்க வாய்ப்பில்லை.
அரச அதிகாரம் மற்றும் கடும் அடக்கு முறைச் சூழலில் காட்டுச் சட்டம் நடைமுறைப்படுத்தி மஹிந்த ராஜபக்ஷவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் முன்னெடுத்த கொடுமையான தேர்தல் அடாவடி நடவடிக்கைகளின் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்த அனைத்து தேர்தல் செயற்பாடு களின் விளைவாகவே புதிய நல்லாட்சி மலர்ந்துள்ளது – என்றுள்ளது. (த)

## சுற்றுலா நீதிமன்றம் துணுக்காயில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 15
முல்லைத்தீவு துணுக்காய்ப் பிரதேசத்தில் சுற்றுலா நீதிமன்றம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது. எதிர் வரும் ஜுலை 8 ஆம் திகதி தொடக்கம் இயங்கும் வகையில் இந்த நீதிமன்றை ஆரம்பிப்பதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், அதற்கான அனுமதியை நீதிச் சேவைகள் ஆணைக்குழு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த சுற்றுலா நீதிமன்றத்தினூடாக மாங்குளம் மற்றும் மல்லாவி ஆகிய இரு பொலிஸ் பிரிவுகளையும் சேர்ந்த மக்களுக்கான சேவைகள் மாதத்தில் இரு தடவைகள் புதன் கிழமைகளில் துணுக்காய் பிரதேச செயலகக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளன.
முல்லைத்தீவு நீதி மன்ற நீதி வானாகப் பணியாற்றும் எம். எஸ்.எம். சம்சுதீன் இந்தச் சுற்றுலா நீதிமன்றத்துக்கு மேலதிக நீதிவானாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
குறித்த இரு பொலிஸ் பிரிவு களையும் சேர்ந்த மக்கள் தமது வழக்கு விசாரணைகளுக்காக இது வரை காலமும் முல்லைத்தீவு நீதி மன்றத்திற்கே சென்று வருகின்றனர். அதனால் மக்களின் போக்குவரத்து உள்ளிட்ட அவர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைக் கருத்திற் கொண்டே துணுக்காய்ப் பிரதேசத்தில் சுற்றுலா நீதிமன்றம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு தற்காலிகக்கட்டடமொன்றில் இயங்கி வந்த இந்த நீதிமன்றம் ஒரு வருடத்துக்கும் மேலாக இயங்குவதில்லை. இந்த நிலையிலேயே அதனை மீள இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)


## பஸ் கட்டணங்களை உயர்த்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 15
பஸ் கட்டணங்களை ஜுலை முதல் அதிகரிக்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.
தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிடம் இந்த கோரிக்கையை தனியார் சங்கங்கள் முன்வைத்துள்ளன.
வருடாந்த பஸ் கட்டண திருத்தக் கொள்கைக்கு அமைவாக பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும்



என கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை தனியார் பஸ் சங்க உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார். (த)

## எம்.பிக்கள் அதிகரிப்பை எதிர்க்கிறது ஐ.தே.கட்சி



கொழும்பு,ஜூன் 15
மக்களின் விருப்பத்திற்கு மாறாக நாடாளுமன்ற உறுப்பினர்களை அதிகரிக்கும் சட்டவரைவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளது.
இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளரும், பிரதி அமைச்சருமான எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செயற்குழு கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.
தற்போது உள்ள 225 என்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 237ஆக அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
தொகுதி முறையில் 145பேரும், மாவட்ட ரீதியாக 55பேரும் ,தேசியப் பட்டியலின் ஊடாக 37பேருமாக மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.
தற்போது நிலவி வரும் பிரச்சி னைகளைத் தொடர்ந்து நாடாளும றத்தைக் கலைக்க ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்ட தில் முடிவு எட்டப்பட்டது.
இந்த நிலையில் நாடாளும ன்ற உறுப்பினர்களின் எண்ணி கை அதிகரிப்பானது மக்களின் நப் பத்துக்கு மாறாகவே காணப் ன் றது என ஐக்கிய தேசியக் சி சுட்டிக்காட்டியுள்ளது. (த)

## பள்ளிவாசல் மீது தாக்குதல்; இருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூன் 15
பொரளை பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த மே மாதம் 30 ஆம் திகதி பொரளை ஜும்மா பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.
குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பு பட்ட குற்றச்சாட்டில் நாரஹேன்பிட்டியில் வைத்து இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
இவர்களில் ஒருவர் பொரளைப் பகுதியை சேர்ந்தவர் எனவும் மற்றையவர் நாவல பகுதியை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதாக ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த)



## வவுனியாவில் இரண்டு சடலங்கள் மீட்பு

வவுனியா, ஜூன் 15
வவுனியா மகாகச்சக்கொடி கிராமம் மற்றும் ஈரப்பெரியகுளம் பகுதிகளிலிருந்து ஆண் ஒருவரதும் இளம்பெண் ஒருவரதும் சடலங்கள் மீட்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா மகாகச்சக்கொடி கிராமத்திலுள்ள வீடொன்றின் கிணற்றில் இருந்து அப்பகுதியைச் சேர்ந்த இசுரிகா செவ்வந்தி என்ற 20 வயதுடைய குடும்பப் பெண்ணின் சடலத்தை மீட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
இதேவேளை, வவுனியா ஈரப் பெரிய குளம் பகுதியைச் சேர்ந்த ரயில் கடவைப் பாதுகாப்பு ஊழியராகக் கடமையாற்றும் மனோஜ் பியந்த கேவகே என்ற 47 வயதுடைய நபர் சடலமாக மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இவை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் கூறினர். (த)

## சு.கவினால் தனியாக அரசமைக்க முடியாது

### அமைச்சர் ராஜித கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 15
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகளினால் மாத்திரம் வெற்றி பெற்று அரசை அமைக்க முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
தேர்தல் வெற்றிக்குச் சிறுபான்மையினர், இளைஞர் களின் வாக்குகள், புத்தி ஜீவிகள் மற்றும் கல்வியியலாளர்களின் வாக்கு கள் என பலதரப்பட்ட நிலையில் வாக்குகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.
எதிர்வரும் பொதுத் தேர்தலில் கட்சியை வெற்றி பெறச் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை



மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.
இதேவேளை சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் தெரி வித்தார். (த)

## இராமலிங்க வித்தியாலயத்தி உயர்தர வகுப்புக்கு அனும

அச்சுவேலி, ஜூன் 15
ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம் ஜுலை முதலாம் திகதி தொடக்கம் 1 சி தரப்பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஜி.சி.ஈ உயர்தரம் கலைப் பிரிவு வகுப்புக்களை நடத்துவதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
பாடசாலை தரம் உயர்த்தப்பட்டிருப்பது தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
மாகாணக் கல்வித் திணைக்கள கட்டமைப்புக்குழுவின்பரிந்துரை மற்றும் கடந்த மே மாதம் 7 ஆம் திகதி குறிப்பிட்ட பாடசாலை சமூகத்துடன் ஜீ.சி.ஈ. உயர்தரப்பி
ஆரம்பிப்பது தொடர்பாக
பெற்ற கலந்துரையாடலின்
னம் என்பனவற்றுக்கு அமை
ஜீ.சி.ஈ உயர்தரம் கலைப்
வகுப்புக்களை மேற்படி
சாலையில் ஆரம்பிப்பதற்கு
தப் பாடசாலை யின் கட்டமை
113(1சி) என வகைப்படுத்துவ
அனுமதி வழங்கப்படுகின்றது
தெரி விக்கப்பட்டுள்ளது.
1952ஆம் ஆண்டு ஆரம்ப வ
களைக் கொண்ட பாடசாலை
சமூகத்தின் ஒன்று பட்ட கரு
றுமையுடன் ஆரம்பமான
சாலை குறிப்பிட்ட கால
வெளியில் 1சி தரப்பாடசாலை
தரம் உயர்வு பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண ஹொக்கித் தொடர்

## சென்.ஜோன்ஸ், யாழ்ப்பாணக் கல்லூரி அசத்தல்




சென்.ஜோன்ஸ் கல்லூரி




யாழ்ப்பாணக் கல்லூரி

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட 19 வயதுப் பிரிவு இருபாலருக்குமான ஹொக்கி தொடரில் ஆண்கள் பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் வெற்றிபெற்று சம்பியன் ஆகின.

*சென்.ஜோன்ஸ் எதிர் யூனியன்*

நேற்று முன்தினம் சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது. ஆட்டம் ஆரம்பமாகி நான்காவது நிமிடத்திலேயே சென்.ஜோன்ஸின் ஆதிக்கத்தை ஆரம்பித்து வைத்தார் மதுரங்கன். அதே விறுவிறுப்புடன் தொடர்ந்து இரண்டாவது கோலுக்காக முனைப்புக்காட்டியது சென். ஜோன்ஸ். முயற்சிக்குக் கிடைத்த பலனாக ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் சென்.ஜோன்ஸ் சார்பாக இரண்டாவது கோல் பதிவானது. பழிதீர்க்க வேண்டும் என்று யூனியன் படாதபாடுபட்ட போதிலும் எதுவும் பயனளிக்க வில்லை. மாறாக சென்.ஜோன்ஸ் சார்பாகவே கோல் கணக்கு அதிகரித்தது. 20ஆவது நிமிடத்தில் எழிலன் தனது அணிக்கான 3ஆவது கோலினையும் அடிக்க ஆட்டத்தின் முதல்பாதியில் சென்.ஜோன்ஸ் 3:0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

கிட்டத்தட்ட உறுதியான வெற்றியுடன் சென்.ஜோன்ஸும் போராட்டத்தை விடுவதில்லை என யூனியனும் களமிறங்க ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாவது பாதி. இரண்டாவது பாதியில் யூனியனுக்குச் சாதகமாக சில வாய்ப்புக்கள் அமைந்த போதிலும் தமது கோல் கணக்கை தொடக்க தடுமாற்றம் காட்டினார்கள் யூனியன் வீரர்கள். எழிலன் மீண்டும் ஒரு கோலை விளாச சென்.ஜோன்ஸின் நான்காவது கோலும் பதிவானது. இதே நிலைமை நீடிக்க முடிவில் சென். ஜோன்ஸ் 4:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது.

*பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி*

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது. ஆட்டத்தின் முதல் பாதி அனல் பறந்தது. பந்து அங்கும் இங்குமாக அல்லோல கல்லோல பட்டதுதான் மிச்சம் எந்த அணியாலும் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படவில்லை. ஆட்டத்தின் இரண்டாவது பாதியிலும் முதல் பாதியின் போராட்ட குணம் இரண்டு அணிகளிலும் காணப்பட்டது என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்கு இருந்தாலும் முதல்கோலை பதிவுசெய்ய சற்று தீவிர முனைப்புக்காட்டியது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி. இதன் பயனாக ஆட்டத்தின் 15 ஆவது நிமிடதில் முன்கள வீராங்கனை வான்சலின் தனது அணிக்கான முதலாவது கோலினை அடிக்க ஆட்டநேரமுடிவில் யாழ்ப்பாணக்கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் மல்லாகம் குளமங்கால் தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து ஸ்ரான்லி கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் மல்லாகம் குளமங்கால் தமிழ் கலவன் பாடசாலைஅணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது. (ம-23)

## திரில் வெற்றியுடன் அடுத்த சுற்றுக்குள் காந்திஜீ

கரணவாய், ஜூன் 14

எந்த அணி வெற்றிபெறும் என்று கணிக்க முடியாத அளவிற்கு பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் காந்திஜி அணியின் சாந்தகுமார் எதிரணியின் மூன்று வீரர்களை சாமர்த்தியமாக ஏமாற்றி பெற்ற கோல்மூலம் திரிலாக வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது ஊர்காவற்றுறை காந்திஜீ விளையாட்டுக் கழகம்.



கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் ஊர்காவற்றுறை காந்திஜி விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. முதல் 20 நிமிடங்களும் எவர்முதலில் கோல்போடுவார்கள் என்ற பதட்டநிலைமை விளையாட்டு வீரர்களிடம் மட்டுமன்றி பார்வையாளர்களிடமும் தொற்றிக் கொண்டது. அந்தளவுக்கு பலமாக இருந்தது இரு அணியினதும் பின்வரிசை. ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் மைதானத்தின் மத்திய பகுதியில் இருந்து கிடைத்த பந்தொன்றை தனது கால்களுக்குள் வாங்கிக் கொண்ட காந்திஜி அணியின் வீரர் சாந்தகுமார் எதிரணியின் தடுப்புச் சுவர்கள் மூன்றையும் தகர்த்து அருமையான கோல் ஒன்றைப் போட்டார். அந்தக் கோலே ஆட்டத்தின் முதலாவதும் இறுதியானதுமான கோலாக அமைந்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியின் முதல் இருபது நிமிடங்களும் முதல் பாதியைப்போலவே நடைபெற்றது. 24 ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணிக்கு கோல் போடுவதற்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்த போதும் அவ்வணியின் முன்கள வீரர் அதனைக் கோட்டை விட்டார். முடிவில் காந்திஜீஅணி 1:0என்றஅடிப்படையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-108)

## புவனேஸ்வரியை வீழ்த்தியது சரஸ்வதி

யாழ்ப்பாணம்,ஜூன் 14

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின் ஒளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறி வொளி விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை புவவேனஸ்வரி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி 10:9என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## கொலின்ஸ், சென்.தோமஸ் அடுத்த சுற்றுக்குள்

கரணவாய், ஜூன் 14

தொண்டமனாறு கலைவாணி உதைபந்தாட்டத் தொடரில் கொலின்ஸ் விளையாட்டுக கழகம் மற்றும் சென். தோமஸ் விளையாட் டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் தொண்டமனாறு ஒற் றுமை விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் பெரும்பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் கோகுலன், தீபன், நிசாளன் மற்றும் பிரவீன்குமார் ஆகியோரின் உதவியால் 4:2 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று அடுத்தசுற்றுக்கு முன்னேறியது.



[illegible] அவ்வாட்டத்தில் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகமும் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் சென். தோமஸ் விளையாட்டுக்கழகம் 3:1 கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-108)

## இன்றைய மோதல்கள்

*யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்*

யாழ்ப்பாணம், ஜூன், 15

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்களில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

*13வயதுப்பிரிவு ஆண்கள்.*

13வயதுப்பிரிவின் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி பிற்பகல் 3மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் மோத வுள்ளது.

*13வயதுப்பிரிவு பெண்கள்*

13வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் கல்லூரி அணியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர்மட அணி பிற்பகல் 3 மணிக்கு திருக்குடும்ப கன்னியர் மட கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது.

*17வயதுப்பிரிவு பெண்கள்*

17வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் கல்லூரி அணியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர்மட அணி பிற்பகல் 4.15 மணிக்கு திருக்குடும்ப கன்னியர் மட கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது.

*யாழ்.மாவட்ட தாச்சித் தொடர்*

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின் ஒளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 6.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணி மோதவுள்ளது.

இரவு, 7.15மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் உதயசூரியன் அணியை எதிர்த்து தாவடிகாளி அம்பாள் அணி மோதவுள்ளது. (ம-23)

*கொலின்ஸ் வி.க.தொடர்*

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரில் இன்று பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

*கலைவாணி வி.க.தொடர்*

தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானில் தொடர்ச்சியாக தொடர்கள் நடைபெறும் -ஷகாரியார் கான்

பாகிஸ்தானில் நடைபெற்ற பாகிஸ்தான் – சிம்பாப்வே தொடரை வெற்றிகரமாக நடத்தி முடித்ததால் பாகிஸ்தானில் வந்து மேலும் பல சர்வதேச அணிகள் விளையாடும் என்ற நம்பிக்கை உள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரான –காரியார் கான் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிக் கொண்டிருந்தது. அப்போது இலங்கை வீரர்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அதன்பிறகு எந்த அணியும் பாகிஸ்தான் சென்று விளையாட விரும்பவில்லை. –காரியார் கானின் தீவிர முயற்சியால் சிம்பாப்வே அணி கடந்த மாதம் பாகிஸ்தான் சென்று விளையாடியது. வரலாறு காணாத பாதுகாப்பிற்கிடையே இந்தத் தொடரை பாகிஸ்தான் சிறப்பாக நடத்திக் காட்டியது.

இந்த நிலையில் பாகிஸ்தானில் மற்றைய அணிகள் சுற்றுப்பயணம் செய்வது தொடர்பாக –காரியார் கான் தெரிவித்ததாவது சிம்பாப்வே வீரர்களுக்குப் பாகிஸ்தான் கொடுத்த பாதுகாப்பு நடவடிக்கையைப் பார்த்து கிரிக்கெட் உலகமே அதிர்ச்சியில் உள்ளது.மட்டுமல்லாது பாகிஸ்தான் மீது நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது. இதனால் மிக விரைவில் வேறு நாடுகளும் பாகிஸ்தானுடன் கிரிக்கெட் உறவை மீண்டும் புதுப்பித்துக்கொள்ள முன்வரும் என்ற நம்பிக்கை நிறையவே உள்ளது. பாகிஸ்தானில் ஏனைய நாடுகளும் வந்து கிரிக்கெட் தொடரை நடத்தும் பட்சத்தில் பாகிஸ்தானின் கிரிக்கெட் அழிவில் இருந்து மீண்டு மீண்டும் பாதுகாப்பான நிலைக்குச் செல்லும்– என்றார். (ம)

# தோல்வியின் விளிம்பில் தீவுகள்



ஆஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் மூன்றாம்நாள் முடிவில் 392 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய தீவுகள் 16–2 என்று தடுமாற்றமான நிலைமையில் உள்ளன.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகளின் தலைவர் முதலில் களத்தடுப்பைத்தீர்மானிக்க முதல் இன்னிங்ஸிற்காக ஆஸ்திரேலியா 399 ஓட்டங்களைப் பெற்றது.

400 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம்என்றநிலைப் பாட்டில் களமிறங்கிய தீவுகள் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 143–8. மூன்றாவது நாளுக்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாட ஹோல்டர் 13 ஓட்டங்களுடனும் றோச் ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலையிலும் களமிறங்கினார்கள். பெரும்பாலும் பொலோ ஒன் செய்யும் நிலைப்பாடே தீவுகளுக்கு நேரும் என்ற பரவலான எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் ஆட்டம் ஆரம்பமானது. றோச்சை நிலைத்து நிற்குமாறு பணித்து மறுமுனையில் அதிரடியை ஆரம்பித்தார் ஹோல்டர். ஆஸியின் பந்துவீச்சாளர்களை ஒருவர் பின்னர் ஒருவராக புரட்டியெடுத்தார். தீவுகளின் ஓட்ட எண்ணிக்கை கிடுகிடுவென அதிகரித்துக் கொண்டு சென்றது. கிடைத்த சில பந்துகளிலும் அவசரப்படாமல் நிதானித்து ஹோல்டருக்கு பக்கபலமாக நின்றார் றோச். சிக்சருடன் அரைச்சதத்தை நிறைவு செய்தார் ஹோல்டர். பொலோ ஒன் நிலைமையில் இருந்து தீவுகளை மீட்டுவிடக்கூடிய சந்தர்ப்பங்களும் இல்லாமல் இல்லை. ஒன்பதாவது இலக்குக்காக 73 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்திருந்த வேளையில் றோச்சின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அதே பந்துப்பரிமாற்றத்தில் ஹோல்டரும் பவிலியனுக்கு திரும்ப தீவுகள் 220.

179 ஓட்டங்கள் முன்னிலையுடன் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கியது ஆஸி. களத்தில் வோர்ணருடன் மார்ஷ். ஏற்கனவே பலம்பெற்றிருந்த ஆஸியை மேலும் பலம்பெறச் செய்தது ஆரம்ப இணை. பதட்டமில்லாத இன்னிங்ஸை இருவரும் வெளிப்படுத்தினர். ஆளுக்கொரு அரைச் சதத்தையும் பதிவுசெய்ய இணைப்பாட்டம் நூறு ஓட்டங்களை எட்டியது. ஆஸியின் ஓட்ட எண்ணிக்கை 117ஆக இருந்த வேளையில் முதல் இலக்காக வோர்ணர் பவிலியன் திரும்பினார். இடத்தை நிரப்பினார் சதநாயகன் சிமித். ஒவ்வொரு இன்னிங்ஸிலும் நம்பிக்கை தரும் சிமித் இந்த இன்னிங்ஸிலும் அரைச் சதத்தை பதிவுசெய்யத் தவறவில்லை. 212–2 என்ற நிலையில் ஆஸ்திரேலியா இருந்த வேளையில் இன்னிங்ஸை இடைநிறுத்தி னார் கிளார்க். வெற்றியிலக்காக 392 ஓட்டங்களைக் கொண்டு களமிறங்கிய தீவுகளுக்கு அதன் ஆரம்ப வீரர்கள் இருவருமே டக்கில் வெளியேறி அதிர்ச்சிமேல் அதிர்ச்சி கொடுத்தனர். நேற்றைய ஆட்டநேர முடிவில் 16–2 என்றுள்ளது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஸ்ராக் இரண்டு இலக்குகளை வீழ்த்தினார். (ம)

## இந்திய கிரிக்கெட்டுக்குள் பனிப்போர்


ரவி சாஸ்திரி

இந்திய அணிக்கு முழுநேர பயிற்சியாளர் பொறுப்பை ஏற்க அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி சில நிபந்தனைகளை விதித்துள்ளது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பயிற்யாளர் பொறுப்பில் தனக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்றும், சச்சின், கங்குலி, லக்ஸ்மன் உள்ளிட்ட ஆலோசனைக்குழு எந்த விதத்திலும் தனது பணியிலும், கொள்கை முடிவிலும் தலையிடக் கூடாது என்றும் குறிப்பாக கொள்கை முடிவில் கங்குலி தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் ரவி சாஸ்திரி நிபந்தனைகளை விதித்துள்ளார்.


சாஸ்திரியின் நிபந்தனைப்படி செயற்பட இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அனுமதித்தால் சச்சின், கங்குலி, லக்ஸ்மன் உள்ளிட்ட நிபந்தனைக்குழு அதிகாரமற்ற பெயரளவு அதிகாரமுடைய குழுவாகப் போய்விடும். அதே நேரம் சாஸ்திரியின் நிபந்தனைப்படி செயற்பட இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மறுத்தால் ரவி சாஸ்திரி பயிற்சியாளர் பதவியை ஏற்கமாட்டார். இதனால் இந்தப் பயிற்சியாளர் பிரச்சனையை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எவ்வாறு கையாளப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். (ம)

### இந்தியா பங்களாதேஷ் ஆட்டம் சமநிலையில்

## மழைக்கு மட்டுமே வெற்றி


இந்தியா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவதும் இறுதியானதுமான ஒரே டெஸ்ட் ஆட்டம் தற்பொழுது பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

ஆட்டத்தின் முதல் நான்கு நாட்களும் பெருமளவான நேரத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த மழை நேற்றும் தனது வேலையை காட்டத்தவறவில்லை. 462–6 என்ற நிலையில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்த ஆட்டத்தின் நான்காம் நாள் முடிவில் பங்கர்தேஷ் 111–3 என்ற நிலையில் இருந்தது. ஐந்தாவது நாளின் மதிய இடைவேளைவரை மழை நீடிக்க பிற்பகல் 1 மணியளவிலேயே ஆட்டம் ஆரம்பமானது. கையிஸ் 59 ஓட்டங்களுடனும் சகிப் அல் ஹசன் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கினர். அஸ்வினின்சுழல்நன்கு எடுபட ஆட்டம் கண்டது பங்களாதேஷின் துடுப்பாட்ட வரிசை. ஒன்பதே ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் ஷகிப் அல் ஹசன். அரைச்சதம் நடந்து பங்களாதேஷின் ஒரே நம்பிக்கையாக விருந்த கையிஸ் ஹர்பஜனின் சுழலில் சிக்க பங்களாதேஷ்172–5. ஆரோனின் பந்தில் போல்ட்டானார் சர்கர். பின் வரிசை வீரர்கள் எவரும் நிலைப்பதாக இல்லை. பதின்ம ஓட்டங்களுடன் சீரான இடைவெளியில் ஒருவர் பின்னர் ஒருவராக பவிலியன் திரும்ப பங்களாதேஷ் 256 ஓட்டங்களில் சுருண்டு இரண்டாவது இன்னிங் ஸிற்காக தொடர்ந்தும் துடுப் பெடுத்தாட வேடிய (பொலோ ஒன்) கட்டாயநிலைமைக்கு தள்ளப்பட்டது.


கோஹ்லி, இகபால்

ஆட்டமுடிவதுக்கு 15 பந்துப்பரிமாற்றங்களே மீதமிருந்தன. எந்த அணியையும் 15 பந்துப்பரிமாற்றத்துக்குள் அவ்வளவு எளிதில் வீழ்த்திவிட முடியாது. இருப்பினும் ஏதோ ஒரு நம்பிக்கையில் இந்திய பந்துவீச்சாளர்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். இருந்த போதிலும் இக்பாலும் கையிஸிம் இரண்டாவது இன்னிங்ஸில் நங்கூரம் போட்டு நிலைத்து நின்றார்கள் 15 பந்துப்பரிமாற்றம் ஓடி மறைந்தது இலக்குகள் இழப்பில்லாமல் பங்களாதேஷ் 23–0. ஆட்டம் சமநிலையானது. மழை யால் ஆட்டம் தடைப்படாமல் இருந் திருந்தால் முடிவு இந்தியாவுக்குச் சாதகமாக அமைந்திருக்கலாம். (ம)

## அன்டர்சனுக்கு கௌரவிப்பு


அன்டர்சன்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இங்கிலாந்தின் மகாராணி எலிசபெத்தின் பிறந்த தினத்தில் அண்டர்சன் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தின் மகாராணி எலிசபெத்தின் பிறந்த தினத்தன்று ஒவ்வொரு துறையிலும் சாதனை படைத்தவர்கள் கௌரவிக்கப்படுவது வழக்கம். இந்த வகையில் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்ட மகாராணியின் பிறந்த தினத்தில் கிரிக்கெட்டில் சாதித்தவராக அன்டர்சன் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற இங்கிலாந்து நியூஸிலாந்து டெஸ்ட் தொடரில் தனது நானூறாவது இலக்கை வீழ்த்தி இந்த மைல்கல்லை எட்டிய முதல் இங்கிலாந்து வீரர் என்ற பெருமையையும் தட்டிச் சென்றார். அதுமட்டுமல்லாது கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் அதிக இலக்குகளை வீழ்த்திய இங்கிலாந்தின் இயான் போத்தம் சாதனையை முறியடித்தார். இதனையடுத்தே அண்டர்சனுக்கு இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. (ம)

## விரைவில் இரட்டைச்சதம் விளாசுவேன்

விரைவில் இரட்டைச்சதம் அடிப்பதே எனது இலக்கு. இவ்வாறு தெரிவித்தார் இந்திய டெஸ்ட் அணியின் ஆரம்ப வீரர் முரளி விஜய்.

தனது பெறுபேறு தொடர்பாக முரளி விஜய் தெரிவித்ததாவது நான் தற்பொழுது நன்றாகவே துடுப்பெடுத்தாடுகிறேன். ஆனால் 150 ஓட்டங்களைத் தாண்டி என்னால் செல்ல முடியவில்லை. டெஸ்ட் ஆட்டத்தில் இரட்டைச்சதம் அடிப்பதே எனது கனவு. மிக விரைவில் எனது முதலாவது இரட்டைச் சதத்தைப் பதிவு செய்வேன். தவானுடன் ஆரம்ப வீரராக களமிறங்குவதனால் எனது பதட்டங்கள் மிகையான அளவுக்கு குறைகின்றது. ஏனெனில் அவர் அடித்தாடுகிறார். ... உதவிபுரிகிறது என்றார். (ம)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரையிறுதியில் ரத்வன்ஸ்கா

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஏகான் கிண்ணத்துக்கான ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் காலிறுதியாட்டம் ஒன்றில் போலந்து நாட்டின் முன்னணி வீராங்கனையான அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா தகுதி பெற்றுள்ளார்.

காலிறுதியில் அமெரிக்க வீராங்கனை லாரன் டேவிசுடன் நேற்று முன்தினம் மோதிய ரத்வன்ஸ்கா 6–2, 6–2 என்ற நேர் செற்களில் மிக எளிதாக வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். (ம)



ரத்வன்ஸ்கா



# டோனி, கோஹ்லி இருவரினதும் இலக்கு ஒன்றுதான்

டோனி, கோஹ்லி வெவ்வேறு குணாதிசயங்கள் கொண்டவர்களாக இருந்தாலும், அவர்களின் இலக்கு ஒன்றுதான் என்று மேற்கிந்திய தீவுகளின் தலைவரான டேரன் சமி தெரிவித்துள்ளார்.


டோனி, கோஹ்லி தொடர்பாக டேரன் சமி மேலும் தெரிவித்ததாவது விராட் கோஹ்லியின் விளையாட்டு திறமை அனைவருக்கும் தெரியும். அவர் அணித்தலைவர் பதவியில் ஜொலிக்க விரும்புகிறார். டோனியும், கோஹ்லியும் வெவ்வேறு குணாதிசயங்கள் கொண்டவர்கள். ஆனால் அவர்களின் இலக்கு ஒன்று தான். கோஹ்லி பெங்களூர் அணியில் செயல்பட்டது போன்று இந்திய அணியில் செயல்பட்டால் நல்ல பலன் கிடைக்கும் என்றார். (ம)

# ரபேல் நடால் அசத்தல்

ஜெர்மனியின் ரென்னிஸ் ஒற்றையர் காலிறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் ரபேல் நடால் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

காலிறுதியில் ஆஸ்திரேலியாவின் டாமிக்கை எதிர்கொண்டார் ரபேல் நடால். முதல் செற்றை கைப்பற்றிய அதே நேரம் இரண்டாவது செற்றை பறிகொடுத்து ஆரம்பத்தில் சற்றுத் தடுமாறினார். இருந்த போதிலும் மீண்டும் எழுச்சி பெற்று மூன்றாவது செற்றை கைப்பற்றி சற்று போராடி இந்த வெற்றி யைப் பதிவு செய்தார். அதாவது 64, 67, 63 என்ற செட் கணக்கில் நடால் ஆஸ்திரேலியாவின் டாமிக்கை வீழ்த்தினார்.

அரையிறுதியில் பிரான்சின் மான்பில்ஸ் – ரபேல் நடால் பலப் பரீட்சை செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தொடரை கைப்பற்றினால் தொடர்ச்சியாக சரிவுகளை சந்தித்து தரவரிசையில் பின்தங்கியுள்ள நடால் மீண்டும் ஓரிரு இடங்கள் முன்னேற முடியும். (ம)



ரபேல் நடால்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
20.06.2015
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
20.06.2015 சனிக்கிழமை மாலை 03.00மணி
20.06.2015 சனிக்கிழமை மாலை 03.00 மணி
DVD
SAAMSON
021 320 3313
077 621 4567

விற்பனையாகிறது !
மாணவர்களுக்கான இரண்டாம் தவணை பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்
தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5
தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் ஆகிய பாடங்கள், விடையுடன்
யாழ் எக்ஸ்பிரஸ்
நாடளாவியரீதியில் முன்னணி 12 ஆசிரியர்களின் ஆக்கத்தில்
வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
தொ.பே : 077 6258778
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

# சங்கா ஓய்வு

இலங்கையின் முன்னணி நட்சத்திர வீரர் சங்க்கார நடப்பு வருடத்தில் நடைபெறவுள்ள இந்தியாவுக் கெதிரான டெஸ்ட் தொடருடன் டெஸ்ட் ஆட்டங்களிலிருந்தும் ஓய்வு பெறப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வருடம் இலங்கை 5 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்பதுக்காக இந்தியா சென்றிருந்தது. இதனால் இந்தியா எதிர் இலங்கை அணி களுக்கிடையில் இந் தியாவில் நடை பெறவேண்டிய டெஸ்ட் தொடர் இலங்கையில் நடைபெறுகிறது. இதற் காக இந்தியா இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இலங்கை வருகிறது. இந்த நிலையில் குறித்த தொடரின் முதல் டெஸ்ட் ஆட்டத்துடன் சங்கா ஓய்வு பெறப்போவதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

சங்கா விடைபெறும் முடிவில் உறுதியாக இருந்தால் அவரை சிறந்த முறையில் வழியனுப்பி வைக்க இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தயாராக உள்ளது. இதன் ஒரு கட்டமாக சங்கா விடை பெறும் டெஸ்ட் ஆட்டம் அவரது சொந்த நகரில் நடைபெறலாம் போலவும் தெரிகிறது. இருப்பி னும் இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பு நாளையதினமே வெளிவரும். (ம)



சங்கக்கார

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org